பொருளியல் நோக்கு
நவம்பர் 1993
மக்கள் வங்கி வெளியீடு

# விலங்கு வதையை தடுத்து நிறுத்துதல்

## காருண்ணியத்துடன் கூடிய மனித விலங்கு உறவுகளை கட்டியெழுப்புதல்

ஹென்றி ஸ்பைரா    ஏர்ல் டி சில்வா

## ஏற்றுமதி பதப்படுத்தல் வலயங்கள் குறைநிறைகள் குறித்த ஒரு மதிப்பீடு

வின்ரிச் நிவ்மான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னோட்டம்

சிறு பிள்ளைகள், வயது முதிர்ந்தோர், உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் ஊனமுற்றவர்கள் போன்ற மிகவும் எளிதில் ஊறுபடத்தக்க நிலையில் இருந்துவரும் அதன் உறுப்பினர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஒவ்வொரு சமூகத்துக்கும் சிறப்புச் சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் அவசியமாகும். ஆனால் இதற்கு சட்டவிதிகள் மட்டும் போதுமானவையல்ல. இந்த நலிந்த பிரிவுகளைச் சேர்ந்தவர்களின் உரிமைகள் குறித்தும், அந்த உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டிய தேவை குறித்தும் பொதுமக்களிடையே விழிப்புணர் வினைத் தூண்டுவதற்காக ஒரு முயற்சியும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

பிராணிகளின் நல உரிமைகளை உறுதி செய்வதற்கான முயற்சிகளும் இவற்றுடன் இணைந்தவகையில் முன்னெடுத்துச் செல்லப்படுதல் வேண்டும். எமது மக்களில் (இன, மத, பேதம் எதுவுமின்றி) பெரும்பாலானவர்கள், பிராணிகளுக்கு இழைக்கப்பட்டுவரும் கொடுமைகளைத் தடுத்து நிறுத்துவதற்கே விரும்புவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இத்தகைய கொடுமைகளைத் தடுத்து நிறுத்துவது தொடர்பான சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் இன்றைய தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் சீராக்கிக் கொள்ளவேண்டிய அவசியத்தை விலங்கு நலன் பேணும் பல்வேறு குழுவினரும் இந்த விடயத்தில் அக்கறை காட்டிவரும் தனிநபர்களும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளனர். நாட்டிலுள்ள ஆடு, மாடு வெட்டும் கூடங்களின் மிக மோசமான நிலைமைகளை விருத்திசெய்வதற்கான அவசரத் தேவை இதில் முதல் முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. ஆடு, மாடு வெட்டும் கூடங்களில் காருண்யம் மிக்க வெட்டும் முறைகளை (இது பொருளாதார ரீதியாகவும் செயல் தாக்கம் கொண்டதாக இருந்து வருகின்றது) அறிமுகப்படுத்துவதற் கூடாகவே மாற்றங்களை நாங்கள் எடுத்துவர வேண்டியுள்ளது. சமீப காலத்தில் பெரும் எண்ணிக்கையிலான காட்டு யானைகள் வேண்டுமென்றே கொன்று குவிக்கப்பட்டமை வனவிலங்குகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக உடனடியாக ஒழுங்குவிதிகளை செயற்படுத்த வேண்டியதனை மட்டுமன்றி, எமது அபிவிருத்தி முயற்சிகள் பிராணிகளின் இருப்புக்கு அச்சுறுத்தலாக இருந்துவரக்கூடாது என்பதனை உத்தரவாதப்படுத்துவதற்கும் இந்த ஒழுங்குவிதிகளை மிகவும் கண்டிப்பான முறையில் பின்பற்றிவர வேண்டிய தேவையை எடுத்துக் காட்டியுள்ளது.

வனவிலங்குகளையும் வீட்டு விலங்குகளையும் பாதுகாத்துக் கொள்வதற்கான முயற்சிகளில், விழிப்புணர்வுடன் கூடிய பொதுமக்கள் வகித்துவர வேண்டிய பங்கினை இங்கு அதிகளவுக்கு வலியுறுத்திக்கூற வேண்டிய அவசியமில்லை. இங்கு சிறந்த உதாரணமொன்றினை எடுத்துக்காட்ட முடியும். ஐக்கிய அமெரிக்க விலங்குரிமை ஆர்வலர்கள் பொதுமக்களின் விழிப்புணர்வைத்தூண்டுவதற்கான இயக்கங்களுக்கூடாகவும், அமைதியான எதிர்ப்பு முயற்சிகளுக்கூடாகவும் கொலைக் கூடங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் விலங்குகளுக்கு சிகிச்சை அளிப்பது தொடர்பாக கண்டுவந்துள்ள வெற்றி இங்கு முக்கியமாக சுட்டிக் காட்டப்பட வேண்டும். தனியாருக்குச் சொந்தமான இறைச்சிக் கைத்தொழில் வட்டாரங்கள் தற்போதைய நிலைமைகளை விருத்தி செய்து கொள்ள வேண்டுமென்ற வகையிலும், வெட்டப்படும் விலங்குகளுக்கு அதிகளவு பாதுகாப்பினை வழங்கவேண்டுமென்ற வகையிலும் இந்தக் குழுக்கள் போராட்டம் நடத்தி, நிர்ப்பந்தங்களை எடுத்து வருவதில் வெற்றி கண்டுள்ளன. வெட்டப்படும் விலங்குகளுக்கு இழைக்கப்பட்டுவரும் கொடுமைகள் குறித்து பொதுமக்களுக்கு விரிவாக எடுத்துக் கூறப்பட்டதனையடுத்து, மக்கள் மத்தியிலிருந்து ஒரு கூக்குரல் எழுந்தது. இதன் விளைவாக, ஐக்கிய அமெரிக்க இறைச்சிக் கைத்தொழில் அதன் சில நடைமுறைகள் குறித்து ஒரு மீள்சிந்தனையை மேற்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது.

இந்தப்படிப்பினைகள் இலங்கைக்கும் பொருத்தமானவையாகும். ஒழுங்குவிதிகள் அவசியமாக இருந்து வந்தபோதிலும் அந்த ஒழுங்குவிதிகளின் பிரயோகம், பெருமளவுக்கு இந்தவிடயம் தொடர்பாக பொதுமக்கள் பெற்றிருக்கும் விழிப்புணர்வின் அளவிலும் பொதுமக்களின் ஈடுபாட்டிலும், அவர்கள் எடுத்துவரக்கூடிய நிர்ப்பந்தத்திலுமே தங்கியுள்ளது. காட்டு விலங்குகளுக்கும் வீட்டு விலங்குகளுக்கும் இழைக்கப்பட்டுவரும் கொடுமைகளை தடுத்து நிறுத்துவதற்கான போராட்டம் முன்னோக்கிச் செல்ல வேண்டுமானால் நாங்கள் சில சமரசங்களைச் செய்துகொள்ள வேண்டிய அவசியமுள்ளது என்பதனை இங்கு வலியுறுத்த வேண்டியுள்ளது. உதாரணமாக, பல்வேறு வகைகளைச் சேர்ந்த விலங்குகளை இறைச்சிக்காக வெட்டுவதனை முற்றிலும் தடைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பதன் மூலமன்றி, வெட்டப்பட இருக்கும் விலங்குகள்மீது போதியளவுக்கு கருணைகாட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பதன் மூலம், பெரும்பாலான மக்களை அதற்கு ஆதரவாக ஒன்று திரட்டிக்கொள்ள முடியும். இறைச்சி உணவை விரும்பி புசித்துவரும் தீவிரமான மாமிசப்பிரியர்களும் கூட, வெட்டப்படும் இந்த அப்பாவி விலங்குகள் மோசமாக நடத்தப்படுவதனை ஒருபோதும் ஆதரிக்கமாட்டார்கள். எனவே, நெகிழ்ச்சித்தன்மையுடன் கூடிய ஓர் அணுகுமுறையை பின்பற்றி வருவதன் மூலம் மட்டுமே இந்தப் பிரச்சினைகள் குறித்து பொதுமக்களுடையே விழிப்புணர்வினைத் தோற்றுவிக்க முடியும். அதாவது 'விலங்குகளுக்கு இதுவரையில் இழைக்கப்பட்டு வந்த கொடுமைகள் போதுமானவையாகும்' என மக்கள் உரத்து குரல் எழுப்புவதற்கான ஒரு சூழ்நிலையை இந்த அணுகுமுறை உருவாக்கும்.

ரீ. ஜீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நோக்கு

மலர் 19 இதழ் 8 நவம்பர் 1993

வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை
கொழும்பு 2,
இலங்கை.


## உள்ளே


ஏர்ல் டி சில்வா 5 இறைச்சி வியாபாரத்தை கட்டுப்படுத்துதல் மற்றும் ஆடு, மாடு வெட்டுவதில் காணப்படும் முறைகேடுகளை நீக்குதல் என்பன தொடர்பான சில சமூக, பொருளாதார அம்சங்கள்

அல்-ஹாபிஸ் பீ. ஏ. மஸ்ரி 26 மனித – விலங்கு உறவுமுறைகள் தொடர்பான இஸ்லாமிய நெறிமுறை


விசேஷ அறிக்கை

எல்லையற்ற காருண்ணியம்


ஹென்ரி ஸ்பைரா 2 எல்லையற்ற காருண்ணியம்

வின்ரிச் நிவ்மான் ஏற்றுமதி பதப்படுத்தல் வலயங்களின் குறைநிறைகள்

அடல்பஸ் டோபி 32 நைஜீரியாவில் ஒழுங்குவிதி தளர்த்தலும் வங்கிகளின் செயற்பாடும்


பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளிவிவரத்தரவு-களையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.

பொருளியல் நோக்கு வெளியீடு மக்கள் வங்கியின் முழு ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும், அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதி-பலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்-களிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும்.

## அடுத்த இதழில்

* பொருளாதார தலைவர்களை தெரிவு செய்யும் முறைகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள்

* தொழில்முனைவோர் எங்கிருந்து வருகின்றார்கள்?

* அடுத்த ஆயிரமாவது ஆண்டில் உலகளாவிய மார்க்சிசம் குறித்த சில சிந்தனைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லையற்ற காருண்ணியம்

ஹென்றி ஸ்பைரா

**உலகின் முன்னணி விலங்குரிமை இயக்க செயல்வீரர்களில் ஒருவரான ஹென்றி ஸ்பைரா கடந்த 15 வருடங்களாக ஐக்கிய அமெரிக்காவின் விலங்கு மீட்பு போராட்டக்களத்தில் மிகுந்த செயல் முனைப்புடன் இயங்கி வந்துள்ளார். அவரும் அவர் ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டுவரும் "விலங்குரிமைகள் தொடர்பான சர்வதேச கூட்டு" என்று அழைக்கப்படும் அமைப்பைச் சேர்ந்தவர்களும், விலங்குகளைப் பயன்படுத்தி வருபவர்களுடன் நேருக்குநேர் நின்று பல போராட்டங்களை நடாத்தி, கணிசமான அளவிலான வெற்றிகளையும் சாதித்துக் கொண்டுள்ளார்கள்.**

**உதாரணமாக, ஐக்கிய அமெரிக்க இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் பூனைகளின் பாலுணர்வு உந்துதல்களை அவதானிப்பதற்கென சுமார் 20 வருட காலமாக இந்த அப்பாவி பிராணிகளை வேண்டுமென்றே சிதைத்து, கொடுமைகளை இழைத்துக் கொண்டிருந்தது. இதற்கெதிராக ஸ்பைரா நீண்ட போராட்டமொன்றை தொடுத்திருந்தார். இறுதியில், இந்தப் பரிசோதனைகள் தாக்கமற்றவை என்பதனையும், விஞ்ஞானத்தின் ஒரு வக்கிரமான வெளிப்பாடு மட்டுமேயாகும் என்பதனையும் இந்த போராட்டத்தின் விளைவாகப் பொதுமக்கள் ஏற்றுக்கொண்டனர்.**

மனிதர்கள், மனிதப்பிறவிகள் அல்லாத ஜீவிகளுக்கு இழைத்துவரும் வன்செயல்கள் குறித்து நாங்கள் சிறப்பாக அக்கறை எடுத்துக் கொள்வதற்கு ஒரு நியாயமான காரணம் இருந்து வருகின்றது. ஆனால், மனிதர்கள்மீது கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறைச் சம்பவங்கள் மீது கவனம் செலுத்தி வரும் நாம், விலங்குகளுக்கு இழைக்கப்பட்டுவரும் கொடுமைகளை பொருட்படுத்த வேண்டுமா? என்னைப் பொறுத்தவரையில் மனிதப்பிறவிகள் தொடர்பாகவும் அதேபோல மனிதப் பிறவிகள் அல்லாத விலங்குகள் தொடர்பாகவும் வன்செயல்களை நிகழ்த்தாத ஒரே சீரான ஒரு தர்க்கவியலே பொருத்தமானதாக தோன்றுகின்றது. அதில் ஒன்று மற்றயதின் விஸ்தரிப்பாகும்.

பெரும்பாலானவர்கள் விலங்குகள் மீது கட்டவிழ்த்து விடப்படும் வன்செயல்கள் குறித்து சிந்திக்கும் பொழுது, துப்பாக்கி ஏந்திய, வெற்றிப் பதக்கங்களைப் பெறுவதற்காக விலங்குகளை வேட்டையாடித்திர்க்கும் ஒரு நபரின் உருவமோ அல்லது ஒரு பூனையை அல்லது நாயை சித்திரவதை செய்யும் வக்கிர உணர்வுகளைக் கொண்ட ஒரு மனநோயாளியின் உருவமோதான் அவர்களுடைய சிந்தனைக்கு வரும். ஆனால், இந்த தீவிரமான (எனினும், எப்போதாவது இடம்பெறக்கூடிய) வன்முறைச் சம்பவங்கள் மீது மட்டும் பார்வையை குறுக்கிக் கொள்வது என்பது, பிரச்சினையின் மைய விடயத்தை தவற விடுவதாகும். உண்மையான, பேரளவிலான வன்முறை எமது கலாச்சாரக் கட்டமைப்பின் ஒரு பாகமாக உள்ளது. அதாவது, இந்தக் கலாச்சாரத்தில், விலங்குகள் ஆய்வுகூடப் பொருட்களாகவும் உண்ணத்தக்க பண்டங்களாகவும் மட்டுமே கருதப்பட்டு வருகின்றன. ஐக்கிய அமெரிக்காவில், ஒவ்வொரு ஆண்டிலும் பல இலட்சக் கணக்கான விலங்குகள் ஆய்வுகூடச் சிறைகளில் துன்புற்று வருகின்றன. மேலும், 60 இலட்சம் பண்ணை விலங்குகள், சாப்பாட்டு மேசைக்கான தமது இறுதிப் பயணத்தின்போது சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றன.

இந்த வன்முறை அநேகமாக கட்புலனாகாததாகவே இருந்து வருகின்றது. இதற்கு எளிதில் சமூகத்தின் ஒப்புதல் முத்திரையும் கிடைத்து விடுகின்றது. மேலும், சுவையுணர்வினை நன்கு அறிந்திருக்கும் ஒரு கலாச்சாரம் மாமிசத் தின் சுவைக்கென இதனை நியாயப் படுத்தியும் வருகின்றது. 'நாங்கள் விலங்குகளை புசித்து வருகின்றோம்' என்ற எளிமையான உண்மை, விலங்குகள் தொடர்பான எமது மனப்பாங்கில் மேலோங்கி நிற்கின்றது. சமூகம் அதன் படுதாவைச் சுற்றிப் பின்னப்பட்டுள்ள அநீதிகளைப் பார்த்து சங்கடப்படுவதற்கு விரும்புவதில்லை. எனவே, அது, எமக்கும் ஏனைய விலங்கு வகைகளுக்குமிடையே இணைக்க முடியாத இடைவெளி ஒன்றினைக் கட்டியெழுப்புவதற்கு எத்தனிக்கின்றது.

'நாங்கள் ஏனைய விலங்குகள் மீது, மேலாதிக்கம் செலுத்திவர வேண்டும்' என்ற கருதுகோளினை பல சமூகங்கள் ஆதரித்தும், ஊக்குவித்தும் வருகின்றன. அது, பரஸ்பரம் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் ஒரு தத்துவமாக இருக்கவில்லை. ஒரு போட்டித் தத்துவமாகவே இருந்து வருகின்றது. இயற்கையுடன் ஒருமித்த ஒரு சகவாழ்வினை எடுத்து வருவதற்கு அது விருப்புக் கொண்டிருப்பதாக தெரிய வில்லை. சுரண்டலைப் பேணிக் காத்துக் கொள்வதற்கே அது விரும்புகின்றது. மேலும், பாரம்பரியமும் கூட, மனிதர்கள் ஏனைய விலங்குகளிலிருந்தும் வித்தியாசப்படும் முறைகளிருந்தே மானிடப் பிறவிகளுக்கு வரைவிலக்கணம் வழங்கி வருகின்றது. மனிதர்களுக்கும் விலங்குகளுக்குமிடையே இருந்து வரும் ஒருமித்த தன்மைகளை அது அவ்வளவு தூரம் கவனத்தில் எடுப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்குகள் மனிதர்கள் உணர்வதைப் போல நோவினை உணர்ந்து கொள்ளக்கூடிய சக்தியற்ற வெறும் ஜடங்களாக இருந்து வருகின்றன என இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் பெரும்பாலான புத்திஜீவிகள் கருதி வந்தனர். விலங்குகளின் அலறல்களை கிஞ்சித்தும் பொருட் படுத்தாத, தமது மிகவும் குரூரமான பரிசோதனைகளை நியாயப்படுத்திக் கொள்வதற்காக அவர்கள் இந்தத் தர்க்கத்தினைப் பயன்படுத்தினர். நோபல் பரிசு பெற்ற காலஞ்சென்ற ஐசக் பெசேவிக் சிங்கர் என்பார் பின்வருமாறு கூறியிருந்தார்: "பிராணிகள் என்பவை உணர்ச்சிகளோ ஆன்மாவோ அற்ற வெறும் ஜடங்கள் மட்டுமேயாகும் என்று தமது சிஷ்யர்களிடையேயும் தம்மைப் பின்பற்றுவோரிடையேயும் எடுத்துக் கூறி, அவர்களை அதனை ஏற்கச்செய்ய வைப்பதற்கு பல தத்துவஞானிகளும் மதத் தலைவர்களும் முயன்றுள்ளனர். ஆனால், ஒரு பிராணியுடன் வாழ்ந்து வந்திருப்பவர் - அது ஒரு நாயாக, பறவையாக, சுண்டெலியாக இருந்தாலும்கூட சரியே - இக்கோட்பாடு ஒரு அபாண்டமான பொய் என்பதனையும், கொடுமை இழைப்ப தனை நியாயப்படுத்துவதற்கு புனையப்பட்ட ஒரு கூற்று என்பதனையும் நன்கு அறிவார்".

இன்றைய விஞ்ஞானமும் பொது அறிவும், மனிதப் பிறவிகளும் ஏனைய பிராணிகளும் இணைக்க முடியாதவொரு இடைவெளியினால் பிரிக்கப்பட்டிருக்க வில்லையென்பதனை ஏற்றுக் கொள் கின்றன. உளத்திறன்கள், விவேக பூர்வமாக சிந்திக்கும் ஆற்றல், ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்திப் பார்க்கும் திறமை, பிறர்மீதான பரிவு என்பன பொதுவான உணர்வுகளாக கருதப்படுகின்றன. இவை பகிர்ந்து கொள்ளப்படும் உணர்வுகளாகும். விலங்குகளும் எம்மைப் போலவே இந்த வாழ்க்கையிலிருந்து ஏதோ ஓரளவுக்கு சந்தோசத்தினை அனுபவிக்க விரும்புகின்றன.

'அவற்றால் நன்மை தீமைகளைக் கண்டறிந்து கொள்ள முடியுமா ? அல்லது அவற்றால் வாய் பேச முடியுமா? என்பதல்ல இங்குள்ள பிரச்சினை. வேதனையை அவற்றால் சகித்துக் கொள்ள முடியுமா ? என்பதே இங்குள்ள பிரச்சினையாகும்" என 1789ம் ஆண்டளவில் ஜெரமி பெந்தம் கேள்வி எழுப்பியிருந்தார். நோவினை அனுபவிக்கும் விஷயத்தைப் பொறுத்த வரையில் எமக்கும் இந்த விலங்குகளுக்குமிடையில் என்னதான் வித்தியாசம் இருக்கப் போகின்றது. ஏனைய ஜீவிகளின் உடல்களையும் உள்ளங்களையும் துன்புறுத்துவதற்கு எமக்கு உரிமை அளித்தது யார்? கொடுமை இழைக்கும் ஒரு கருதுகோளுக்கு நாங்கள் ஆதரவு தெரிவிக்காமல் இருக்கும் வரையில், ஏனைய உயிர் பிராணிகளை துன்புறுத்துவதனை நியாயப்படுத்து வதற்கு வேறு எந்த காரணமுமில்லை.

அண்மையில் ஜேம்ஸ் ஜஸ்பர் மற்றும் டொரோதி நெல்கின் ஆகிய இருவரும் இணைந்து "விலங்கு உரிமைகளுக்கான புனிதப் போர்" என்ற நூலை வெளியிட்டிருந்தார்கள். "மிகவும் சக்தி வாய்ந்த சமூக இயக்கம் எளிமையான ஒரு தார்மீக நிலைப்பாட்டினால் நெறிப்படுத்தப் பட்டிருந்தது: விலங்குகள் மனிதர்களை ஒத்த ஜீவிகளாகவே இருந்து வருகின்றன. அவற்றையும் ஒரு தார்மீக நெறியின் அடிப்படையிலேயே நாம் கையாள வேண்டியுள்ளது. அவை புலன் உணர்ச்சிமிக்க ஜீவிகளாக இருந்து வருவதுடன் கண்ணியமாக ஒரு வாழ்க்கையை நடத்துவதற்கும் உரித்துடையனவாக இருந்து வருகின்றன. சிலர் ஆய்வுகூடங்களில் விலங்குகள் மீது பரிசோதனைகளை நடாத்திவரும் அதேவேளையில், அதே வகையான விலங்குகளை செல்லப் பிராணிகளாக அன்புடன் வளர்த்து வருகின்றனர். ஒரு விலங்கினை அரவணைப்பதும் பிறிதொரு விலங்கினை புசிப்பதும் எவ்வாறு சாத்தியப்பட முடியும்" என இந்நூலில் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஒரு விலங்கினை நாம் அன்புடன் அரவணைத்துவரும் அதேவேளையில் இலட்சக் கணக்கான ஏனைய விலங்குகள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விடுவதற்கான காரணம் அநாயசமாக நாங்கள் எம்மை இந்த வன்முறையி லிருந்து பிரித்துத் தூரப்படுத்திக் கொள்ளக் கூடியவர்களாக இருந்து வருவதாகும். நகரத்தின் முக்கியமான சதுக்கமொன்றில் கண்ணாடிச் சுவர்களில் வைத்து, விலங்குகளின் உறுப்புக்களை அறுத்து சித்திரவதை செய்யப்பட்டால், படுகொலை செய்யப்பட்டால் நாங்கள் ஆத்திரமூட்டப்படுவோம் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. அத்தகைய ஒரு நிலையில், நாங்கள் எமது உணவுப் பழக்கங்களையும் ஆராய்ச்சி முன்னுரிமைகளையும் நிச்சயமாக மாற்றிக் கொள்வோம். நாங்கள் புசிக்கும் விலங்கு களை எங்கள் கையாலேயே வெட்டவேண்டியேற்பட்டாலும் இதே நிலைமை ஏற்படும்.

ஆனால், விலங்குகள் மீது இழைக்கப்பட்டுவரும் வன்செயல்கள் மூடிய கதவுகளுக்குப் பின்னே இடம் பெற்று வருகின்றன. எனவே, மாமிசம் உண்பவர்கள் உணவு மேசையில் வைக்கப்பட்டிருக்கும் குறிப்பிட்ட அந்த விலங்கின் மரண ஓலத்தை கேட்பதுமில்லை; அந்த விலங்கின் கடைசி நிமிட முகபாவனையை நேரடியாக பார்ப்பதுவுமில்லை. மேலும், ஆய்வுகூட விலங்குகள் பாரிய இரும்புக் கதவுகளுக்குப் பின்னே ஆய்வுகூட அறைகளுக்குள் சிறைப்பிடிக்கப் பட்டிருக்கின்றன. இந்த சிறைகூடங் களுக்குள்ளேயே இவ்விலங்குகள் தீயினால் சுடப்பட்டும், கதிர் வீச்சுக்கு உட்படுத்தப்பட்டும், பட்டினி போடப் பட்டும் குருடாக்கப்பட்டும், நஞ்சூட்டப் பட்டும் மின்சார அதிர்ச்சி பாய்ச்சப்பட்டும் சொல்லொணாத் துன்பங்களுக்கு இரை யாக்கப்பட்டு வருகின்றன. பன்றி, முதிர்ச்சியடையாத மாட்டுக் கன்று, கோழிக்குஞ்சு என்பன அவற்றின் வாழ்க்கை முழுவதிலும் இடைவீடு எதுவுமின்றி தொடர்ந்தும் துன்புறுத்தப்பட்டு வருகின்றன. அவற்றின் உடலும் உள்ளமும் உருக்குலைக்கப்படுகின்றன. "தொழிற்சாலை பண்ணைத்தொழில்" என்று அழைக்கப்படும் மனிதனால் உருவாக்கப்பட்ட நரகத்தின் ஒரு பாகமாக மன உளைச்சல், பித்துப்பிடித்தல் என்பன அமைகின்றன. இதிலிருந்து எந்த விலங்கும் தப்பிக் கொள்ள முடியாது. இறைச்சி பெறுவது என்பது அப்பட்டமான படுகொலையாகும். இதில் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படும் அப்பாவிகளுக்கு, உடன் உதவி கோருவதற்கு அவசரகால தொலைபேசி சேவைகள் எவையுமில்லை.

கன்றுக் குட்டிகள் பிறப்பின் போதே தமது தாய்ப்பசுகளிடமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிக்கப்படுகின்றன; மிகவும் ஒடுக்கமான அடைப்புக்களில் அவை வைக்கப் படுகின்றன. அந்த அடைப்புக்களில் சற்று உடலைத் திருப்புவது கூட மிகவும் சிரமமான காரியமாகும். இந்தக் கன்றுக்குட்டி தனக்கு ஒதுக்கப்பட் டுள்ள 16 வார காலத்தில் உயிர் பிழைத்திருப்பதற்கான ஒரே காரணம் அதன் உடலுக்குள் செலுத்தப்பட்டிருக்கும் மருந்துகளாகும். வெட்டுவதற்காக இவற்றை எடுத்துச் செல்லும்பொழுது, இவை நோயுள்ள நலிந்த பிராணிகளாக இருந்து வருகின்றன. அதனால் அவற்றை தரையில்இழுத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

பிரமாண்டமான முட்டைத் தொழிற்சாலைகளில் கோழிகள் மிகவும் சிறியளவிலான ஒரு இடப்பரப்புக்குள் தமது வாழ்க்கையை முடித்துக் கொள்கின்றன. உணவு மேசைக்கு எடுத்துவரப்படும் விலங்குகளுக்கு நாம் இழைத்துவரும் கொடுமைகளை எமது சக விலங்குகளுக்கு நாம் இழைத்து வருவோமேயானால் அவை எம்மை சிறையில் பிடித்து அடைத்துவிடும்; இங்கு குற்றம் சாட்டப்படுபவர் தீவிரமான ஒரு மனப்பிராந்தியினால் பாதிக்கப்பட்ட நபராகவும், புத்தி சுவாதினம் அற்ற ஒரு நபராகவும் பட்டியலிடப்பட்டு விடுவார். எனவே, ஒரு நாய், பூனை, பன்றி, கன்றுக்குட்டி, கோழிக்குஞ்சு ஆகிய அனைத்துப் பிராணிகளும் அனுபவிக்கும் நோவு ஒரே விதமான தாகும். பச்சிளம் குழந்தைகளும் வயது முதிர்ந்தவர்களும் தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ள முடியாத கையறு நிலையில் இருந்து வருவதனால், இத்தகையவர்களுக்கு எதிராக மேற் கொள்ளப்படும் வன்முறைகளைக் கண்டு நாங்கள் அதிர்ச்சி அடைகின்றோம். விலங்குகளும் கூட இதே வகையைச் சேர்ந்த மிகவும் எளிதில் ஊறுபடத்தக்க ஜீவராசிகள் தொகுதியொன்றாக இருந்து வருகின்றன.

தத்துவஞானியான பீட்டர் சிங்கர் விலங்குகள் சார்பாக குரல் கொடுக்கும் பொழுது, 'மனிதப் பிறவிகளை மட்டுமே நாங்கள் பொருட்படுத்த வேண்டியுள்ளது' என்ற கருத்துக்குச் சவால் விடுகின்றார். "எமது சொந்த மனித இனம் முதல் முன்னுரிமையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென சிலர் உரிமை கோரி வருகின்றனர். இந்த உரிமைக் கோரலை நாங்கள் ஏன் ஏற்க வேண்டும் ஏனைய மனித இனங்களின் நலன்களைப் பேணும் விஷயத்தில் நாங்கள் அதிகளவுக்குக் கரிசனை எடுக்கும் விஷயம் சுமார் 200 வருடங்களுக்கு முன்னர் மானிட இயல்புக்கு முற்றிலும் முரணானதாக தோற்றமளித்திருக்க முடியும். நான், என்னை ஏனையவர்களிடையேயிருந்து வரும் ஒரு மனிதனாக நோக்கும்பொழுது, இந்த ஒப்பீட்டின் மூலம் எனக்கு நன்கு தெரியவரும் ஒரு விஷயம், என்னைப் போலவே மற்ற மனிதர்களுக்கும் உணர்ச்சிகள் இருக்கின்றன. அவர்களும் வேதனையினால் துன்புறவும் அல்லது மகிழ்ச்சியினால் களிப்படையவும் முடியும் என்பதாகும். எனவே, ஏதாவது ஒரு வகையான ஓர் உணர்வினை அனுபவிக்கும் ஆற்றலைக் கொண்டிருக்கும் எந்த ஒரு ஜீவிக்கும் அதற்குரிய முக்கியத்துவத்தை வழங்கவேண்டும்".

மேலாதிக்கத்துக்கு உள்ளாக்கப் பட்டிருக்கும் நிலையிலிருந்து, பரி சோதனைகளுக்கு இலக்காக்கப் படுவதிலிருந்து, உணவுக்காக வெட்டப் படும் நிலையிலிருந்து எந்த விலங்குகளை மீட்டெடுப்பது என்ற விஷயத்தில் நிச்சயமாக எமக்கு ஒரு தெரிவு இருக்க முடியாது. "மனிதனால் ஏனைய விலங்கு வகைகள் சுரண்டப்பட்டு வரும் நிலை மிகவும் கொடூரமான தாகவும், நியாயமற்றதாகவும், அகிலம் தழுவிய ஒரு போக்காகவும் நிலவி வருகின்றது. உலக வரலாற்றில் ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தை நீண்ட நெடுங் காலம் துன்புறுத்திவரும் ஒரு நிகழ் வாகவும் இது இருந்து வருகின்றது" என பிரிட்டிஷ் எழுத்தாளரான பிரிஜிட் புரோபி குறிப்பிட்டுள்ளார்.

எம்முடைய கருணைக்கும் கூட ஒரு எல்லை இருந்து வருகின்றது என்றும், குறிப்பிட்ட ஒரு அளவிலான வன்செயலை மட்டும் நாம் மேற்கொண்டுவர முடியும் என்றும் சிலர் வாதிட்டு வருகின்றனர். ஆனால், காருண்யம் என்பது எல்லையற்றதாகும். மறுபுறத்தில், அது தன்னைத் தானே போஷித்துக் கொள்கின்றது. அதாவது, எமது வாழ்க்கை மாதிரிகளில் எந்த அளவுக்கு அதிகமாகக் கருணையை நாங்கள் நடைமுறைப்படுத்தி வருகின் றோமோ அந்த அளவுக்கு அதிகமாக அதனை நாங்கள் உபயோகிக்க வேண்டி யுள்ளது. மறுபுறத்தில், எந்த அளவுக்கு அதிகமாக நாங்கள் வன்முறையை ஏற்றுக்கொள்கின்றோமோ அந்த அளவுக்கு அதிகமாக நாங்கள் அதற்கு பழக்கப்பட்டுவிடுகின்றோம்.

விலங்குகளுக்கு இழைக்கப்பட்டு வரும் வன்முறையை தடுத்து நிறுத்துவது என்பது எமது அன்றாட வீட்டு வாழ்க்கையுடன் மிகவும் நெருக்கமான முறையில் பிணைக்கப்பட்டிருக்கும் ஒரு பிரச்சினையாகும். அதற்கான தீர்வுகளும் கூட எமது வீடுகளிலிருந்தே வர வேண்டியுள்ளன. மனச்சாட்சிக்கு ஏற்றவிதத்தில் உணவு உட்கொள்வது மற்றும் மாமிசம் இல்லாத அல்லது குறைந்தளவுக்கு மாமிசத்தில் தங்கி யிருக்கும் உணவுப்பழக்கத்துக்கு மாறிச் செல்லல் என்பன வன்முறைக்கு எதிரான போராட்டத்தின் மிகவும் சக்திமிக்க ஒரு ஆயுதமாக மட்டுமன்றி, எமது சொந்த நலனை மேம்படுத்திக் கொள்ளும் அதேவேளையில், அனைத்து விலங்குகளின் நலன்களையும் பேணிக் கொள்வதற்கான பயணத்துக்கான ஒரு முக்கியமான படியாகவும் இருந்து வருகின்றது.

அல்பர்ட் சுவிட்சர் பின்வருமாறு கூறியிருந்தார்:"எம்முடைய மேலைத்தேய உலகில் அறவியல் பெருமளவிற்கு வரையறுக்கப்பட்டதாகவே இருந்து வருகின்றது . . . விலங்குகளையும் உள்ளடக்கிக் கொள்ளக்கூடிய, எல்லை இல்லாத தார்மீக நெறியொன்று எமக்கு அவசியமாகும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைச்சி வியாபாரத்தை அரசாங்கம் ஒழுங்கு முறைப்படுத்துதல் மற்றும் ஆடு, மாடு வெட்டுவதில் காணப்படும் முறைகேடுகள், கொடுமைகள் என்பவற்றை முடிவுக்கு கொண்டு வருதல் என்பன தொடர்பான சமூக - பொருளாதார நோக்குகள்

ஏர்ல் டி சில்வா

*அசோசியேட்டட் டெவலொப்மன்ட் கொன்சல்டன்ட்ஸ் லிமிட்டெட் தாபனத்தின் தலைவரான கலாநிதி ஏர்ல் சி. டி சில்வா வேளாண்மைத் துறைப் பட்டதாரியாவார். வேளாண்மைப் பொருளாதாரத்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். அவரது சிறப்புப் பயிற்சித் துறைகள் பலவற்றுள் "பொருளாதார அபிவிருத்தித் திட்டமிடல்", "விலங்கு வேளாண்மையும் பண்ணைத்தொழிலும்" என்பவையும் அடங்கும். முதலில் அவர் விவசாயத் திணைக்களத்தில் பணியாற்றினார். பாரிய கால்நடைப் பண்ணைகளை முகாமை செய்தல் அவரது பணிகளில் ஒன்றாக அமைந்திருந்தது. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாயத் துறைப் பட்டப் பின்படிப்புக் கழகத்தில் வருகைதரும் போதனாசிரியராகவும் அவர் கடமையாற்றியுள்ளார்.*

*1966ல் திட்டமிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சு தொடங்கப்பட்டது முதல், திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்தி அதன் முக்கியத்துவத்தை இழந்து அமைச்சின் முன்னணி நிலை 1977 - 78ல் சரிந்தது வரை, அவரது தொழில்துறை வாழ்வின் பிற்பாதி அவ்வமைச்சிலேயே கழிந்தது. வெளிநாட்டில் பணியாற்றும் பொருட்டு, அவர் 1979ல் ஓய்வு பெற்றார். திட்டமிடல் அமைச்சில் கமத்தொழில் பொருளியலாளராக அவர் முக்கிய கடமைகளை நிறைவேற்றியதுடன், கால்நடை, பண்ணைத் தொழில் உபதுறைக்கும் மேற்பார்வைப் பொறுப்பாளராக விளங்கினார்.*

## 1.0 அறிமுகம் : இறைச்சிக் கடைக் காரர் கட்டளைச் சட்டம்

9ஆம் இல. இறைச்சிக் கடைக் காரர் சட்டம் (1) 1893ல் பிரித்தானிய குடியேற்ற அரசாங்கத்தினால் இயற்றப் பட்டது. அதன் அடிப்படை நோக்கம், நுகர்வோரைப் பாதுகாத்தலாகும். அதன் நோக்கங்களும் அடிப்படை உள்ளடக்கமும், சென்ற 100 ஆண்டு களாக மாற்றமடையாது இருந்து வந் துள்ளன; ஆனால், சட்ட ஆக்கங்கள் தொகுதி X (1960)ல் வெளியிட்ட 1956ன் திருத்தங்கள், ஆடு/ மாடு வெட்டும் கூடங்களை நடத்துவதற்கும் மேற் பார்வை செய்வதற்குமான உள்ளூ ராட்சிச் சபைகளின் துணைச் சட்ட விதிகளுக்கு அடிப்படையாக அமைந் துள்ளன. இறைச்சிக்காக கால்நடைகள் வெட்டுதல் மற்றும் கால்நடைகள் வெட்டப்படுவதற்குமுன் அவற்றின் உடல்நலத்தைப் பரிசோதிப்பதற்கான துணைச் சட்டங்களுக்கும் இவை அடிப் படையாக அமைந்துள்ளன. வெட்டப் பட்ட விலங்கின் உடல் மீண்டும் பரிசோ திக்கப்பட்டு, அவை இறைச்சிக் கடைக்கு அனுப்பப்பட முன்னர் உள்ளூராட்சி மன்றத்தின் முத்திரை பதித்து, "உண வுக்கு ஏற்றவை" என்றும், "நோயற்றவை" என்றும் சான்றளிக்கப்படுகிறது. துணைச் சட்டங்கள் பொதுச் சந்தை களில் இறைச்சிக் கடைகளை வாட கைக்கு விடுவதற்கும் நடத்துவதற்கும் ஏற்பாடு செய்கின்றன. பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சுகாதார நிலைமைகளையும், இறைச்சி பரிசோ தித்து முத்திரை இடப்பட்டுள்ளதா என்பதையும் மேற்பார்வை செய் கின்றனர்.

## 2.0 விலங்குகள் சட்டம் (1958)

1950ஆம் ஆண்டுத் தொடரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்பகுதியில், வறிய கமக்காரர் சமூகங்களின் நிலையை உயர்த்துவதற்கான கமநலப் புரட்சி இடம்பெற்றது. இறைச்சிக் கடைக்காரர் சட்டம் நுகர்வோரைப் பாதுகாக்கும் பொருட்டு இயற்றப்பட்டதாகும். ஆனால், 1958ஆம் ஆண்டின் 29ஆம் இல. விலங்குகள் சட்டம் கமக்காரர்களையும் கால்நடைச் சொந்தக்காரர்களையும் பாதுகாப்பதற்காக இயற்றப்பட்டதாகும். இது அபிவிருத்தி நோக்கங்களைக் கொண்டுள்ளது. 1958ஆம் ஆண்டின் விலங்குகளுக்கு கொடுமை இழைத்தல் (3) பற்றிய சட்டம், இலங்கையின் பண்பாட்டு, பௌத்த பாரம்பரியங்களுக்கு அமைய விலங்குகள் மீது கருணை காட்டுவதைச் செயற்படுத்துவதற்காக இயற்றப்பட்டதாகும்.

வெட்டுவதற்காக விலங்குகளை வழங்குதல், விலங்குகள் சட்டத்தின் 1962.08.20ஆம் தேதியிட்ட 13268ஆம் இல. விசேட அரசாங்க வர்த்தமானியில் வெளியான ஒழுங்குவிதிகளினாலும் கட்டுப்படுத்தப்படுகிறது. இவை, (1964ல் திருத்தப்பட்ட ஒரு சொல்லுடன்) நடைமுறையில் இருந்து வருகின்றன.

இச்சட்டமானது, ஆரோக்கியமான, நோயற்ற விலங்குகள் இறைச்சிக்காக வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு மிக உன்னதமான நோக்கங்களுக்காக அரசாங்கத்தினால் இயற்றப்பட்டது. அதாவது, இறைச்சி வியாபாரத்தில் தீயசெயல்களை ஒழிப்பதையும், அதைவிட முக்கியமாக பசுக்கன்றுகள், காளைக் கன்றுகள், சினை விலங்குகள், பால்தரும் பசுக்கள், சிறந்த இனப் பொலிகாளைகள் என்பவை வெட்டப்படுவதைத் தடுத்து, கிராமப் பொருளாதாரத்துக்கும் கமக்காரர்களுக்கும், நெல்லுற்பத்திக்கும் பால் உற்பத்திக்கும் உதவும் விலங்குகளையும் பாதுகாத்துக்கொள்ளும் நோக்குடன் இயற்றப்பட்டிருந்தது.

இனப்பெருக்கத்துக்குப் பொருத்தமற்ற விலங்குகளை விதையடித்தல், காளை நிலையங்களை நடத்தல், செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களை நடத்தல் என்பவை தொடர்பான விரிவான ஏற்பாடுகளை இச் சட்டம் கொண்டிருக்கிறது. இப்பணிகள் கால்நடை மருத்துவரின் பொறுப்பாகும். இனப்பெருக்கத்துக்குப் பொருத்தமான ஆண் விலங்குகளுக்குச் சான்றிதழ் வழங்குவதும் அவரது பொறுப்பாகும். அத்தகைய விலங்குகளை, (மருத்துவர் வழங்கிய சான்றிதழை இரத்துச் செய்து, அவ்விலங்கு இனப்பெருக்கத்துக்குப் பொருத்தமில்லாததென புதிதாக ஒரு சான்றிதழ் வழங்கும் வரை) விற்பனை செய்ய முடியாது.

இச்சட்டம் கால்நடை மருத்துவர்கள், (முன்னாள்) காரியாதிகாரிகள், (இப்பொழுது பிரதேச செயலாளர்கள்) கிராம உத்தியோகத்தர்கள் என்போர் மீது திட்டவட்டமான பொறுப்புக்களைச் சுமத்துகிறது. உதாரணமாக வெட்டுவதற்காக விலைக்கு வாங்கப்பட்ட விலங்குகளை, மேலே கூறப்பட்ட வெட்டத் தடைசெய்யப்பட்ட வகைகளுக்கு உட்படாதவை என்றும், நோயற்றவை என்றும், வாங்கிய காலத்தில் வாங்கப் பட்ட பிரதேசத்தில் தொற்று நோய்கள் இருக்கவில்லை என்றும், அப்பிரதேச கால்நடை மருத்துவர் சான்றிதழ் வழங்காதவரை வேறெங்கும் கொண்டு செல்ல முடியாது. இது தொடர்பான சான்றிதழைக் காட்டியதும், சூட்டுக் குறிகளைப் பார்த்து, உடைமை உரிமையை நிர்ணயித்த பின், பிரிவு அரசிறை உத்தியோகத்தர், பிரிவு எல்லையைக் கடந்து விலங்குகளைக் கொண்டு செல்வதற்காக ஓர் அனுமதிப் பத்திரத்தை வழங்குவார். இது விலங்குகளை ஏற்றிச் செல்வதற்குரிய அனுமதிப் பத்திரமாகும். இப்பத்திரத்தைக் காண்பித்தால்தான் புகையிரதத் திணைக்களமும், லொறிச் சொந்தக்காரர்களும் விலங்குகளை வண்டிகளில் ஏற்ற முடியும்.

விலங்குகள் சட்டம் அரசாங்க அதிபருக்கும் சில பொறுப்புக்களை அளித்துள்ளது. மிருகங்களின் சொந்தக்காரர்களை இனங்காண்பதற்கும், எண்ணிக்கை தொடர்பான பதிவுகளைச் செய்வதற்கும் காரியாதிகாரியும் கிராம உத்தியோகத்தரும் விலங்குகளுக்கு சூட்டுக்குறியிடுவதை உறுதிப்படுத்துவது அரசாங்க அதிபரின் பொறுப்பாகும். உடைமையுரிமை நிர்ணயிக்கப்பட்ட பின்பே ஏற்றிச் செல்வதற்கான உறுதிப்பத்திரம் வழங்கப்படமுடியும். இதன் நோக்கம், திருட்டையும் வெட்டுவதற்காக சட்ட விரோதமாக விலங்குகளைக் கொண்டு செல்வதையும் தடுப்பதாகும். குறி சுடுவதையும் பதிவு செய்வதையும் கொண்ட இவ்விரிவான முறை செயல்படுத்தப்பட முடியாதது என்பது வெளிப்படையான இரகசியமாகும். இதற்குக் காரணம், கிராம உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு வெளியில் செயலாற்றுவதோடு, அவர்கள் பல வகைக் கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது என்பதும், விலங்குகள், கால்நடைகளின் நடமாட்டம் பற்றி அவர்களுக்கு கிஞ்சித்தும் அக்கறையில்லை என்பதுமாகும். இச்சட்டத்தின் விளைவாக, 1958ஆம் ஆண்டின் கமத்தொழில் அபிவிருத்திப் பிரேரணைகளில் (4) ஓர் "இறைச்சிச் சபை"தாபிக்கப்பட வேண்டுமென்ற யோசனை தெரிவிக்கப்பட்டது. இதற்கான வரைவுச் சட்டம் 1960ல் தயாரிக்கப்பட்டது. இதன் நோக்கம் விலங்குகள் சட்டத்தைப் பயனுள்ள வகையில் செயற்படுத்துவதாகும்.

கமத்தொழில் அமைச்சின் 1958ஆம் ஆண்டு கமத்தொழில் அபிவிருத்திப் பிரேரணைகளே, இவ்விடயத்தை விரிவாக ஆராய்ந்து, சட்ட விரோதமாகக் கால்நடைகள் வெட்டப்படுவதைப் பதிவு செய்து, வியாபாரத்தில் காணப்பட்ட துஷ்பிரயோகங்களைக் குறிப்பிட்டு, இவற்றுக்குப் பரிகாரமாக நியதிச் சட்டமுறைச் சபை ஒன்றையும், பிராந்திய ஆடு/ மாடு வெட்டும் கூடங்களையும் சிபாரிசு செய்த முதலாவது ஆவணமாகும். ஆனால், அத்தகைய சபையொன்று தாபிக்கப்படவில்லை.

### 3.0 தேசிய பண்ணை விலங்குகள் அபிவிருத்திச் சபை

பத்தாண்டுகளுக்குப் பின் ஒரு "இறைச்சிச் சபை"க்கான தேவை மீண்டும் தலைதூக்கியது. திட்டமிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சினதும், கமத்தொழில், உணவு அமைச்சினதும் கூட்டு நிபுணர் குழு ஒன்றை அரசாங்கம் நியமித்தது. இக்குழு "இலங்கையில் இறைச்சி உற்பத்தியும் சந்தைப்படுத்தலும் - 1969" என்ற தலைப்புக் கொண்ட அதன் அறிக்கையில் பண்ணை விலங்குச் சபை ஒன்று தாபிக்கப்பட வேண்டுமெனச் சிபாரிசு செய்தது. (5) அப்பொழுது திட்டமிடல் அமைச்சில் பணியாற்றிய இக்கட்டுரையாசிரியர் இக்குழுவை கூட்டுபவராகவும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாண்டுகளுக்கு முன்னர் ஆக்கப்பட்டு, மூடிமறைக்கப்பட்டுள்ளவையாகத் தோன்றும் நிறைவேற்றுச் சட்டத் தொகுப்பிலுள்ள ஆடு, மாடு வெட்டுதல் பற்றிய பிரச்சினைகளுக்குரிய பரிகாரங்களை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளினதும் பொதுமக்களதும் கவனத்துக்குக் கொண்டுவர இவ்வாய்வு விழைகிறது. இது, கடந்த 10மாத காலமாக பத்திரிகைகளில் விவாதிக்கப்பட்டு வரும் சர்ச்சைக்குரிய மனிதாபிமான மற்றதும் கொடுமையானதுமான கால்நடை வெட்டும் பிரச்சினைக்கு மட்டுமன்றி, வாகனங்களில் கொண்டு செல்லப்படும் கால்நடைகளையும், வெட்டுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள கால்நடைகளையும் கையாள்வதில் இழைக்கப்பட்டுவரும் கொடுமைகளுக்கும் பரிகாரமாக அமையும். பால் விற்பனையில் கிடைக்கும் இலாபத்தைப் பெருக்குவதற்காகக் கன்றுகளைக் கொல்லல் போன்ற செயல்களுக்கும் இதன் மூலம் தீர்வு காணலாம். கால்நடை வெட்டுதல் பற்றிய பிரச்சினை பூகம்பத்தின் ஓர் அறிகுறி மட்டுமே; இச்செயலின் தொடர்ச்சியாக சட்டமுரணாக கால்நடை வெட்டுதலும் இறைச்சி விற்பனையும் இடம் பெறுகின்றன. உத்தரவுப் பத்திரம் பெற்று வெட்டப்படுவதை விட அதிகமாக இடம் பெறும் சட்டமுரணான வெட்டலும் விற்பனையும் பொது மக்களின் சுகாதாரத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் ஒரு செயலாகும். சட்டத்தை மீறுவது ஒரு விடயம்; ஆனால், அதன் மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொந்த இலாபம் அடைவது தீர்க்கப்படவேண்டிய மிக முக்கிய பிரச்சனைகளில் ஒன்றாக உள்ளது.

சமூக – பொருளாதாரம் தொடர்பான அத்தியாவசிய விடயங்கள் இறைச்சி வியாபாரத்தைக் கடந்து சென்று நாடு முழுவதையும் அளாவி நிற்கின்றன. இவை ஏறத்தாழ 30 இலட்சம் கால்நடைகளை சொந்தமாக வைத்திருக்கும் 20 இலட்சம் பேர் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவர்களிடையே, பாலையும், இழுவை மிருகங்களையும் விற்றுத்தம் சொற்ப வருமானத்தை ஓரளவு கூட்டிக்கொள்ளும் கிராமக் கமக்காரர்களும் பண்ணைத் தொழிலிலும், பாலுணவுப் பொருட்கள், இறைச்சி உணவுப் பொருட்கள் ஆகியவற்றைப் பதனிட்டு விற்பனை செய்யும் தொழிலிலும் ஈடுபட்டுள்ளவர்களும், கால்நடைத் தீனி உற்பத்தித் தொழில், தோல் ஏற்றுமதி போன்றவற்றில் தமது பிழைப்பைத் தேடிக் கொள்பவர்களும் அடங்குகின்றனர்.

இவ்விடயம் தொடர்பான பத்திரிகை விவாதம், சுகாதாரக் கேடான உருக்குலைந்த கொட்டில்களில் கொடுமையான, ஈவிரக்கமற்ற முறையில் கால்நடைகள் வெட்டப்படுவதையும், கருவுற்ற பசுக்கள் கொல்லப்படுவதையும், சட்டமுரணாக பரவலாக ஆடு, மாடுகள் வெட்டப்படுவதையும் குறித்தே ஆரம்பமாயிற்று. ஆனால், அது தடம்மாறிச் சென்று, பல சமயங்களையும் சார்ந்த தீவிரவாதிகளால் சமய, இன உணர்ச்சிகள் தூண்டப்பட்டு, மதவெறியும், நயவஞ்சகமும் தலைதூக்குவதற்கு இடமளித்தது. இவ்விடயத்தை ஆதரித்தவர்கள், இச்சிக்கலைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை வேண்டினர். அப்போதைய பண்பாட்டு அலுவல்கள், தகவல் அமைச்சர் இறைச்சி உணவுப் பொருட்கள் தொலைக் காட்சியில் விளம்பரம் செய்யப்படுவதற்குத் தடைவிதித்தார். மூன்று மாதங்களுக்குப் பின் அரசாங்கம் அத்தடையை அகற்றியது. 1956 ஆம் ஆண்டின் இறைச்சிக்கடைக்காரர் திருத்தச் சட்டம், 1958 ஆம் ஆண்டின் விலங்குகள் கொடுமைத் திருத்தச் சட்டம் போன்ற காலத்துக்குக் காலம் இயற்றப்பட்ட சட்ட வாக்கங்களும் இவ்விடயம் தொடர்பான பிற சட்டங்களும் இனங்கண்டு இங்கு ஆராயப்பட்டுள்ளன.

இறுதியாக மாடு வெட்டுவதில் காணப்படும் ஈவிரக்கமின்மை, கொடுமை பற்றிய விவாதத்தில் ஆயிரமாயிரம் ஆடுகள், செம்மறிகள், பன்றிகள், இலட்சக்கணக்கான கோழிகள் என்பவற்றை வெட்டுவதிலும் இலட்சக் கணக்கான தொன் மீன்களைக் கொல்வதிலும் உள்ள கொடுமையையும் டொல்பின், ஆமைகள், போன்றவற்றை வெட்டுவதில் காட்டப்படும் மிருகத்தனமும் அதுபற்றிய நயவஞ்சகமும் சரியான பின்னணியில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இக்குழப்பத்துக்கு முற்றுப்புள்ளியிட்டு இவ்விவாதத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்குரிய வழிவகைகளும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன.

அதன் ஓர் உறுப்பினராகவுமிருந்தார். "விலங்கு வேளாண்மைச் சபை" என்ற பெயரில் ஓர் இறைச்சிச் சபை தாபிக்கப்பட வேண்டுமென குழு சிபாரிசு செய்தது. மூன்றாண்டுகளுக்குப் பின், அடுத்த அரசாங்கம், தேசிய பண்ணை விலங்குச் சபையைத் தாபித்தது. (6)

1972ன் 11ஆம் இல. அரச கமத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் இச்சபை குறித்த அறிவித்தல் 1973 மே 4ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

அமைச்சரவை 345/1ஆம் இல. அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் 1974 ஏப்ரல் 3ஆம் திகதி 8.8 கோடி ரூபா அதிகாரமளிக்கப்பட்ட மூலதனத்தை அங்கீகரித்தது. இதில் 2.7 கோடி வெளிநாட்டு செலாவணிக் கூறும் அடங்கும். இதனை ஆடு /மாடு வெட்டும் கூடங்கள் திட்டத்துக்காக டென்மார்க் (டனிடா) அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. நாட்டின் முழு இறைச்சித் தேவையையும் அடிப்படையாகக் கொண்டு கூடங்கள் திட்டத்தைத் தயாரிப்பதற்கு டனிடா கோப்பன் ஹேகின் உசாத்துணை நிறுவனமொன்றை நியமித்துப் பண்ணை விலங்கு, பண்ணை அபிவிருத்தித் திட்டத்துக்கு உதவவும் 1958ன் விலங்குச் சட்டம், விலங்குவதைச் சட்டம், இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச் சட்டம், மாநகரசபைத் துணைச் சட்டங்கள் என்பவற்றுக்கு ஏற்பவும், கிராமப்புற சமூக - பொருளாதார கலாச்சாரம், சமய உணர்வுகள் என்பவற்றுக்கு அமையவும் பண்ணை அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்தவும் இந்த உதவி பெறப்படவிருந்தது. நடைபெற்றுக் கொண்டிருந்த விவாதம் தொடர்பான விலங்கு வெட்டும் குரூர முறை, விலங்குகளை ஏற்றிச் செல்வதில் இடம்பெறும் கொடுமை, சுகாதாரக் கேடான நிலைமைகள், சினையுற்ற விலங்குகள், பால்தரும் பசுக்கள், கன்றுகள் போன்றவற்றை சட்ட முரணாக வெட்டுதல், கடைகளில் சட்ட விரோதமான மாட்டிறைச்சி விற்றல் போன்ற எல்லா விடயங்களும் ஆராயப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறைச்சி வியாபாரத்தைக் கட்டுப்படுத்தும் மொத்த இறைச்சி வியாபாரிகள் அமைப்பு தம் சமயத் தலைவர்களுடன் ஆலோசனை செய்தபின், நவீன தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டு விலங்குகளை மயக்கிய பின், பிற விலங்குகளுக்குத் தெரியாமல் ஹலால் முறைப்படி வெட்டுவதற்கு இணங்கியது.**

உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெண் விலங்குகளையும் இனப்பெருக்கத்துக்கு உகந்த விலங்குகளையும் காப்பதற்கும் பண்ணைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கும் கிராமிய பண்ணை விலங்குகளை அபிவருத்தி செய்வதற்குமான 1958ன் 29ஆம் இலக்க விலங்குகள் சட்டத்தையும், விலங்குகள் விற்றல், வைத்திருத்தல், ஏற்றிச் செல்லல் ஆகியவை தொடர்பான விலங்குவதைச் சட்டத்தையும் பயனுள்ளவகையில் செயல்படுத்துவதற்கு குறிப்பாக தேசிய பண்ணைவிலங்கு அபிவிருத்திச்சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

1975 இறுதியளவில் இறைச்சி அதிகமாக நுகரப்படும் பிரதேசங்களில் மூன்று பெரிய நவீன ஆடு, மாடு வெட்டும் கூடங்களை நிறுவுவதற்கும் மாகாணங்களில் நடுத்தர அளவிலான மூன்று கூடங்களை அமைப்பதற்குமான வடிவமைப்புகள் தயாரிக்கப்பட்டிருந்தன. நிர்மாணத்திட்டத்தைத் தயாரிப்பதற்கும் பொறித்தொகுதிகள், இயந்திரங்கள், புகைவண்டிப் பெட்டிகள், குளிரூட்டிய டிறக்குகள் என்பவற்றுக்குமாக வெளிநாட்டு ஒப்பந்தங்காரர்களுடன் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன.

### 4.0 தே.ப.வி.அ. சபையின் ஆடு, மாடு வெட்டும் கூடங்கள் தொடர்பான திட்டம்

1973 மே 4 ஆந்திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட பணிகளுக்கமைய, அமைச்சர் அவையினால் அங்கீகரிக்கப்பட்ட 1973 ஆகஸ்ட் 01 ஆந்திகதியின் முதலீட்டு, அபிவிருத்தித் திட்டம், அதிக இறைச்சி நுகரும் மேற்கு வலயத்திற்குரிய மூன்று பெரிய கூடங்களையும் வடக்குக்கும் கிழக்குக்குமான மூன்று நடுத்தர கூடங்களையும் அவற்றுக்குத் துணையான 50 கொள்வனவு நிலையங்கள், 18,200 ஏக்கர் வைத்திருத்தல் நிலத்தையும் கொண்டிருந்தது. கோப்பன்ஹேகன் என்.ஈ.வென்பேக் ஏ/எஸ் கன்சல்டன்ட்ஸ் தாபனம், திட்டத்தைத் தயாரிப்பதற்கு டனிடா உதவித்திட்டத்தின் கீழ் நிபுணர் ஒருவருக்கு ஏற்பாடு செய்தது. மதிப்பிட்ட மூலதனச் செலவில் 48.81 மி. ரூபா உள்நாட்டுச் செலவும், 23.42 மி. ரூபா வெளிநாட்டுச் செலவுமாகும்.

**முக்கிய குறிக்கோள்களாவன:**

1. ஆடு,மாடுகளை வெட்டுவதற்குரிய ஒரே அதிகாரசபையாக அமைந்து, அதன் மூலம் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தல்:

(அ) ஹலால் முறையில் வெட்டுவதற்கு லெவ்வைகள் அமர்த்தப்படுவதுடன் ,மனிதாபிமானமுறையை உபயோகித்தல்;

(ஆ) 1958ன் விலங்குச் சட்டத்திற் கூறப்பட்டுள்ள தடுக்கப்பட்ட விலங்கினங்கள் வெட்டப்படுவதை ஒழித்து, உற்பத்தியில் ஈடுபடும் விலங்குகளைக் காத்தலும் தேசிய பண்ணை விலங்குகளின் எண்ணிக்கை குறைவதைத்தடுத்தலும்; எருமை, வெள்ளாடு, செம்மறி என்பவற்றைக் காப்பாற்றி, பண்ணை அபிவிருத்தியையும் ஆட்டிறைச்சிக் கைத்தொழிலையும் ஊக்குவித்தல்.

(இ) இறைச்சிக்காக விலங்குகளை விற்றல், வாங்கலில் காணப்படும் தீச் செயல்களையும் துஷ்பிரயோகத்தையும் ஒழித்தல்; விலங்குகளை ஏற்றிச் செல்கையில் கொடுமை செய்தலையும் துஷ்பிரயோகங்களையும் ஒழித்தல்;

(ஈ) சுகாதாரச் சான்றிதழ் வழங்கப்பட்ட ஆரோக்கியமான இறைச்சியை உள்ளூராட்சி மன்றங்களின் உத்தரவு பெற்ற இறைச்சிக் கடைகளுக்கு வழங்குதல்; ஏனைய குளிரூட்டிய உணவு வகைகளை விற்கும் கடைகளுக்குப் பையிலிட்ட இறைச்சி வழங்குதல்.

இவ்வாறாக, இறைச்சிக் கடைக்காரரின் சில்லறை வியாபாரமும் உள்ளூராட்சி மன்றங்களின் வருமானமும் பாதிக்கப்படாமலிருக்கும்.

### 5.0. வெட்டும் கூடங்கள்திட்டம் கைவிடப் பட்டு துணைச்சட்டங்கள் ஒதுக்கப்படல்.

1977ல் அரசாங்கம் ஆடு, மாடு வெட்டும் கூடங்கள் திட்டத்தை இரத்துச்செய்து, தே.ப.வி.அ. சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட பணிகளை ஒதுக்கி வைத்தது; அத்துடன் அச்சபையை ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைபோன்ற பெருந்தோட்ட முகாமைச் சபையின் ஒரு சிறு அமைப்பை ஒத்ததாக ஆக்கி, கால்நடை வளர்த்தலை ஒரு பக்கப் பணியாக ஆக்கிற்று. படிப்படியாக, 1956ன் விலங்குச் சட்டமும் 1958ன்விலங்குவதைச்சட்டமும் பயன்படாமல் போயின. 1981ல் கொழும்பு மாநகரசபை விலங்கு மருத்துவத் திணைக்களத்துக்கு, அச்சபையின் துணைச் சட்டங்களின் (xii)ஆம் அத்தியாயத்தின் (36)ஆம் விதியைப் புறக்கணித்துச் செயலாற்றுவதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. இவ்விதி, கொழும்பு மாநகரசபை எல்லைக்கு அப்பால் வெட்டப்பட்ட இறைச்சி விற்பதற்குத் தடைவிதிக்கிறது. இவ்வாறாக, கொழும்பு நகர எல்லைக்கு வெளியில் எங்கிருந்தும் கொண்டு வரப்படும் விலங்குக் கூண்டுகள் தெமட்டக்கொடையிலுள்ள வெட்டும் கூடத்தில் முத்திரையிடப்பட்டு (விலங்கு மருத்துவப் பரிசோதனைக்குப் பின் எனக் கருதப்படுகிறது) நகர இறைச்சிக் கடைகளில் விற்க அனுமதிக்கப்படுகிறது. முத்திரையிடுவதற்குக் கிலோ ஒன்றுக்குக் கட்டணமாக 12 சதம் அறவிடப்படுகிறது.

இக்காலகட்டம் பெரும் மாற்றங்கள் இடம் பெற்ற கால கட்டமாகும்; திறந்த பொருளாதார தாராளமயக் கொள்கை அறிமுகப் படுத்தப்பட்டு, தனியார் துறைக்கு முன்னணித்துறை அந்தஸ்து அளிக்கப்பட்ட வேளையாகும். சட்டசபையிலிருந்து, நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதிக்கு அதிகாரம் முற்றாக கைமாற்றப்பட்டதோடு, கீழ்மட்டத்திலிருந்த அதிகார நிலைகள் வலுவிழக்கச் செய்யப்பட்டன. அரசாங்கத்துறை வகை சொல்லும் பொறுப்பு, நிதி ஒழுங்கு விதிகள், நிருவாக ஒழுங்குவிதிகள் போன்றவை அர்த்தமற்றவையாகின. அரசாங்க சேவை ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு போன்றவை உயிரற்றவையாக்கப்பட்டன. சட்டத் தொகுப்பிலுள்ள பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டவாக்கங்கள் ஒரு புறம் ஒதுக்கப்பட்டன. தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் ஒருங்கிணைந்த பணிகளும் பலியான வற்றில் ஒன்றாகும். இப்பொழுது, தனியார்துறை இறைச்சி வியாபாரத்துக்கு பரவலான சுதந்திரம் வழங்குவதே நோக்கமாகத் தோன்றியது. இதை யடுத்தே மேற்கூறிய விதிவிலக்கு மாநகரசைபவிலங்கு மருத்துவத் திணைக் களத்துக்கு அளிக்கப்பட்டது. தே.ப. வி.அ.சபையின் ஒருங்கிணைந்த பணிகளை இரு வேறு காரணங்களுக்காக இருவேறு சுய அக்கறைக் கும்பல்கள் எதிர்த்தன; ஒன்று அரசாங்க சார்பான இறைச்சிக் கடைக்காரர்களுக்கு ஆதரவு தேடுவோர்; மற்றையது விலங்குற்பத்தி சுகாதாரத் திணைக்களம். இறைச்சி வியாபாரம் தொடர்பான பணிகள் தனக்கு மட்டுமே உரியது – அதாவது தனிப்பட்ட விலங்கு மருத்துவம் – எனக்கோரி தொடக்கத்திலிருந்தே தே.ப.வி.அ.ச. பணிகளை எதிர்த்து வந்தது.

இதன் விளைவு இன்று கண்கூடு. வெட்டுவதற்கு முன்பும் வெட்டும் பொழுதும் விலங்குகளுக்கு இழைக் கப்படும் கொடுமை, சட்டவிரோதமான இறைச்சி விற்பனை, கருவுற்ற விலங்குகளையும், விலங்குகள் சட்டத்தில் தடைசெய்யப்பட்டுள்ள வகை விலங்குகளையும் வெட்டுதல் என்ப வற்றுக்கு எதிராக பொதுமக்கள் சென்ற சுமார் ஒராண்டு காலமாக எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இதைவிடப் பாரதூரமான விளைவுகள் அவ்வளவு வெளிப்படையாகத் தோற்றுவதில்லை. இறைச்சி பதனிடும் தொழிலில் ஈடுபட்டுள்ள தனியார் துறைக் கம்பெனிகள் பெருஞ் செல்வம் சேர்க்கும் அதேவேளையில், ஆயிரக்கணக்கான சிறிய பண்ணக்காரர்களும் கிராமிய கமக்காரர்களும், எருமைகளைக் கொண்டு செய்யப்படும் பயிர்களையும் தம் ஜீவனோபாயத்தையும் இழக்கின்றனர். பண்ணைத் தொழில் நலிவடைதல் பேராபத்தானதாகும். தனியார்துறைக் கம்பனிகளே இதனால் பயனடைகின்றன. அவை கோடிக்கணக்கான இலாபத்தை பால், பாற்பொருட்களின் இறக்குமதி மூலம் அடைகின்றன. உதாரணமாக, பேராதனை கால்நடை அபிவிருத்தி, பாலுற்பத்தி அமைச்சரின் 1991–92 இலங்கை கால்நடைப் புள்ளிவிவர

அட்டவணை 1

| அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை சராசரி | | இறைச்சிக்காக வெட்டப்பட்ட மாடுகள்: மொத்தம் | அவற்றில் ஐரோப்பிய பசுக்கள் | ஐரோப்பிய கலப்பு இனம் | வெட்டப்பட்ட பெண் விலங்குகள்: கன்றுகள் | சினைப் ] பசுக்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1973 (7 மாதங்கள்) | | 8869 | 524 | 1006 | 2284 | 597 |
| 1974 | 163 நாளொன்றுக்கு | 11377 | 223 | 434 | 1164 | 672 |
| 1975 | 195 நாளொன்றுக்கு | 10597 | 32 | 154 | 963 | 861 |

அட்டவணை 2

கட்டம் I : ஆடு, மாடு வெட்டும் கூடங்களின் கொள்திறனும் நாளொன்றுக்கான இறைச்ச் வினியோகமும்

| | மாடு கூடியது | மாடு குறைந்தது | ஆடு செம்மறியாடு கூடியது | ஆடு செம்மறியாடு குறைந்தது | பன்றி கூடியது | பன்றி குறைந்தது |
|---|---|---|---|---|---|---|
| அளவ்வ | 500 | 420 | 500 | 420 | 75 | 60 |
| கட்டுகஸ்தோட்டை | 250 | 200 | 200 | 180 | - | - |
| கட்டுகுருந்த | 50 | 40 | 50 | 40 | - | - |
| மொத்தம் / நாளொன்றுக்கு | 800 | 670 | 750 | 640 | 75 | 60 |
| மொத்த இறைச்சி / நாளொன் றுக்கு (கி.கி.) | 54,000 | 45,000 | 6750 | 5760 | 3375 | 2700 |
| விலங்குகள் / ஆண்டொன்றுக்கு (350 நட்கள்) | 280,000 | 234,000 | 262, 500 | 224,000 | 26,250 | 210,000 |

குறிப்பு : கூடியது - வெட்டும் கூடத்தின் கொள்திறன்
குறைந்தது - தொழிற்சாலையின் செயல்திறனுக்கு அவசியமானது

அறிக்கையின்படி (அட்டவணை 2.4), 1992ல் மொத்த பால் சேகரிப்பு 56.8 மில்லியன் லீட்டர்களாகக் குறைவடைந்திருந்தது. முந்திய ஆண்டில் 73 மி.லீட்டர் சேகரிக்கப்பட்டது. உண்மையில் சிறு கமக்காரர்களினால் உற்பத்தி செய்யப்படும் பாலின் அளவை கூட்டுறவுச் சங்கங்களதும் பண்ணை உற்பத்தியாளர் சங்கங்களதும் சேகரிப்பு பிரதிபலிக்கிறது (அட்டவணை 2.9). 1988ல் 25.7 மில்லியன் லீட்டர்களாக இருந்த சேகரிப்பு 1992ல் 41 சதவீதத்தால் குறைந்து 15.2 மில்லியன்லீட்டராகியது.

### 6.0 தனியார்துறை சட்டவிரோத வெட்டலுக்குரிய அறிகுறி

"இலங்கைக் கால்நடைப் புள்ளி விவரங்கள் 1991/92" அறிக்கையின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றங்களின் பொது ஆடு/மாடு வெட்டும் கூடங்களில் வெட்டப்பட்ட கால்நடைகளின் அடிப்படையில் இறைச்சி நுகர்வு 1980 நடுப்பகுதியில் 13.64 மி.கிலோகிராமாக இருந்து 1989/90ல் 10.52 கி.கி.ஆக வீழ்ச்சியுற்றது. இக்காலப் பிரிவில் எருமைகள் வெட்டப்பட்டதாகப் பதியப்படவில்லை. இதற்கு மாறாக, மத்திய வங்கியின் 1986/87 நுகர்வோர் நிதி, சமூக பொருளாதார அளவையின்படி மாட்டிறைச்சி நுகர்வு 24.12 மில்லியன் கிலோவாகும். தொகைமதிப்பு, புள்ளிவிவரதிணைக் களததின் கணிப்பின் பிரகாரம், 27.54 மி.கிலோ மாட்டிறைச்சி நுகரப்பட்டது. கள்ளத்தனமாக வெட்டப்படும் அளவு, பதியப்பட்டதைவிட இருமடங்காகும் என மதிப்பிடப்பட்டிருப்பதனால், இப்புள்ளி விவரங்களில் நுகரப்படும் இறைச்சியின் அளவு மிகக்குறைவாகவே கணிக்கப்பட் டுள்ளது. கள்ளத்தனமாக ஆடு, மாடு வெட்டுதல், பல முறைகேடுகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கிறது. இதைப்பற்றித் தான் சென்ற 10 மாதங்களாகப் பத்திரிகைகளில் விவாதம் நடைபெறு கிறது. ஈவிரக்கமற்ற முறையில் வெட்டுதல், விலங்குகளை ஏற்றிச் செல்வதில் கொடுமை, கள்ளத்தனமாக வெட்டி நகர இறைச்சிக்கடைகளில் விற்றல், தடுக்கப்பட்ட விலங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைகளை வெட்டல் முதலிய விடயங்கள் குறித்து விவாதம் நடைபெறுகிறது.

### 7.0 'கல்கவ மிதுரோ'

அரசாங்கத்தின் இக்கட்டுப்பாடற்ற கொள்கை சென்ற 10 மாதங்களாகப் பத்திரிகை எழுத்தாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 'கல்கவ மிதுரோ' ('வண்டியிழுக்கும் எருதின் நண்பர்கள்') என்ற இயக்கம் 'ஜலண்ட' பத்திரிகையில் 4.12.92, 22.12.92 ஆகிய திகதிகளில் பினவருமாறு கூறியது:

1. கொழும்பு மாநகரசபை ஆடு/மாடு வெட்டும் கூடத்தில் நாளொன்றுக்கு 50–60 மாடுகள் (4000 – 5000 கிகி) வெட்டப்படுகின்றன. ஆனால் இறைச்சிக் கடைகளில் 15,000–20,000 கிலோ இறைச்சி விற்கப்படுகிறது. சட்டவிரோதமான இறைச்சி விற்கப்படுவதை இது காட்டுகிறது.

2. இவ்வாறு தீமை செய்வதற்கு ஒரே நோக்கம் பணஞ் சம்பாதித்தலேயாகும். பதனிட்டு பொதியடைத்த இறைச்சியைச் சந்தையில் கொட்டும் தாபனங்கள், இறைச்சியை, பயிற்சியும் நேர்மையும் இல்லாத இறைச்சிக் கடைக்காரக்களிடமிருந்து பெற்றுக் கொள்கின்றன. அத்துடன் வெளிநாட்டு வர்த்தகர்களுக்கும் பெரும்பாலும் அபிவிருத்தியடைந்த நாடுகளிலிருந்து இங்குவரும் உல்லாசப் பிரயாணிகளுக்கும் மாமிச உணவு வழங்கும் சுற்றுலா ஹோட்டல்களும் அவற்றுக்குத் தேவையான இறைச்சியை இத்தகைய இடங்களிலிருந்தே பெற்றுக் கொள்கின்றன.

3. இவ்வாறு கண்டவாறு பெருமளவில். வெட்டப்படுவதனால் கமத்தொழிலுக்கு மிகவும் பயனுள்ள எருமைகளும் காளைமாடுகளும் எண்ணிக்கையில் குறைந்து வருகின்றன. பிற நாடுகளிற் போலன்றி, இங்கு விலங்குகள் வெட்டுவதற்காக வளர்க்கப்படுவதில்லை. வெட்டப்படும் விலங்குகள் வீடுகளில் வளர்க்கப்படுபவையாகும். இவை கிராமப் புறங்களி லிருந்து நகர்ப்புறங் களிலுள்ள வெட்டும் கூடங்களுக்கு கொண்டுவரப்படுகின்றன. இவை எமது விவசாய-பொருளாதார கலாசாரத்தினதும், பாரம்பரியத்தினதும் கிராம மக்களின் வருமானத்தினதும் முதுகெலும்பாகும்; இதனால் நாட்டின் கமத்தொழிலும் பொருளாதாரமும் பாதிக்கப்படுகின்றன.

4. கால்நடை உற்பத்தி, சுகாதார (திணைக்கள)ப் பணிப்பாளர், சென்ற ஆண்டு 'ஜலண்ட' பத்திரிகை அறிக்கை ஒன்றில், அதிகாரமளிக்கப்படாத மாட்டிறைச்சி வெளியிடங்களிலிருந்து கொண்டுவரப் பட்டு, மாநகரசபை சுகாதாரப் பிரிவின் முத்திரையிட்டு விற்கப்படுவதாகக் கூறியுள்ளார்.

5. வண்டிகளில் ஏற்றிச் செல்கையில் இறக்கும் விலங்குகளின் கூண்டுகளும் அசுத்தமான, அருவருப்பூட்டும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற வெட்டும் கூடங்களில் வெட்டப்படுகின்றன. இதனால் அருகிலுள்ள நெல்வயல்கள, நீரோடைகள், ஆறுகள் என்பன கழிவுப் பொருட்களால் அசுத்தமடைகின்றன. இது ஒரு பெரும் சுகாதாரக் கேடாகும்.

6. உள்ளூராட்சி மன்றங்கள் விலங்கு கள் வெட்டப்படுவதைக் கிரமமாக மேற்பார்வை செய்வதில்லை. விலங்குகள் வெட்டப்பட முன்னர், அவை பரிசோதிக் கப்படுவதுமில்லை. வெட்டப்பட்ட பின்பே இறைச்சியில் உள்ளூராட்சி மன்ற முத்திரை பொறிக்கப்படுகிறது. ஆதலால் உள்ளூர்ச் சந்தைகளுக்கு வழங்கப்படும் இறைச்சி எச்சந்தர்ப்பத் திலும் நோயுள்ள விலங்குகளுடையதாக இருக்கலாம்.

### 8.0 அழுகிய மாட்டிறைச்சி

இதனை எழுதும் பொழுது (யூலை 1993) 'கல்கவ மித்துரோ' விடுத்த எச்சரிக்கை நடைமுறையில் நிரூபணமாகி விட்டதாகத் தோன்றியது. நகரில் விற்பனையாகும் சில வகை இறைச்சி உண்பதற்குப் பொருத்தமற்ற, நோய்த் தோற்றமுள்ளதாகக் காணப்படுவதாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் 1993 ஜூலை 14 'ஜலண்ட' பத்திரிகைச் செய்தி மூலம் எச்சரிக்கை விடுத்திருந்தது. தெமட்டகொடை கொல்களத்தினூடாக பரீட்சித்து, முத்திரையிட்டு, வழங்கப்படும் இறைச்சி உணவுக்கு முற்றிலும் பொருத்தமானது எனக் கொழும்பு மாநகரசபை ஒரு கூற்றை வெளியிட்டது. அத்துடன், சான்றிதழ் பெறாத இறைச்சிக் கடைகளிலிருந்து கள்ளத்தனமாக வெட்டப்படும் இறைச்சியை வாங்க வேண்டாம் என்றும் அறிவித்தது.

### 9.0 ஆடு மாடு வெட்டுவதில் கொடுமை பற்றிய விவாதம்

கண்டி கொல்களத்தில் ஆடு/மாடு வெட்டுவதற்குக் கைக்கொள்ளப் படும் ஈவிரக்கமற்ற முறைகள், சுகாதாரக் கேடான நிலைமைகள் போன்ற பிரச்சினைகளை சென்ற ஆண்டு நவம்பர் மாதம் அளவில் டாக்டர் ஜி.கொடமுன்ன பத்திரிகைகளுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் கிளப்பினார். அதன்பின்னர், அவர் பல கடிதங்களைப் பத்திரிகை களுக்கு எழுதினார். அவர் அவற்றை நல்லெண்ணத்துடன் எழுதினாரேயன்றி சாதி, சமயத்துக்கு அல்லது மாமிசம் உண்போருக்கு எதிரான காழ்ப்புணர்ச்சி யுடன் எழுதவில்லை. அவர் ஆழ்ந்த சமயப்பற்றுள்ள பௌத்தராகவும், கருணைமிக்க ஒருவராகவும் இருந்தமையால் கொல்களத்திலிருந்து விலங்குகளைக் காத்து, திறந்த வெளிகளில் அவை வயதாகி இறக்கும் வரை விட்டு வைத்து, அதன்மூலம் புண்ணியம் பெறவே நாடினார். அவரது எண்ணத்தை ஒரு சிறு அளவிலேயே செயல்படுத்த முடியும். பெருமளவில் செயல்படுத்தப் பட முடியாது. ஏனெனில், தேசிய அபிவிருத்திப் பிரச்சினை பற்றிச் சிந்திக்கையில், ஏறத்தாழ 30 இலட்சம் விலங்குகளிலிருந்து சுமார் 500,000 ஆடு மாடுகளும் எருமைகளும் ஆண்டுதோறும் வெட்டப்படுகின்றன. ஆண்டுதோறும் இந்த எண்ணிக்கை இருமடங்காகப் பெருகுகின்றது. பெருகிவரும் குடிசனங்களுக்கும் காணி தேவ்வப்படுகிறது. அதேவேளை ஆடுமாடுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மறிகளும் காட்டெருமைகளும் யானைகளும் நிலத்துக்காக மனிதனுடன் போட்டியிடுகின்றன. இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் ஒரு சிறிய நாட்டுக்கு இது ஒரு பெரும் பிரச்சினை யாகும்.

### 10.0 எரிச்சலான விவாதம்.

டாகடர்.டீ.பி.அதுகோரளாவும் 'கல்கவ மித்துரோவும்' விவாதத்தை மேற்கொண்டு, 1992 நவம்பரிலும் திசெம்பரிலும் பத்திரிகையில் நீண்ட கட்டுரைகளை எழுதித் தம் போராட்டத்தைத் தொடங்கினர். அரசாங்கம் தலையிட்டு, முஸ்லிம்கள் கைக்கொள்ளும் ஈவிரக்கமும் மனிதாபி மானமுமற்ற ஆடுமாடுவெட்டும் முறையை நிறுத்த வேண்டுமென்றும், கொல்களங்களில் வெட்டமுன், அதிரச்செய்யும்பட்டி அல்லது பட்டிக் கைத்துப்பாக்கியைப் பிரயோகித்து மிருகங்களை உணர் விழக்கச் செய்வதனைக் கட்டாய மானதாக்க வேண்டுமென்றும் கோரினர். இரத்தம் வழிந்தோடச் செய்வது இஸ்லாம் சமயத்தில் கட்டாயமானதாகையினால் அதிர்ச்சி யடையச் செய்த பின்பே கழுத்து இரத்தக் குழாய்களை வெட்டுவது கட்டாய மாக்கப்பட வேண்டும் என்றும் கோரப் பட்டது. துரதிர்ஷ்டவசமாக, போற் றத்தக்க இப்பணி, சென்ற 10 மாதங்களாக நடைபெறும் எரிச்சலூட்டும் பகிரங்க விவாதத்தில் கரைந்து மறைந்து விட்டதோடு, ஒரு சமய, இன எதிர்ப்புப் போராட்டமாகவும் மாறியுள்ளது. பௌத்த பிக்குகள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் சம்பந்தமான பிரச்சினைகளும் இதில் சிக்கியுள்ளன. இதனை ஆதரிப்பவர்களுக்கும் எதிர்ப்பவர்களுக்கு மிடையில் பல வாதப்பிரதிவாதங்களும் குற்றச்சாட்டுகளும் உணர்ச்சித்தூண்டல்களும் அனாவசியமாக இடம் பெற்றுள்ளன. விவாதத்தை முன்னின்று நடத்தியவர், மாடுகள் வெட்டப்படும் ஈவிரக்கமற்ற முறையையும், அவை கத்திக் கதறுவதையும், கண்ணீர் விடுவதையும், பற்றியெல்லாம் விரிவாக வர்ணித்து எழுதியமை தேவையற்ற பிளவை ஏற்படுத்தியது.

முக்கியமான விடயம் சூடேறிய விவாதத்தில் இழக்கப்பட்டுவிட்டது. இந்த விவாதத்துக்குச் சென்ற 10 மாதங்களாக இடம் ஒதுக்கிய ஒரு பத்திரிகை இவ்விடயத்துக்கு ஆதரவளிப்பதில் பாரபட்சமற்றமுறையில் நடந்து, நாட்டில் இன, மத சகிப்புத்தன்மையையும் அமை தியையும் ஏற்படுத்த ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் இன, சமய வெறிக்கு இடங்கொடா திருந்தால் இதனைத்தவிர்த்திருக்கலாம்.

### 11.0 மாடுவெட்டல் எதிர்ப்புக் குரலின் நயவஞ்சகம்

தாமே ஒழுக்க சீலர்கள் என்ற வீறாப்புடைய வெறியர்கள், எதனையும் சந்தர்ப்ப சூழலிலிருந்து பிரித்தெடுத்து, போர் தொடுப்பதற்குரிய விடயமாக ஆக்கிவிடலாம். ஆடு, மாடு வெட்டுவதற்கு எதிர்ப்புத்தெரிவிப்பவர்கள் இப்பிரச்சினையை நயவஞ்சகத்தில் தோய்த்துள்ளனர். இதைவிடப் பெரிய பிரச்சினைகளையும், இவர்கள் கூறுவதைப் போன்று ஈவிரக்கமற்ற கொடிய முறையில் எருமைகள், ஆடுகள் வெட்டப்படுவதையும் பன்றிகள்அடித்துக் கொல்லப்படுவதையும் கண்டுகொள்ளத் தவறிவிட்டனர். வெட்டுவதில் இழைக்கப் படும் கொடுமை பனிப்பாறையின் முனை மட்டுமே. அது வெட்டுவதிலிருந்து விற்பனையாளர் வரை இழைக்கப்படும் கொடுமையாகும். விவாதத்தின் முன்னணியில் நின்ற பிரதான வாதியின் குரூரமான வர்ணனையில், எருமைகளைக் கொல்வற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதனால் முஸ்லிம் இறைச்சிக் கடைக்காரர்களால் மட்டுமன்றி மற்றவர்களாலும் முற்றாகக் கள்ளத்தனமாக வெட்டப்படுவதைக் குறிப்பிடத் தவறி விட்டார். வெட்டுவதற்கு ஒதுக்கப்படும் வெள்ளாடுகள், செம்மறியாடுகளின் கண்களில் பிரதிபலிக்கும் அச்சம், பன்றிகளின் இருதயங்களில் கூர்மையான இரும்புக் கம்பி செலுத்தப்படுகையில் அவை அஞ்சி நடுங்கி பீதியால் கத்திக்கதறுவது போன்ற பெரும்பயங்கரக் கொடுமைகளை பிரதான ஆதரவாளர் முற்றாகப்புறக்கணித்துவிட்டார். இலட்சக் கணக்கான கோழிகள் கழுத்து நெரித்துக் கொல்லப்படுகின்றன. இவை எல்லா இனத்தவரும் செய்யும் செயலல்லவா ? இந்நாட்டில் டொல்பின், கடலாமை என்பவற்றை உயிருடன் துண்டந்துண்டமாக வெட்டும் மிருகத் தனத்தை என்னென்பது? முஸ்லிம் இறைச்சிக் கடைக்காரர்கள் மாடு வெட்டுவதில் இழைக்கும் கொடுமை பற்றிக் கண்ணீர் வடிக்கும் எல்லா எழுத்தாளர்களும் முஸ்லிமல்லாதவர்கள் இவ்விலங்குகளையும் பறவைகளையும் வெட்டிக்கொல்வது பற்றி வாய்மூடி மௌனிகளாயிருப்பதேன்? உண்மையில், கொழும்பு நகரின் 50 மைல் விட்டத்துக்குள் எருமைகளையும் மாடுகளையும் வெட்டுபவர்கள் முஸ்லிம்கள் மட்டுமல்ல. பெரும்பாலான எருமைகளுக்கும் மாடுகளுக்கும் சொந்தக் காரர்களாக இருந்து, வெட்டுவதற்கு அவற்றை விற்பவர்கள் எச்சமூகத்தைச் சார்ந்தவர்கள்? விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் நிச்சயம் அவர்கள் பெரும்பான்மைச் சமூகத்தைச் சார்ந்தவர்களே.

கருவுற்ற பசுக்களையும் கன்றுகளையும் விற்றலைத் தடைசெய்வது முதல் நடவடிக்கையாதல் வேண்டும். இவ்விலங்குகளை விற்போர் யார் ? கிராமப்புறங்களைச் சேர்ந்த கமக்காரர்களும் முதலாளிகளும் தென்னை முக்கோணத்திலும் மலைநாட் டிலுமுள்ள பண்ணைச் சொந்தக்காரர்களுமே இவற்றை விற்பனை செய்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையானோர் சிங்கள பௌத்தர்களும் பெருந்தோட்டத் தமிழர் (இந்துக்களும் கிறிஸ்தவர்களும்) களுமாவர். வடமத்திய மாகாணத்தினதும் வடமேல் மாகாணத்தினதும் உலர்வலயத்தில் சுதந்திரமாகச் சுற்றித்திரியும் பெருந்தொகையான மாட்டு மந்தைகள் எல்லாச் சமூகத்தவர்களுக்கும் சொந்தமானவை. கிழக்கில் உள்ள மந்தைகளிற் பெரும்பகுதி முஸ்லிம்களுக்குச் சொந்தமானவை. எருமைகள் பெரும்பாலும் சிங்கள பௌத்தர்களுக்குச் சொந்தமானவை. பண்ணை அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரும் பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். சில சமய நம்பிக்கைகள் காரணமாக, பெறுமதியற்ற காளைக்கன்றுகளைக் கொல்ல முடியாததனால் பட்டினி கிடந்து சாக விட்டுவிடுகின்றனர். ஆடு, மாடு வளர்ப்பது ஒரு வியாபாரம். ஐரோப்பிய பண்ணை இனப் பெறுமதி வாய்ந்த கன்றுகள் (முன்னர் இறக்குமதி செய்த பசுக்களுக்கு பிறந்தவை) இவ்வாறாக ஆண்டொன்றுக்கு மலைநாட்டில் மட்டும் 10,000 வரை இழக்கப்படுவதாக 1975ல் அறிவிக்கப் பட்டது.

1992 திசெம்பர் 17ஆந்திகதி 'ஐலண்ட்' பத்திரிகை ஆசிரியர் கருத்துரையில் மிகப்பொருத்தமாகப் பின்வருமாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெட்டப்படும் விலங்குகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்குச் சிறந்த வழி மாமிசம் உண்பதை விட்டுவிடுவதாகும்" என்ற பல எழுத்தாளர்களின் கருத்தை அது பிரதிபலித்தது. அது கூறுகிறது: "உலகை மாற்றுவதற்கு வழியில்லை; மற்றவர்களின் சுவைகளையும் உணவுப் பழக்கங்களையும் ஒருவர் மாற்ற முடியாது. ஆனால், ஒருவர் தமது பழக்கங்களை மாற்றிக் கொள்ளலாம். தாம் கொல்வதில்லை; மற்றவர்கள் கொன்றதையே தாம் உண்பதாகக் கூறு வதில் அர்த்தமில்லை. இறைச்சி சாப்பிடும் ஒருவர் கொல்லுவதற்கு உதவுகின்றார். எல்லாத் தீய செயல்களையும் தவிர்த்து நடப்பவர்களே உண்மையான கருணையும் நல்லொழுக்கமும் உடையவர்கள்; நன்மை பற்றி மற்றவர்களுக்குப் போதிப்பவர்களல்ல."

கொழும்பு 8ஐச் சேர்ந்த தர்மதாச விஜேமான்னவும் இதே வருத்துக்களை எதிரொலித்தார். பௌத்த-இந்து மகா சபை "மாட்டிறைச்சி வேண்டாம் என்று சொல்லுங்கள்" என்ற கருத்தை மேலோங்கச் செய்ய வேண்டும் என்ற கொழும்பு 7, டாக்டர் பீ.எஸ். என்.சேனாநாயக்காவின் கருத்தை அவர் *21.08.93 'ஜலண்ட்'* பத்திரிகையில் பின்தொடர்ந்து எழுதினார். நான் இன்னொருபடி முன்சென்று, இதுவரை மௌனமாக இருந்துவரும் புத்தசாசன அமைச்சு இறைச்சி, மீன் போன்ற எல்லாவகை மாமிசத்தையும் பௌத்தர்கள் உண்பதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறுவேன். இதனைச் செய்வதற்கு பௌத்த பிக்குகளும் இதோபதேசம் செய்ய வேண்டும். என்னதான் சொன்னாலும் இந்நாட்டில் இறைச்சி, மீன் போன்ற புலால் உண்பவர்கள் பெரும்பாலோர் சிங்கள பௌத்தர்கள். உதாரணமாக, இந்துக்கள் சமய நம்பிக்கை காரணமாக மாட்டிறைச்சியைத் தொடுவதில்லை; முஸ்லிம்கள் பன்றியிறைச்சியைத் தொடுவதில்லை. எனவே பௌத்தர்கள் மட்டும் ஏன் செய்யக்கூடாது ?

அடுத்து 'கல்கவ மித்துரோ' 1992 திசெம்பர் 4ஆந்திகதி 'ஜலண்ட்' பத்திரிகையில் பின்வருமாறு கூறுகிறது:

"உணவுக்காக வெட்டப்படும் விலங்குகள் இலங்கையில் சமய வெறிக்கும் நயவஞ்சகத்துக்கும் காரணமாகியுள்ளது. முஸ்லிம்களின் நயவஞ்சகம் மட்டுமல்ல, பௌத்தர்களின் நயவஞ்சகமுந்தான். விலங்குகளுக்குக் கருணை காட்டி அரட்டும் பௌத்தர்களின் நயவஞ்சகம், இதுவரை அவர்கள் விலங்குகளை விடுதலை செய்வதில் காட்டியுள்ள சலுகை, போயா தினங்களில் மட்டும் கொடுமை இழைப்பதைத் தடை செய்து, அதற்கு முந்திய பிந்திய தினங்களில் விலங்குகள் வதைக்கப்படுவதைப் பொருட்படுத்தா திருப்பதாகும்."

### 12.0 மதவெறி

மத வெறியர்கள் பெருங் கொண்டாட்டத்தை நடாத்தி விட்டனர்; இஸ்லாம் இழித்துரைக்கப்பட்டது. இறைச்சிக் கடைக்காரர் மீது மட்டுமன்றி முஸ்லிம்கள் மீதும் பொதுவாக குற்றச்சாட்டுகள் அள்ளிக்கொட்டப்பட்டன. அவர்கள் தம் சமயத்தைக் காப்பதற்கு எழ வேண்டிய தாயிற்று. 1993 ஆகஸ்ட் 3ஆம் திகதி 'ஜலண்ட்' பத்திரிகையில் "கிறிஸ்துவத்தில் வெட்டுதல்" என்ற தலைப்பின்கீழ் கிறிஸ்தவ பைபிள் நூலும் இழிவுபடுத்தப் பட்டது. பைபிள் வரலாறும் குர்ஆனின் கருத்துக்களும் விவாதத்துக்கு உட்பட்டது போன்றே பௌத்த பிக்குகள் இறைச்சி, மீன் முதலியவை உண்பது பற்றியும் பௌத்தர்கள் உட்படப் பல எழுத்தாளர்களால் விமர்சிக்கப்பட்டது. எம்.ஜே. பர்னாந்து, எம்.திலக் ஆகிய இருவரும் 28.5.93 'ஜலண்ட்' பத்திரிகையில் எழுதிய தன்படி, தேவதத்தாக்கள் இறைச்சி உண்பதைக் கூட புத்தர் தடைசெய்யவில்லை எனத் தோன்றுகிறது. உண்மையில் எரிச்சலூட்டும் இந்நீண்டகால விவாதத்தின் போது, அரசாங்கம் தலையிட்டு ஈவிரக்கமற்ற முறையில் ஆடு, மாடு வெட்டப்படுவது நிறுத்தப்பட வேண்டும் எனக்கோரப்பட்டது. எனினும், கொள்கை வகுப்போர், துறை அமைச்சு அதிகாரிகள், உள்ளூராட்சிச்சபை, தனியார்துறை இறைச்சிக் கைத்தொழில் அதிபர்கள், சட்ட நிருவாகிகள், வெட்டுவதற்காக விலங்குகளைப் பரிசோதித்து அனுப்பும் விலங்கு மருத்துவப்பிரிவு, கொழும்பு மாநகரசபை விலங்கு மருத்துவக்கூறு இவர்களில் யாரும் ஒரு வார்த்தையேனும் கூறவில்லை.

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் ஒருங்கிணைந்த பணிகள் ஒதுக்கப்பட்டு, அச்சபை, ஒரு சிறு ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை போன்ற அமைப்பாக ஆக்கப்பட்டது என்பது பற்றி ஏற்கெனவே கூறப்பட்டது. அதேவேளை 1978ல் கமத்தொழில் திணைக்களத்தின் கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பிரிவு ஒரு தனித் திணைக்களமாக தரம் உயர்த்தப்பட்டது. இப்புதிய திணைக்களத்தில் அதிகார நலக்கும்பல் ஒன்றிருந்தது. அரச கால்நடைப்ப ண்ணைகள், விலங்கு மருத்துவத்தொழில் போன்ற பணிகள் தனக்கே உரிய தனியுரிமைகள் எனக்கோரிய இக்கும்பல், தே.ப.வி.அ.சபை அத்துறைகளில் செயற்படுவதை விரும்பவில்லை. எவ்வாறாயினும், 1973/74ல் இச்சபையின் கொல்களத்திட்டத்தையும் பண்ணை விலங்குத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்துப் பொருட்டு 18,057 ஏக்கருக்கு அதிகமான முக்கிய தென்னந்தோட்டக் காணியும் இந்தியா, பாகிஸ்தான், ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கால்நடைகளும் சபைக்கு உரித்தாக்கப்பட்டன. 1993 ஜனவரியில் பெரும் பண்ணைகளும் அவற்றிலிருந்த இறக்குமதி செய்யப்பட்டவையும் பண்ணையில் வளர்க்கப்பட்ட கால்நடைகளும் கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களத்திலிருந்து பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபைக்கு மாற்றப்பட்டன. இதற்குக் கூறப்பட்ட போலிச்சாக்கு 'பண்ணைகளைத் திணைக்களம் திறம்பட நடத்த முடியவில்லை' என்பதாகும். ஆனால் விரைவிலேயே சபை சிறந்த கால்நடைகளை விற்பனை செய்வதற்கு விளம்பரம் செய்ததுமட்டுமல்லாமல், அதன் பெரும் பண்ணைகளிற் சிலவற்றைத் தனியார் துறைக்கு அளிப்பதற்குத் தனியார் துறையைப் பங்குபற்றுமாறும் அழைத் தது.

16.3.93ஆம் திகதி 'ஜலண்ட்' பத்திரிகையில் வெளியான ஓர் ஆசிரியர் தலையங்கம் திரைமறைவிலான இச்செயற்பாட்டின் பின்னணியைத் தெளிவுபடுத்துகிறது:

தே.ப.வி.அ.சபை எட்டுப் பண்ணைகளில் பொறுக்கியெடுத்த கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைகளை விற்பதற்கு விளம்பரம் செய்துள்ளது. ஒரு பண்ணையிலிருந்து 250 விலங்குகளும் இன்னொன்றிலிருந்து 200 விலங்குகளும் மற்றவற்றிலிருந்து குறைந்த எண்ணிக்கையிலானவையும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அனைத்தும் பொறுக்கியெடுக்கப்பட்டவை. இத்தனை தகுதியற்ற விலங்குகள் இப்பண்ணைகளில் இருக்கின்றன என்றால், இப் பண்ணைகளில் இறைச்சிக் கடைக்காகவே கால்நடைகள் வளர்க்கப்படுவதாகத் தோன்றுகிறது. ப.வி.அபிவிருத்திச்சபை கால்நடை அபிவிருத்தி எதுவும் செய்ய வில்லை என்பது புலனாகிறது. வளர்க்கத் தக்க கால்நடைகள் விற்பனைக் கிருப்பதாக விளம்பரம் ஏதும் செய்யப்பட வில்லை. அவ்வாறு செய்திருந்தால் சபையின் பெயருக்குப் பொருத்தமாக இருந்திருக்கும்.

தே.ப.வி.அ.சபை இறைச்சிக் கடைக்கென்றே விலங்குகளை வளர்க்கவில்லை என்றால், போதிய கவனம் செலுத்தாததன் காரணமாக, விலங்குகள், வளர்ப்பதற்கு உகந்ததாக இல்லாமல் இறைச்சிக்கடைக்கே பொருத்தமானவையாக வளர்ந்துள்ளன என்பது தெளிவு. பண்ணைக்காரர்களின் கால்நடைத் தொகுதிகளை விருத்தி செய்து, அதன்மூலம் நாடு பாலில் சுயதேவைப் பூர்த்தியடையத்தக்க வகையில், சபை, வளர்க்கத்தக்க கால் நடைகளை வளர்த்து விருத்திசெய்திருக்க வேண்டும். ஒருவேளை நாம் சொல்வது பிழையாக இருக்கலாம். அது அவர்களின் எண்ணமாக இருந்திராது. எமக்குத் தேவையானவற்றை வழங்குவதற்குப் பன்னாட்டுக் கூட்டுத்தாபனங்கள் எப்பொழுதும் காத்திருக்கின்றன அல்லவா ?

### 14.0 அரசாங்கத்தின் பங்கு

விலங்கு வேளாண்மையையும் பண்ணை அபிவிருத்தியையும் மேம்படுத்துவதற்கு அரசாங்கத் திணைக் களம் ஒன்று உள்ளது. இதற்குப் பல மாகாணசபை அமைச்சர்களுடன், கால்நடை அபிவிருத்தியை மேம்படுத்து வதற்காக ஆராய்ச்சியிலும் விலங்கு மருத்துவ, பிற சேவைகள் அளிப்பதிலும் ஈடுபட்டுள்ள பல திணைக்களங்களும், கமக்காரர்களுக்கு வழங்குவதற்காக கால்நடைகளை வளர்த்துப் பெருக்கும் அரசாங்கப்பண்ணைகளும் ஆதர வாகவுள்ளன. அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் வேலை பார்ப்பதற் காக, இத்துறைகளில் பல்கலைக்கழகங் களிலும் வெளிநாடுகளிலும் பயிற்றப்பட்ட பணியாளர்கள் உள்ளனர். கால்நடை உற்பத்தியைப் பெருக்குவதற்காக அரசாங்கம் ஆண்டுதோறும் அதன் வரவு செலவுத்திட்டத்தின் வாயிலாகவும் வெளிநாட்டு உதவி மூலமும் இலட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்குகிறது. நாட்டுமக்களின் உடல் நலனுக்கு புரதச் சத்தும் பாலும் அத்தியாவசியம் என்பதனாலும், இலட்சக் கணக்கானவர்களின் வாழ்க்கைக்கு வழியாகவும் தொழிலாகவும் அமைகிறது என்பதனாலுமே இவ்வாறு பணம் செலவிடப்படுகிறது. அன்றியும் ஏறத்தாழ 150 உள்ளூராட்சி மன்றங்கள் இறைச்சிக் கடைகளை வாடகைக்கு விட்டும், இறைச்சி வெட்டுவதற்கும் விற்பதற்கும் உத்தரவுப் பத்திரம் வழங்கியும் வருமானம் பெறுகின்றன. தனிப்பட்டவர்களிடமும் பண்ணை விலங்குகள் வளர்ப்பவர்களிடமும், இறைச்சி வியாபாரிகளிடமும் பதனிடும் கைத்தொழில்களிலிருந்தும், காணி உபயோகத்திலிருந்தும் இதனோடு தொடர்புள்ள ஏற்றிறக்குமதிகளிலிருந்தும் வரி அறவிட்டு அரசாங்கம் வருமானம் பெறுகிறது.

பண்ணைவிலங்கு அபிவிருத்தித் திட்டத்திற்கான இம்மாபெரும் முதலீடு கமக்காரர்களையும் அவர்களின் ஜீவனோபாயத்தையும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதையும் இலக்காகக் கொண்டதாகும். 15,000 கிராம அபிவிருத்தித் திட்டங்களும் ஜனசக்தித் திட்டமும், இவ் இலக்குக்குட் பட்டனவாகும். சில மாதங்களுக்கு முன் 50 கோடி ரூபா செலவில் 15,000 செய்திட்டங்களுக்கு 12,000 பசுக்கள் இறக்குமதி செய்யப்படவிருந்தன. உள்நாட்டுப் பண்ணை விலங்குகளின் தரத்தை உயர்த்துவதற்காக காலனி ஆட்சிக் காலத்திருந்தே வெளிநாடுகளி லிருந்து உயரினப் பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டு வந்துள்ளன. பெரும் பாலும் அரசாங்கப் பண்ணைகளில் உள்ள இவ்விலங்குகளும் இறுதியாக இறைச்சிக் கடைகாரரையே சென்ற டைகின்றன.

பண்ணை விலங்கு அபிவிருத்தியை அரசாங்கம் 50 ஆண்டுகளாக ஊக்குவித்துள்ளது. ஆனால், சென்ற தசாப்தத்தில் பாலுற்பத்தி படிப்படியாக குறைந்து, அதற்கேற்ப இறக்குமதி அதிகரித் துள்ளது. அதேபோன்று பாலையும் பாலுற்பத்திப் பொருட்களையும் இறக்குமதி செய்யும் முகவர்களதும் பன்னாட்டுக் கம்பனிகளதும் இலாபமும் அதிகரித்துள்ளது. இவ்வாறாக உள் நாட்டுப் பண்ணைத்தொழில் நலி வடைவதற்கு, தனியார்துறைக்கும் வெளிநாட்டு முதலாளித்துவ வாதிகளுக்கும் ஊக்கமளிக்கும் அரசாங்கக் கொள்கையைக் காரணமாகக் கூறலாம். பண்ணைத் தொழிலின் இறுதிநிலை உற்பத்திப் பொருட்களிற் சிலவாக இறைச்சி உருண்டைகள், இறைச்சிக் குழல்பாளம் என்பவற்றையும் பதனிட்ட தோல், சப்பாத்து, செருப்பு, பட்டி, பைகள் போன்ற தோற்பொருட் களையும் குறிப்பிடலாம். ஏற்றுமதி உபாயமும் வெளிநாட்டு மூலதன முதலீடும் அரசாங்க கொள்கைக்கு வழி காட்டுகின்றன.

### 14.0 அரசாங்க நிதியும் ஆதரவு பெறும் கருத்திட்டங்களும்

இறுதியாக இறைச்சிச் சந்தைக்குச் செல்லும் விலங்குகளையும் பறவை களையும் உற்பத்தி செய்யும் பண்ணைவிலங்கு அபிவிருத்தியில் அரசாங்கம் வகிக்கும் பங்கினை எடுத்துக்காட்டுவதற்கு உதாரணமாக இப்பொழுது நடைமுறையிலுள்ள சில செய்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தற்போதைய அரசாங்க முதலீட்டுத் திட்டத்திலிருந்து ஒரு மேற்கோள்:

"இலங்கை அதன் பால் தேவையில் 70%ஐ இறக்குமதி செய்கிறது. தற்போதை வர்த்தகச் சமநிலை யின்மையைத் திருத்துவதற்காக உள்நாட்டுப் பண்ணைத் தொழிலுக்கு அவசியமான காப்பு வரிக் கட்ட ணங்களும் நிதியுதவியும் அடுத்த பத்தாண்டுகளுக்கு வழங்கப்படும். பிரதானமாக கிராமப்புற உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் பயன்படுத்தி இக்கைத்தொழில் அபிவிருத்தி செய்யயப்படவுள்ளது. புதிய காப்புவரிக் கொள்கை மூலம் கிடைக்கும் வருமானதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதி, மீளமைப்புச் செய்யப்பட்ட பண்ணை அபிவிருத்தி நிதி ஏற்பாட்டு நிறுவனத்தின் மூலம் பண்ணை விவசாயிகளுக்கு உதவுமுகமாக, களத்திட்டங்களுக்கு அளிக்கப்பட வுள்ளது. தேசியப் பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை முகாமை செய்யும் பண்ணைகளின் மூலமும் கிராம மட்ட அடிப்படையைக் கொண்ட இனவிருத்தித் திட்டங்கள் வாயிலாகவும் பாரியதொரு இனவிருத்தித்திட்டம் ஊக்குவிக்கப்பட வுள்ளது.

அடுத்த ஐந்தாண்டுகளுக்கான அரசாங்க உத்தேச முதலீடு 320.7 மில்லியன் ரூபாவாகும். பாரிய திட்டங்கள் வருமாறு:

i. சிறுகமக்காரர் ஒன்றிணைந்த பண்ணை விலங்குத் திட்டம்.

ii. பசுக்கன்று வளர்க்கும் திட்டம்.

iii. செயற்கை இனப்பெருக்கத்திட்டம்.

iV. தேசியப்பண்ணைவிலங்கு அபிவிருத்திச்சபை.

V. ஆ.அ.வங்கியின் 2ஆம் பண்ணை விலங்கு அபிவிருத்தித்திட்டம்.

Vi. மில்கோ பண்ணை அபிவிருத் தித்திட்டம்.

Vii. ஒட்டுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்.

Viii. கோழிக்கழிச்சல் ஊசிமருந்து உற்பத்தி.

அம்பாறை, புத்தளம், அநுராத புரம், பொலநறுவை ஆகிய மாவட்டங் களில் பண்ணைவிலங்குப் பண்ணைகள் புனருத்தாரணத்திற்காக 100 கோடி ரூபா கடன் வசதிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ஏற்பாடு செய்திருப்பதாக 'டெயிலிநியூஸ்' 6.2.93 இதழில் வெளியான கமத்தொழில் அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சின் செய்தி அறிக்கையொன்று கூறியது.

வெளிநாட்டு உதவியுடன் செயற்படும் திட்டங்களிற் சில:

ஆசிய அபிவிருததி வங்கி இரண்டாம் பண்ணைவிலங்கு அபிவிருத்தித்திட்டம், 1983/1991. ரூபா 325,128,000 (கடன்).

ii. உலகவங்கி இரண்டாம் பாற் பண்ணை அபிவிருத்தித்திட்டம் 1985 முதல் 1991 வரை, ரூபா 29,788,525.

iii. தென்மாகாண கிராம அபி விருத்தித் திட்டம் 1991–99. இதில் பண்ணை விலங்கு அபிவிருத்தியும் அடங்கியுள்ளது. ரூபா 1,643,955,470.

iV. ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு 1987

(அ) வெள்ளாடு அபிவிருத்தித் திட்டம் – ரூ.63,320,250 (கொடை)

(ஆ) விலங்கு வேளாண்மையும் பாலுற்பத்தியும் ரூ.31,945,000 (கொடை)

V. சுவீடிஷ் சர்வதேச அபிவிருத்தி உதவி

மாத்தறை கி.அ.திட்டம்; கிராமிய பண்ணைவிலங்கு அபிவிருத்தி ஆக்கக்கூற்றைக் கொண்டது. கி.அ.தி.கட்டம் iii. 1988– ரூ.104,678,500 (கொடை).

இறக்குமதி செய்த வெளிநாட்டு விலைமதிப்புள்ள மாட்டு, எருமைக் கன்றுகள் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபைக்கும் விலங்கு உற்பத்தி சுகாதாரத்திணைக்களத்துக் குமாக இறக்குமதி செய்யப்படுகின்றன. இவை நியூஸிலாந்து, அவுஸ்திரேலியா, டென்மார்க், ஒல்லாந்து, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து பண்ணைக் கமக்காரர்களுக்கு வழங்குவதற்காக வளர்த்துப் பெருக்கு வதற்கு 1965 முதல் 1978 வரை திட்டமிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சின் வெளிநாட்டு வளப்பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்டன:

ஜேர்ஸி பசுக்கன்றுகள் 2,509; அயிர்சயர் 325; பிரெயிசியன் 846; சோதர்ன் 132; ஹரியானா 205; சஹிவால் 350; முர்ரா எருமைப் பசுக்களும் கன்றுகளும் 2,291.

## 15.0 தனியார் துறை

1977 முதல் வரி, தீர்வைச் சலுகைகளைக் கொண்ட தாராள பொருளாதாரக் கொள்கையுடன் தனியார்துறைக்கு முன்னணிப் பங்களிப்பு நிலை வழங்கப்பட்டதனால் பல தனியார் துறைக் கம்பெனிகள் தம் நடவடிக்கை களைப் பன்முகப்படுத்தி, உணவு வியாபாரத்திலும் இறங்கின. உற்பத்திப் பொருட்களைப் பதனிட்டு விற்பனை செய்தல் இந்நடிவடிக்கைகளில் ஒன்று மட்டுமே. மிகப்பெரிய சந்தைப்படுத்தல் தொழில் நிலையங்களும் விளம்பரத் தாபனங்களும் ஈடுபட்டுள்ள இத்துறை கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொண்ட பெரும் வணிகமாகும். அரசாங்கத்தை ஆதரிக்கும் வகையில், பாரிய கம்பனிகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்த்து, அவற்றுடன் கூட்டுச்சேர்ந்து விவசாயப் பொருள் ஏற்றுமதி, ஆடைத் தொழிற்சாலைகள், சுற்றுலா, ஒட்டல்கள், கட்டுமானத் தொகுதிகளை அமைத்தல், ஏற்றுமதிக் கைத்தொழில்கள், பங்குமூலச் சந்தையைக் கட்டியெழுப்புதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

உணவுக் கைத்தொழிலின் ஒரு பாரிய ஆக்கக்கூறு இறைச்சி பதனிட லாகும். பெருமளவிலான விளம்பரத் திட்டங்களும் இம்முழு விவகாரத்தினதும் ஒரு பகுதியாகும். பண்ணை விலங்கு வளர்த்தல், கால்நடை தீனி உற்பத்தி, கமத்தொழில் உற்பத்தி, விலங்கு மருந்து இறக்குமதியும் உற்பத்தியும், உள்ள மைப்பும் சாதனங்களும், பதனிடல், பைக்கட்டிலடைத்தல், அச்சிடல், குளிர்க்களஞ்சியப்படுத்தல், ஏற்றிச் செல்லல், ஏற்றுமதி இறக்குமதித் தொழிலின் ஒருபகுதி, கம்பெனிவரி, விற்பனை மொததவரி, ஆள்வரி ஆயிரக்கணக்கானோருக்குத் தொழில் – இவை அனைத்தும் பண்ணை விலங்குத் தொழில்துறை சார்ந்தவையாகும்.

## 16.0 பரிகாரம்

வெட்டல் என்பது ஒரு நடவடிக்கை மட்டுமே. ஈவிரக்கமற்ற வெட்டல் முறை வேறொரு விடயமாகும். பௌத்தத்தைப் பொறுத்தவரை இது உணர்ச்சி பூர்வமானது; எமது பண் பாடும்கூட. வண்டிமாடுகள், கட்டாக்காலி நாய்கள் போன்றவை நடத்தப்படும் விதத்தில் காணப்படும் ஈவிரக்கமற்ற கொடுமைக்குப் பரிகாரம் மக்களுக்கு அறிவூட்டுவதாகும். மற்றொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிகாரம், ஏற்கெனவே சட்டத் தொகுப்பிலுள்ள சட்டவாக்கங்களை மீண்டும் செயல் படுத்துவதாகும். இவை 1978 முதல் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

**17.0 அரசாங்கச் சட்டவாக்கம்**

கால்நடைகளை-குறிப்பாக மாடுகளையும் எருமைகளையும் - வெட்டுவதையும் சந்தைப்படுத்துவதையும் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் சட்டம் ஆக்கியுள்ளது. இவற்றில் மிக முக்கியமானவை:

0 1958ன் 29ஆம் இல. விலங்குச் சட்டம்

0 இறைச்சிக்கடைக்காரர் திருத்தச் சட்டம் 1956.

0 மாநகர சபைத்திருத்தத் துணைச் சட்டம்

0 தேசியப் பண்ணை விலங்கு அபிவிருத்திச்சபை 1972ன் 11ஆம் இல. அரச கமத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டு 4.5.73 58ஆம் இல. அரசாங்க வர்த்தமானியின் பிரிவு (1)ல் வெளியிடப்பட்டது.

0 ஒட்டு நோய்கள் (விலங்குகள்) கட்டளைச்சட்டம், 1957 திருத்தம் 1961.

0 20. 03. 1961 வர்த்தமானியில் வெளியிடப்பட்ட எருமைகள் வெட்டல் தடை.

0 உணவு, மருந்துச்சட்டமும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்களும்.

**18.0 அரசாங்க நிறுவனங்கள்**

இவ்வொழுங்குவிதிகளில் ஒன்றை அல்லது பலவற்றைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்பான முக்கிய அரசாங்க நிறுவனங்கள:

இறைச்சிக் கடைக்காரர் சட்டத்தின் கீழ் துணைச்சட்டங்களை, ஆக்கிச் செயல்படுத்த வேண்டிய உள்ளூராட்சிச் சபைகள்; குறிப்பாக மாநகர சபைகள், நகர சபைகள்.

1. கொல்களங்களுக்கு உத்தரவுப் பத்திரம் வழங்கி, வசதிகள், பேணல், சுகாதார நிலைமைகளைக் கவனித்தல்.

2. மாநகரசபை, அரசாங்க விலங்கு வைத்தியர்கள் அவர்களுடன்/அல்லது சுகாதாரப் பரிசோதகர்கள் வெட்டுவதை மேற்பார்வை செய்தலையும், விலங்குகள் சட்டத்தின்படி மூலஇடத்தில் விலங்கு வைத்தியரதும் மாவட்டச் செயலாளரதும் அனுமதிப்பத்திரங்கள் பெற்ற, அனுமதிக்கப்பட்ட வகுதிக்குட்பட்ட விலங்குகள் மட்டுமே வெட்டப்படுவதையும் உறுதிப் படுத்தல். தடைசெய்யப்பட்டவை; கருவுற்ற பசுக்கள், பால்தரும் பசுக்கள், கன்றுகள், உற்பத்தியில் ஈடுபட்டுள்ள எருமைகள் என்பன.

3. சுகாதாரப் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது என்பதைக் காட்டுவதற்கு கூண்டு சந்தைக்கு அனுப்பப்படுமுன் முத்திரையிடல்; முத்திரையிட்டு, இறைச்சி சுகாதாரத்துக்கு கேடற்றது, உண்பதற்குப் பொருத்தமானது என்பதை உறுதிப்படுத்தல்.

4. பொதுச்சந்தைகளிலுள்ள இறைச்சிக் கடைகளுக்கு உத்தரவுப் பத்திரம் வழங்கி வாடகைக்குவிட்டு, சுகாதார நிலைமைகளையும் முத்திரையிட்ட ஆரோக்கியமான இறைச்சி விற்கப்படுவதையும் சுகாதாரப பரிசோதகரைக் கொண்டு உறுதிப்படுத்தல்.

விலங்குற்பத்தி, சுகாதாரத்திணைக்களத்தின் பொறுப்பு, அனுமதிக்கப்பட்ட வகை விலங்குகள் மட்டும் சான்றிதழ் கொண்டனவாயிருப்பதையும், நோயுள்ள பகுதிகளிலிருந்து அவ்விலங்குகள் வரவில்லை என்பதையும், இறைச்சி, வியாபாரத்துக்குப் பொருத்தமானவை என்பதையும் உறுதிப்படுத்துவதற்கு விலங்கு மருத்துவர்களைக்கொண்டு விலங்குகள் சட்டத்தை அமுல் செய்வதாகும்.

தேசிய பண்ணைவிலங்கு அபிவிருத்திச் சபை, இறைச்சி அதிகமாக நுகரப்படும் பகுதிகளில் ஆறு நவீன கொல்களங்களை நிர்மாணித்து நடத்துவதற்கும், பாழான நிலையிலிருந்த 137 கொல்களக் கொட்டில்களின் இடத்தில் புதியனவற்றை அமைப்பதற்கும், 'ஹலால்' முறை கைக்கொள்ளப் படுவதற்குமுன் விலங்குகளை அதிர்ச்சியடையச் செய்து, மனிதாபிமான முறை கைக்கொள்ளச் செய்வதற்கும், உத்தரவுபெற்ற எல்லா இறைச்சிக் கடைகளுக்கும் இறைச்சி பதனிடுவோருக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் சான்றுபடுத்திய இறைச்சியை மொத்தமாக வழங்குவதற்குமாக 1973ல் தாபிக்கப்பட்டது. உற்பத்திக்கு உதவும் பசுக்கள், இனப்பெருக்க விலங்குகள் என்பவற்றைக் காப்பதற்கும், பண்ணை அபிவிருத்தியையும் பயிர்களும் பண்ணை விலங்குகளும் ஒருங்கிணைந்த ஜீவனோபாயப் பாங்குகளை நிலைபெறச்செய்வதற்கும், அவசியமான பண்ணைவிலங்கு அபிவிருத்தியையும் 1956ன் 29ஆம் இலக்க விலங்குகள் சட்டத்தை அமுல்செய்ய தேசியப் பண்ணைவிலங்குகள் அபிவிருத்தி சபைக்கு திட்டவட்டமாக அதிகாரம் வழங்கப்பட்டது.

**19. பிற விடயங்கள்**

1958ன் விலங்குகள் சட்டமானது, கிராமியப் பொருளாதாரத்துக்குப் பண்ணை விலங்குகள் அளிக்கும் பங்கினைக்காத்து, அபிவிருத்து செய்வதற்கும் பண்ணை அபிவிருத்தியை மேம்படுத்தவும் என நன்னோக்கு கொண்ட சட்டமாகும். எனினும், இதனை அமுல் செய்வதற்கென ஒரே அதிகாரி இல்லாமையும் பொறுப்பு பல உத்தியோகத்தர்களுக்கிடையே பிரிக்கப் பட்டிருந்ததும் இதனைச் செயல்படுத்துவதைக் கடினமாக்கி யுள்ளன. உத்தரவு வழங்கும் எல்லா முறைகளிலும் போன்று உத்தரவுப்பத்திரம் வழங்கும் முறை 1977க்குப் பின் பரவலாகத் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது. இதற்குக் காரணம் நிர்வாகம் அரசியல்மயமாக்கப்பட்டமையும் ஊழல் மலிந்தமையாகும். கால்நடை வெட்டலும் இறைச்சி வியாபாரமும் பல அதிகாரிகளுக்குத் தனிப்பட்ட வருமானத்துக்குரிய வழியாகியுள்ளது. திட்டமிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சின் "இலங்கையில் எதிர் காலத்தில் மாட்டிறைச்சி உற்பத்தி" (1968) எனும் அறிக்கையின் 1ஆம் அத்தியாயத்தின் 11ஆம் பக்கத்திலிருந்து ஒரு மேற்கோள்:

"விலங்குகள் சட்டபூர்வமாக விலைக்கு வாங்கப்படும் அல்லது வேறுவழிகளில் பெற்றுக்கொள்ளப்படும் பிரதேசத்தின் கிராமசேவகரில் தொடங்கி, பொலீஸ், மாவட்டஅரசிறை உத்தியோகத்தர்கள், புகையிரதத் திணைக்கள உத்தியோகத்தர்கள், விலங்கு மருத்துவர்கள் வரை பல அதிகாரிகளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்திப்படுத்த வேண்டியுள்ளது; மறுபுறத்தில், புகையிரதக் களத்திலிருந்து விலங்குகள் அகற்றப்படவேண்டும். பின்னர், கொல்களத்துக்கு எந்த விலங்குகள் கொண்டு செல்லப்படலாம் என்பதை மாநகர சபை தீர்மானிக்கிறது. அதன்பின்னர் சில்லறை விற்பனை நிலையங்களில் பொதுச்சுகாதார சோதனைகாரர்கள் தம் அதிகாரத்தைச் செலுத்துகின்றனர். எனவே, இறைச்சிக் கடைக்காரர்களும் அவர்களின் முகவர்களும் சிக்கலான இந்த சோதனைத் தொடரினூடே விரைவாக வெளியேற வேண்டும். தூர இடங்களில் விலைக்கு வாங்கி வண்டிகளில் ஏற்றப்பட்ட விலங்குகள் 48 மணி நேரததுக்குள், கால்நடைக் கொட்டிலிலிருந்து கொல்களத்துக்கு எடுத்துச் செலலப்பட வேண்டும். இல்லாவிடில் பட்டினி காரணமாகவும் தாகத்தினாலும் இடைப்போக்கில் நிகழும் வேறு சம்பவங்களாலும் விலங்குகள் சுமார் 10% எடையை இழக்கலாம்; சில சந்தர்ப்பங்களில் செத்துவிடலாம்."

உத்தரவுப் பத்திரமுறையும் பல்வேறு அதிகாரிகளால் அமுல் செய்யப்படவுள்ள பல ஒழுங்குவிதிகளும் இலஞ்ச ஊழலை வளர்க்கிறது. 1977ஆம் ஆண்டுக்குப்பின் ஊழல் ஏதோ ஓர் உருவில் கற்பனைக்கெட்டாத அளவு வளர்ந்து, இலங்கை அரசியலின் உச்சிமுதல் அடித்தளம் வரை பரவியுள்ளது என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். இறைச்சி வியாபாரம் இதற்கு விதிவிலக்கானதல்ல. உதாரணமாக, வெட்டுவதற்காக விலங்குகளை ஏற்றிச்செல்லல், உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்குப் பொறுப்பான பல அதிகாரிகளுக்கு ஒரு சிறந்த வருமான வழியாகும். ஒரே வித்தியாசம் 20 ஆண்டுகளுக்கு முன் இவ்வூழல் பழக்கம் மிகக்குறைவாகக் காணப்பட்டது என்பதாகும். காரணம் நிருவாகம் அரசியல் தலையீட்டுக்கு அப்பாற்பட்டிருந்ததும், ஊழல் பழக்கங்களுக்கான செலவு குறைவாக இருந்ததுமாகும்.

**20.0 கால்நடைகளை ஏற்றிச் செல்வதில் கொடுமை**

விவாதத்தில் பங்குபற்றிய பலர், 'விலங்குவதைச்சட்டம்' பயனுள்ள வகையில் அமுல் செய்யப்பட வேண்டுமெனக் கோரினர். உண்மையில் புகையிரத மார்க்கத்தை பலரும் விரும்புகின்றனர். ஏனெனில், விலங்குகள் தூர இடத்திலிருந்து ஏற்றப்பட்டதும் காலையில் அவை கொழும்பு வந்து சேர்கின்றன. உணவும் நீரும் அளிக்கப்படலாம்; ஆனால், இப்பொழுது கால்நடைப் பெட்டிகள் கிடைப்பது அரிது.

லொறிகளில் ஏற்றிச்செல்வது பல வழிகளிலும் ஆபத்தானது. "இலங்கையில் இறைச்சி உற்பத்தியும் சந்தைப்படுத்தலும்" பற்றிய திட்டமிடல், கமத்தொழில் அமைச்சுக் குழுவின் முன்னிலையில் "இறைச்சி மொத்த வியாபாரிகள் சங்கம்" அளித்த விளக்கமான விவரணம் பின்வருமாறு:

> முறைகாவல் கடமையாற்றும் பொலிசுக்காரர், தூரத்தில் வரும் லொறியைக் கண்ணால் காண முன்பே அதில் விலங்குகள் இருப்பதை அறிந்துகொள்வார்கள். செல்லுபடியாகும் சான்றிதழ்கள், அனுமதிப் பத்திரங்கள் இருந்தபோதிலும் அவர்கள் எப்படியோ தடைசெய்யப்பட்ட வகை விலங்குள் லொறியில் இருப்பதைக் கண்டுபிடிப்பர். எல்லாம் சரியாக இருந்தால் 'விலங்குவதைச் சட்டத்தை அவர்கள் துணைக்குக் கொண்டு வந்துவிடுவர்'; அதனை வேண்டியவாறு விளக்கலாம்; தப்புவதற்கு வழியில்லை. மென்று விழுங்கிவிட்டு அகன்றுவிட வேண்டியதுதான். விலங்குத் தொகுதி ஒன்றை தூர இடத்திலிருந்து ஏற்றிச் செலலும் லொறி கொழும்பை அடைவதற்கு முன் இது பல தடவை நிகழலாம்.

அண்மையில் விசாரணை செய்தபோது இவ்வாறாக ஒரு லொறி மாடுகள் ஏற்றிவருவதற்கு இப்பொழுது 5,000 முதல் 7,000 ரூபாவரையில் செலவாகிறது எனத் தெரியவந்தது. கொழும்பைச் சேர்ந்த டாக்டர் அத்துலத்முதலி 4.9.93ல் 'ஐலண்ட்' பததிரிகைக்கு எழுதிய கடிதம் ஒன்றில், ஒரு கொல்களத்திலிருந்து பசு ஒன்றை விடுவிக்கச் சென்றபொழுது ஒரு லொறிச் சாரதியுடன் உரையாடியதாகவும், அவர் தம் லொறியில் மாடுகளைக் கொழும்புக்குக் கொண்டு வருவதற்குச் சோதனையிடும் பல இடங்களில் 25,000 ரூபா கொடுக்க வேண்டியிருந்ததாகக் கூறியதாகவும் குறிப்பிட்டிருந்தார். இறைச்சி விலை கிலோவுக்கு 80 ரூபாவாக உயர்ந்திருப்பது ஆச்சரியத்துக்குரியதல்ல. இது எவ்வாறு கள்ளத்தனமாக பலலாயிரம் கால்நடைகள் கொழும்பை அடைகின்றன என்பதை விளக்குகிறது. 50% லொறிகளைத்தடுத்து நிறுத்திவைத்தால் கொழும்பில் இறைச்சித் தட்டுப்பாடு ஏற்படும். பதனிடும் கம்பெனிகளுக்கும் இறைச்சி கிடைக்காது.

**21.0 மாவட்ட நீதிமன்றத்தீர்ப்பு**

சுவையான வழக்கொன்று கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்டது. இவ்வழக்கை மொத்த விற்பனை செய்யும் இறைச்சிக் கடைக்காரர் ஒருவர், அப்போது நிலவிய விலைநிலவரங்கள் மீதி விதிக்கப்பட்ட தண்டங்களிலிருந்து நிவாரணம் கோரி, சட்டமா அதிபருக்கு எதிராக தொடர்ந்திருந்தார். கற்றறிந்த மாவட்ட நீதிபதி அவர்களின் 1973 ஜனவரி 15ஆம்திகதி தீர்ப்பிலிருந்து ஒரு மேற்கோள்:

> "வாதியும் அவரது இரு சாட்சிகளும் குறிப்பிட்ட பல்வேறு செலவினங்களை ஆராய்ந்தபின், பொலிசுக்குச் செய்த கொடுப்பனவைத் தவிர மற்றெல்லாச் செலவினங்களும் அவசியம் என்றும் நியாயமானது என்றும் ஏற்றுக்கொள்ளலாம்."

அடுத்து, வெளிநாட்டு ஆலோசகர்களாக ஹொப் அண்ட் ஓவர்காட் (கோப்பன்ஹேகன்) டனிடாவின் தேசிய பண்ணைவிலங்கு அபிவிருத்திச் சபையின் கொல்களத்திட்ட மறுபரிசீலனை பற்றிய அவர்களின் 6.2.76ஆம் திகதியின் அறிக்கையில், விலங்குவெட்டல், இறைச்சிச் சந்தை நடவடிக்கைகள் பற்றி 2 1/2 மாதகாலமாக நடாத்திய விசாரணைகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தனர். திரட்டப்பட்ட சாட்சியங்களின்படி, அக்காலத்தில் வெளியூர்களிலிருந்து ஒரு லொறி கால்நடைகளை, பொலிசு சோதனைத் தடைகளைக் கடந்து கொழும்புக்குக் கொண்டு வருவதற்கு 1,000 ரூபா செலவாகியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. 'கள்ளத்தனமாக இறைச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டல், பதியப்பட்ட அளவை விட மும்மடங்காகும்' என்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**22.0 உற்பத்திக்கு உதவும் விலங்குகளை வெட்டுதல்**

1958ஆம் ஆண்டின் விலங்குகள் சட்டம் உற்பத்திக்கு உதவும் விலங்குகளைக் காப்பாற்ற நாடியது. ஆனால், தடை செய்யப்பட்ட வகை விலங்குகள் தொடர்ந்து வெட்டப்படுவதும், முன்னர் இனங்காணப்பட்ட ஐரோப்பிய இன கன்றுகள் ஆண்டுதோறும் 10,000 இழக்கப்படுவதும், பண்ணை இனங்களைப் பெருக்குவதற்குப் போதிய முறைமை ஒன்று இல்லாமையும், இந்நாட்டில் பண்ணை உபதுறையின் மெதுவான வளர்ச்சிக்கும் தேக்க நிலைக்கும், சில காலங்களில் வளர்ச்சியின்மைக்கும் காரணமாகும். எனினும், விலங்கு மருத்துவ ஆராய்ச்சி, உள்ளமைப்பு, தீனி ஆராய்ச்சி, அபிவிருத்தி, இனப் பெருக்கத்துக்காக உயர் இனங்களை இறக்குமதி செய்தல், செயற்கைக் கருவூட்டல் சேவைகள், அரசுப்பண்ணைகள் என்பவற்றுக்காக வெளிநாட்டுதவி உட்பட பெருந்தொகைப் பணம் செலவிடப்படுகிறது. வேறு முக்கிய காரணிகளுமுண்டு.

**23.0 தடைசெய்யப்பட்ட வெட்டுதல்**

எனவே, உள்ளூராட்சி மன்றங்கள் தடைசெய்யப்பட்ட வகை விலங்குகளையோ, விலங்குமருத்துவரின் சான்றிதழும் மாவட்ட அரசிறை உத்தியோகத்தரின் அனுமதிப்பத்திரமோ பெறாத எருமைகளையோ வெட்டுவதற்கு அனுமதிக்கலாகாது; தடைசெய்யப்பட்ட வகை மாடுகளும் எருமைகளும் பெருந்தொகையில் வெட்டப்படுகின்றன. பதியப்பட்டு வெட்டப்படும் விலங்குகளின் எண்ணிக்கையை விட கள்ளத்தனமாக வெட்டப்படும் விலங்குகளின் எண்ணிக்கை இவ்வாறாக அதிகரிக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அரசாங்க உததியோகத்தர்களும் தம் கடமைகளை நிறைவேற்றாதிருத்தல் அவர்களின் குற்றமாகும். தர்ததாச விஜேமான்ன 26.4.93 'ஐலண்ட்' பத்திரிகையில், விலங்கு மருத்துவர்களும் சுகாதார பரிசோதகர்களும் வெட்டு வதற்கான விலங்குகளைப் பரிசோதிப்பதானால் கருவுற்ற பசுக்கள் வெட்டப் படுவது எவ்வாறு என்று வினவினார்.

**24.0 எருமைகள் வெட்டத்தடை**

1962 ஆகஸ்ட் 20ஆம் திகதியின் 13268ஆம் இல.விசேட அரசாங்க வர்த்தமானியின் 1ஆம் பகுதி, முடமான, குருடான அல்லது வளர்ப்பதற்கோ இழுவைக்கோ பொருத்தமற்றவை என அரசாங்க விலங்கு மருத்துவர் சான்றுப்படுத்திய வகைகளைத்தவிர ஏனைய எருமைகள் வெட்டுவதைத் திட்டவட்டமாகத் தடைசெய்கிறது.

எவ்வாறாயினும், எருமைகள் வெட்டப்படுவது தங்குதடையின்றி நடைபெற்றதனாலும் எருமைகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்ததனாலும் 1974 ஜனவரி 23ஆம்திகதியின் 11/74ஆம் இல. அமைச்சரவைத்தீர்மானத்தின்படி, "எருமைகள் வெட்டப்படுவதையும் எருமை இறைச்சி விற்கப்படுவதையும் தடுப்பதற்காக" அரசாங்கம் அவசரகால ஒழுங்குவிதிகளைப் பயன்படுத்தியது. கமத்தொழில் அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சின் "இலங்கைப் பண்ணை விலங்குப் புள்ளிவிவரம் 1991/92"இன் 2.8 அட்டவணை காட்டுகின்றவாறு இது மிகப்பயனுள்ள ஒரு சட்டவாக்கமாகும். உள்ளூராட்சி மன்றங்களின் கொல்களங்களில் வெட்டப்பட்ட எருமைகளின் தொகை உத்தியோகபூர்வமான புள்ளிவிவரங்களின்படி 1974 முதல் துரிதமாகக் குறைந்து, 1979 ல் 7 விலங்குகள் வெட்டப்படும்வரை எருமைகள் வெட்டப்படவில்லை. இதன் விளைவாக எருமைகள் எல்லையின்றிப் பெருகும். முடமான, வேலைக்குப் பொருத்தமற்ற விலங்குகளின் நிலைமை என்ன? அவை எங்கே? கள்ளத்தனமாக வெட்டுவது மலிந்திருப்பது தெளிவு.

**25.0 கள்ளத்தனமாக வெட்டுதல்**

வெட்டுதல் இழைக்கப்படும் கொடுமை இப்பிரச்சினையின் ஒரு சிறு அம்சமே. இவ்வம்சங்களுக்குத தீர்வு காண்பதற்காகவே 1958ன் விலங்குகள் சட்டமும் விலங்குவதைச் சட்டமும் ஆக்கப்பட்டன. ஒரு சில எழுத்தாளர்கள் மட்டுமே சென்ற பத்துமாத கால விவாதத்தில் வேறு அம்சங்கள் பற்றிக் குறிப்பிட்டனர். உத்தரவு பெற்ற கொல்களங்களில் விலங்கு மருத்துவரின் மேற்பார்வையில் விலங்குகள் வெட்டப்படும் பொழுது கொடுமை இழைப்பது பரவலாகக் காணப்படுகிறது என்றால் சட்டவிரோதமாக – குறிப்பாகத் திருடப்பட்ட விலங்குகள் – வெட்டப்படும் பொழுது இழைக்கப்படும் கொடுமை படுமோசமானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. கள்ளத்தனமாக நடைபெறும் வெட்டுதல், சட்டபூர்வமானதைவிட இருமடங்காகும் என்பது முன்னர் காட்டப்பட்டது. பிரிவு 6.0 இல் பல்வேறு பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்பட்டன. 4.12.92 'ஐலண்ட்' பத்திரிகையில் 'கல்கவ மித்துரோ' நெருக்கடிமிக்க வாகனங்களில் விலங்குகள் ஏற்றிச் செல்லப்படும் பொழுதும் வெட்டப்படு முன்பும் இழைக்கப்படும் கொடுமைகளை எடுத்துக்காட்டினர். கள்ளத்தனமாக விலங்குகள் வெட்டப்படுவதனால் கொடுமை அதிகரிக்கிறது. முஸ்லிம் இறைச்சிக் கடைக்காரர்கள் மட்டும் கள்ளத்தனமாக வெட்டுவதில்லை. இவை அனைத்தும் இடம்பெறக் காரணம் விலங்குகளை வெட்டுவதற்கு ஏற்றிச் செல்ல அனுமதிப்பத்திரம் வழங்கும் உத்தியோகத்தர்களும் கொல்களங்களையும் இறைச்சிக் கடைகளையும் மேற்பார்வை செய்யும் உத்தியோகத்தர்களும் தம் கடமைகளை நேர்மையாகச் செய்யத் தவறுவதாகும் என்று 'கல்கவ மித்துரோ' சுட்டிக்காட்டியிருப்பது சரியே. சென்ற ஆண்டு ஒரு சந்தர்ப்பத்தில், "வெளியூர்களிலிருந்து அதிகாரமளிக்கப்படாத இறைச்சி கொண்டுவரப்பட்டு, மாநகரசபைச் சுகாதாரக் கூறின் முத்திரை பொறித்து கொழும்பு இறைச்சிக் கடைகளில் விற்கப்படுகிறது" என்று விலங்குற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் கூறியதாக 'ஐலண்ட்' பததிரிகையில் செய்தி வெளியிடப்பட்டிருந்ததாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். வெட்டுதல் உள்ளூராட்சி மன்றங்களினால் கிரமமாக மேற்பார்வை செய்யப்படுவதில்லை. விலங்குகள் வெட்டப்பட்ட பின்புதான் உள்ளூராட்சி மன்றத்தின் முத்திரை இறைச்சியில் பதிக்கப்படுகிறது. ஆதலால் உள்ளூர் சந்தைகளுக்கு எந்நேரத்திலேனும் வழங்கப்படும இறைச்சி நோயுற்ற பகுதிகளிலிருந்து வருவதாக இருக்கலாம். கொழும்பு மாநகரசபைக் கொல்களதில் தினமும் 40 விலங்குகள் வெட்டப்படுவதாகப் பதியப்பட்டாலும் நகர இறைச்சிக் கடைகளில் சுமார் 20,000 கி.கிராம் இறைச்சி விற்கப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர். இதன்படி மொத்தம் சராசரி 260 விலங்குகள் நாளொன்றுக்கு வெட்டப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1959ன் 29ம் இலக்க விலங்குகள் சட்டத்தின் கீழ், வெளியூர்களில் அரசாங்க லிலங்கு மருத்துவர்கள், மொத்த வியாபார இறைச்சிக் கடைக்காரர்களின் முகவர்கள் கால்நடைகளை வெட்டுவதற்காக வாங்கும் பொழுது சுகாதாரச் சான்றிதழ் வழங்குவதற்குப் பொறுப்பாக இருக்கின்றனர்; மேலும் கொழும்பு, கண்டி மாநகர சபைகளுக்கு வெளியேயுள்ள கொல்களங்களில் விலங்குகள் வெட்டுவதற்கு முன் பார்வையிடுவதற்கும் அவர்கள் பொறுப்பாக இருக்கின்றனர். எனவே, விலங்குப்பத்தி, சுகாதாரத்திணைக் களப்பணிப்பாளர் செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டை அவர் எவ்வாறு செய்திருக்கலாம் என்பது புரியவில்லை. கொழும்பில் விலங்குக் கூண்டுகள் மாநகரசபை விலங்கு மருத்துவரினால் பார்வையிடப்பட்டு முத்திரையிடப்பட்ட பின்பே இறைச்சிக் கடைகளுக்கு வழங்கப்படுகின்றன. இவர்கள்அனைவரும் 1956ன் 46ம் இல. விலங்கு மருத்துவர் தொழில்புரிவோர் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட்டவர்களாவர். ஆதலால், திணைக் களப் பணிப்பாளர் தம் சகாக்க ளின் சார்பில் கூடிய பொறுப்புணர்ச்சி யுடனும் அக்கறையுடனும் செயலாற்றுவார் என எதிர்பார்க்கிறோம்.

தர்மதாச விஜேசிங்க என்பவர் 26.4.93 'ஐலண்ட்' பத்திரிகையில் எழுதுகையில் உள்ளூர் ஆட்சி மன்றங்களின் கொல்களங்களிற் பெரும்பாலானவை பாழடைந்த நிலையில் உள்ள சுகாதாரக்கேடான, பழைய கட்டிடங்கள் அல்லது கொட்டில்களாகும் என்று சுட்டிக் காட்டியுள்ளார். கொல் களங்கள் பேணப்படுவதையும், வெட்டுவதற்கு அனுமதிக்கப்படும் விலங்குகளையும், வெட்டப்படுவதையும் அர சாங்க, உள்ளூராட்சி விலங்கு மருத்துவர்கள் பார்வையிடுகையில் கருவுற்ற விலங்குகள் எவ்வாறு வெட்டப்படுகின்றன என்று அவர் கேட்கிறார்.

**26.0 வெட்டுதல் பற்றிய புள்ளி விவரங்கள்**

இந்தக் கருத்துக்கள் மிகவும் சரியானவை. இலங்கையில் இறைச்சி உற்பத்தியும் சந்தைப்படுத்தலும் பற்றிய குழுவினால் 1968ல் நடததப்பட்ட அளவையின்படி, அதிகாரிகளால் மேற்பார்வை செய்யப்படாமல், தூரப் பிரதேசங்களில் அதிகாரம் பெறாமல் வெட்டப்படும் விலங்குகளுடன், பதிவு செய்யப்பட்ட கொல்களங்களிற்கூட சட்டவிரோதமான விலங்குகள் வெட்டப்படுகின்றன. இக்கட்டுரையாளர் குழுவைக் கூட்டியவரும் குழுவில் திட்டமிடல் அமைச்சின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டவருமாவார். புள்ளி விவரங்கள் செம்மையாக இல்லை என்பது தெளிவாகிறது. ஏனெனில், உத்தரவு பெற்ற கொல்களங்களிற்கூட வெட்டப்படும் கள்ள விலங்குகள் பதியப்படுவதில்லை. எனவே, வெட்டப் படும் விலங்குகளின் தொகையை மதிப்பிடுவதற்கு, மத்திய வங்கியின் நுகர்வோர் நிதிகள், சமூக பொருளாதார அளவை, குடிசன மதிப்பு, புள்ளிவிவரத் திணைக்களத்தின் பண்ணை விலங்குத் தொகைப் புள்ளிவிவரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட இறைச்சி நுகர்வு, தேவை பற்றிய புள்ளிவிவரப் பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்ட முறை கையாளபபட்டது. இவ்விவரங்கள் வெளியிடப்பட்ட பிற மூலங்களிலிருந்தும் "இலங்கையில் இறைச்சி உற்பத்தியின் எதிர்காலம்" என்ற தலைப்பில் இவ்வெழுத்தாளர் பத்தாண்டுகளாகத் தயாரித்த ஆய்வு அறிக்கையிலிருந்தும் பெறப்பட்டன. 1967ல் நாடு முழுவதிலும் வெட்டப்பட்ட பதிவான விலங்குகள் 217,588 மாடுகளும் 5,177 எருமைகளும் என மதிப்பிடப்பட்டது. இது மிகக்குறைவான மதிப்பீடாகும்.

கொழும்பு மாநகரசபையில் பதியப்பட்ட மாடுகள், எருமைகளின் கூண்டுகளின் எடையின் அடிப்படையில் 1967ம் ஆண்டில் நுகரப்பட்ட இறைச்சி 18.9 மில்லியன் கி.கிராம் என மதிப்புடப்பட்டிருந்தது. அதேவேளை, மத்திய வங்கி நுகர்வோர் நிதிகள் அளவையின் பிரகாரம் 1963ல் இறைச்சி நுகர்வு தலைக்கு 3.1 கி.கிராமாகும். இதனை 1967க்குரிய தொடர் அளவாக உபயோகித்து 1967 ஆம் ஆண்டின் சனத்தொகை அடிப்படையில் கணிக்கையில் இறைச்சி நுகர்வு 34.96 மி.கிகி என மதிப்பிடப்பட்டுள்ளது.

பிற காரணிச் சுட்டிகளை கருத்திற் கொண்டு பார்த்தால் 1967ல் 34.96 மி.கிகி இறைச்சியைப் பெறுவதற்கு சுமார் 496,666 மாடுகளும் 38,833 எருமைகளும் நாடு முழுவதிலும் வெட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால் குடிசனமதிப்பு புள்ளிவிவரத் திணைக்களத்தின் மதிப்பீட்டின்படி 217,588 மாடுகளும் 5,177 எருமைகளும் வெட்டப்பட்டன. எனவே, பதிந்து வெட்டப்பட்ட தொகையும் கள்ளத்தனமாக வெட்டப்பட்ட தொகையும் தெளிவாகிறது. மேலும்; தோல் கூட்டுத்தாபனததிலும் புறக் கோட்டைச் சந்தையிலும் 'பெறப்பட்ட உறுதிப்படுத்தப்படாத பதனிட்ட தோல்களின் தொகை வெட்டப்பட்ட மாடுகளின் எண்ணிக்கையினை விட இருமடங்கும் எருமைகளின் எண்ணிக் கையைவிட இருமடங்குக்கும் அதிக மானதுமாகும். ஏற்கெனவே கூறப்பட்டதுபோன்று, கள்ளத்தனமாக எருமைகள் வெட்டப்படுவதைத் தடைசெய்வதற்கு அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்பட வேண்டியிருந்தது என்ற உண்மை, கள்ளத்தனமாக மாடுகளும் எருமைகளும் எந்தளவுக்கு வெட்டப்படுகின்றன என்பதைக் காட்டுகிறது.

அண்மைய புள்ளி விவரங்களும் இத்தகைய செம்மைக்குறைவைக் காட்டுகின்றன. உதாரணமாக கமத்தொழில் அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சின் இலங்கை பண்ணை விலங்குப் புள்ளிவிவரங்கள் 1991/92 ன்படி உள்ளூராட்சி மன்றங்களின் கொல்களங்களில் வெட்டப்பட்ட விலங்குகளிலிருந்து பெற்ற இறைச்சி 1986ல் 13.2 மி. கிகி மும், 1987ல் 12.5 மி.கிகி முமாகும். இக்காலப் பிரிவில் எருமை எதுவும் வெட்டப்பட்டதாகப் பதியப்படவில்லை. இதற்கு மாறாக, மதத்திய வங்கியின் நுகர்வோர் நிதி, சமூக பொருளாதார அளவை 1986/87 இன்படி, நுகரப்பட்ட இறைச்சியின் அளவு 24.12 கிகி ஆகும். குடிசனமதிப்பு, புள்ளிவிவர திணைக்கள மதிப்பீட்டின் படி இது 27.54 மி.கிகி ஆகும். இவ்விரண்டுக்கும் இடையிலான வித்தியாசம் சட்ட விரோதமாக வெட்டப்படும் அளவாகும். எருமை வெட்டல் பதியப்படவில்லை யெனினும் 1988ல் இருந்து எருமைகளின் தொகை குறைந்து வருவதாகத் தெரிகிறது. புள்ளிவிவரங் களின்படி மாட்டிறைச்சி நுகர்வு 1967க்கும் 1987க்கும் இடையில் துரிதமாகக் குறைந்துள்ளது.

மூன்றாம் உலக நாடுகளில் சரியான விவசாயத்துறைப் புள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவரங்கள் கிடைப்பது மிகக்கடின மாகும். சென்ற ஐந்தாண்டுகளில் இலங்கையில் நிலவியதுபோன்ற அரசியல், பொருளாதார ஸ்திரமற்ற நிலை காணப்படும் நாடுகளில் இத்தகைய புள்ளிவிவரம் திரட்டுவது அநேகமாக இயலாததொன்றாகும். எனவே, ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடுகளாவன: காலத்தொடரில் போக்குகளைக் கொண்டு புள்ளிவிவரக் கணிப்புக்களை நியாயப் படுத்துவதும் உண்மையான கணிப்புகளை அடிப்படையாகக் கொண்டு ஒன்றுக்கொன்று துணையான ஒப்புநோக்குகளை மேற்கொள்வதும் அத்தகைய புள்ளிவிவரக் கோரிக்கைகளை நியாயப்படுத்துவதற்கு புள்ளிவிவரச் செய்முறைகளைக் கையாள்வதுமாகும். ஒரு வழமையான நிர்வாகப் பணியாக குடிசனமதிப்பு, புள்ளிவிரத்திணைக்கள புள்ளிவிவர ஆய்வாளர்களுடன் இணைந்து கிராம சேவகர்கள் அறிவிக்கும் தகவல்களைக் கொண்டு அத்திணைக் களம் தாயாரிக்கும் வருடாந்த பயிர், பண்ணைவிலங்குப் புள்ளிவிவரங்களில் ஐயப்பாடு வெளிப்படுகிறது. முந்திய ஒரு காலப்பிரிவில் கிராமத் தலைமைக்காரர்கள் அவ்வப்பகுதிகளைச் சார்ந்தவர்களாக இருந்தமையால் பயிர்விளைச்சல், விலங்கு நோய் பரவுதல், கால்நடைத்திருட்டு போன்ற நிகழ்ச்சிகளை நன்கு அறிந்திருந்தனர்.

மறுபுறம், இன்றைய கிராமசேவா உத்தியோகத்தர்கள் அவ்வப்பிரதேசங் களைச் சார்ந்தோரல்லர். கிரமமான அலுவலக நேரத்தில் கடமை யாற்றுகிறனர். வழக்கமாக அவர்கள் புள்ளிவிவரங்களை அறிவிக்கின்றனர். அத்தகவலைக் கொண்டு புள்ளி விவர உததியோ கத்தர்கள் படிவம் 12ஐ நிரப்புகின்றனர். "இலங்கையில் இறைச்சித் தேவையும் நுகர்வும்"(1969) பற்றிய குழுவின் அறிக்கையில் இப் புள்ளிவிவரங்கள் பலவழிகளிலும் செம்மையாக்கப்பட வேண்டியுள்ளது என்று காட்டப்பட்டுள்ளது. உதாரணமாக, நிலையான பிறப்பு, இறப்பு வீதங்களிலிருந்து பிறழ்ந்து கால்நடைகளின் இயல்பான அதிகரிப்பு வீதத்தைத் தரப்படுத்தல், நோய் பரவுவதனால் ஏற்படும் அசாதாரண நிலைமைகள் என்பன காரணமாக இப்புள்ளிவிவரங்கள் செம்மையாக்கப்பட வேண்டியுள்ளன. அத்துடன் பதியப்பட்ட வெட்டல்கள், தோல் கூட்டுத்தாபனத்தி னதும் புறக்கோட்டையிலுள்ள முக்கிய தோல் வியாபாரிகளினதும் பச்சைத்தோல் பதிவுகளுடன் ஒப்புநோக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்து மதிப்பிடப்பட்ட வெட்டல்களை, நுகர்வோர் நிதிகள் அளவை, சமூக, பொருளாதார அளவைகள் மூலம் மதிப்பிடப்படும் தேசிய நுகர்வு அளவுடன் நியாயப்படுத்தப்படல் வேண்டும். இற்றைவரையாக்கப்பட்ட தரவுகள் கன்றுகள் போன்ற வயதடிப்படையிலான வகுப்புகளின் அடிப்படையிலும் செம்மை யாக்கல் செய்யப்பட வேண்டும். இதற்குக் காரணம் பசுக்கன்றுகளும் காளைக்கன்று களும் ஒரே வகுதியில் சேர்க்கப்படுவ தாகும். பசுக்கன்றுகளிலிருந்து பசுக்கள் வேறாக்கப்பட்டு "பிற பசுக்கள்" வகுதியில் வேறாகக் காட்டப்படவேண்டும்.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் கொல்களப் புள்ளிவிவரங்கள் பதனிட்ட, பதனிடப்படாத தோல்களின் புள்ளி விவரங்களை ஒத்திருக்கும். இலங்கையில் 50%க்கு அதிகமான தோல், வியாபாரி களைச் சென்றடைவதில்லை. நேர்மை யற்றமுறையில் குறிசுடுவதாலும் கள்ளத்தனமான வெட்டலாலும் தோல்கள் இழக்கப்படுகின்றன. என்றாலும் கணிசமான அளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. 1991/92 இலங்கை பண்ணை விலங்குப் புள்ளிவிவரங்களின் படி 1983 முதல் வருடாந்தம் 10 இலட்சம் கிலோகிராமுக்கு மேல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆகக்கூடிய அள வான 1.85 மி.கிகி. 1984 ல் ஏற்றுமதி செய்யப்பட்டது. 1991ல் ஏற்றுமதியினால் பெற்ற சம்பாத்தியம் 71.59 மில்லியன் ரூபாவாகும்.

இக்காரணங்களின் நிமித்தம் 1991/92 பண்ணை விலங்குப் புள்ளி விவரங்களின் 1.8 அட்டவணையில் தரப்பட்டுள்ள பண்ணைவிலங்குகளின் தொகை, பால்தரும் பசுக்களின் தொகை என்பவை பற்றிச் சந்தேகம் எழுகிறது. 1970க்கும் 1976க்குமிடையில் படிப்படி யான 9% அதிரிப்பு காட்டப்பட்டு "பிற பசுக்கள்" குறைந்ததன் காரணமாக 1979ல் 7% வீழ்ச்சி காட்டப்பட்டுள்ளது. அடுத்து 1989ல் 12% அதிகரிப்பும் 1990ல் 21.24% கடுமையான வீழ்ச்சியும் காட்டப்பட்டு ள்ளது. 1989ல் 1,819,900 கால்நடைகள் இருந்தன. இதன்படி 386,500 விலங்குகள் குறைந்துள்ளன. மரணம், வேறு கார ணங்களால் 10% விரயமாகியதாகக் கொண்டாலும் 204,510 விலங்குகள் மீதியாகவுள்ளன. இயற்கையான அதிகரிப்புவீதம் 18.3% (10 ஆண்டுச்சராசரி) ஆகும். இதற்கு நிலையான கன்று வீழ்ச்சி 80% எனக்கொள்ளப்படுகிறது. அதாவது மேலும் 333,041 விலங்குகள். எனவே, மொத்த தொகையில் குறைவு 719,541 விலங்குகள். இவற்றில் ஊகமாக வெட்டப்பட்ட தொகை 537,551 விலங்குகள். இது ஒரு கூண்டின் சராசரி எடை 65 கிகி ஆகக் கொண்டு கணிக்குமிடத்து 34.94 மி.கிகி இறைச்சிக்குச் சமனாகும்.

எருமைகளும் 1987 வரை இது போன்று அதிகரித்தன. அவ்வாண்டில் எப்பொழுதுமில்லாதவாறு எருமைகளின் எண்ணிக்கை 1,007,600 ஆக அதிகரித்தது. பத்து இலட்சமாக அதிகரித்தது இதுவே முதல் தடவையாகும். ஒருவேளை இது "1974 ன் அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் விதிக்கப்பட்ட தடை"யின் விளைவாகலாம். ஆனால், 1988 முதல் இத்தொகை படிப்படியாகக் குறையத் தொடங்கியது 1990ல் இத்தொகை 822,300 ஆகக் குறைந்தது.

பரீட்சார்த்த நோக்கங்களுக்காக 1.8 அட்டவணையிலுள்ள அதே ஆண்டு களை எடுத்துக்கொள்வோம். 1989ல் எருமைகளின் தொகை 967,000. இது 1990ல் 144,300 ஆல் குறைந்து 822,700 ஆயிற்று. எருமைகள் திடகாத்திமானவை என்பதால், இயற்கைக் காரணங்களால் 7.5% விரயமானதாகக் கொண்டால் 71,780 விலங்குகள் மீதி இழப்பாகவுள்ளன. மீதிக்கான பத்தாண்டு சராசரி இழப்பு 15% ஆகும். அதாவது 145,000 விலங்குகள். எனவே, மொத்த இழப்பு 216,830 விலங்குகளாகும். ஆண்டொன்றுக்கு இத்தகைய பாரிய இழப்பு சாதாரண போக்குக்கு முரணானதாகும். ஆதலால் நடக்கமுடியாதது எனக் கொள்ளப்பட வேண்டும். இத்தொகையில் அரைவாசி கள்ளத்தனமாக வெட்டப்பட்டதெனக் கொண்டால், ஒரு கூண்டின் சராசரி எடை 135 கி.கிராம் என்ற அடிப்படையில் இறைச்சி இழப்பு சுமார் 14.6 மி.கி. கிராமாகும்.

எனவே, 1989ல் மொத்த இறைச்சி நுகர்வு 34.94 மி.கி.கிராம் மாட்டிறைச்சியும் 14.6 மி.கி.கிராம் எருமை இறைச்சியுமாக இருந்திருக்கும். இதன்படி தலைக்குரிய நுகர்வு 2.9 கி.கிராமாகும். இலங்கைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணை விலங்குகள் புள்ளிவிவரம் மாடு, எருமைகளின் தொகை கடுமையாக வீழ்ச்சியடைந்து வருவதைக் காட்டுகிறது. அட்டவணை (1.8) மேற்கூறிய பகுப்பாய்வு இப்போக்குக்கு ஆதரவாகவுள்ளது. ஒரு திறந்த பொருளாதாரத்தில் இறைச்சி நுகர்வு அதிகரித்தல் வழமையான ஒரு போக்கும், நகரமயமாதல், பொருளாதார வளர்ச்சி, நுகர்வு வருமான உயர்வு, குடிசனப் பெருக்கம், இறைச்சி பதனிடும் கைத்தொழில், உணவுப் பழக்கங்களில் ஏற்படும் மாற்றம் என்பன இதற்குக் காரணமாகும். இது மத்தியவங்கியின் நுகர்வோர் நிதிகள், சமூக பொருளாதார அளவையில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

**27.0 இலங்கையில் கொல்களங்கள்**

இறைச்சி உற்பத்தி, சந்தைப் படுத்தல் பற்றிய ஏற்றுமதிக் குழுவுக்காக திட்டமிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சு 1968/69ல் மேற்கொண்ட அளவைகள், இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களினால் உத்தரவு வழங்கப்பட்ட 137 கொல்களங்கள் இருப்பதாக இனங்கண்டுள்ளன. பெரும்பாலானவை தற்காலிக கொட்டில்கள். சில தென்னோலைக் கூரைகளைக் கொண்டவை; இவை ஆறுகள், ஓடைகளின் கரையோரங்களில் அமைக்கப்பட்டுள்ளன. கொழும்பு, கண்டி, நுவரேலியா நகரங்களில் மட்டும் குழாய் நீர்வசதியும் கொட்டில்களும் உள்ள நிரந்தரக் கட்டிடங்கள் காணப்படுகின்றன. சந்தை இறைச்சிக் கடைகளை வாடகைக்கு விட்டு மாநகர சபைகள் வருமானம் பெற்றாலும் கொல்களங்கள் திருத்தி அமைக்கப்படவில்லை. உண்மையில், கொழும்பு மாநகரசபையின் தெமட்டக்கொடைக் கொல்களம், கழிவுப் பொருட்களிலிருந்து இரத்த உணவு, எலும்புணவு, இறைச்சி உணவு என்பன தயாரிப்பதற்கு வேண்டிய வசதிகளைக் கொண்டுள்ளது. தகைமை பெற்ற விலங்கு மருத்துவர்கள் விலங்கு மருத்துவப்பிரிவில் கடமையாற்றுகின்றனர். இடநெருக்கடிமிக்க ஒரு நகரத்திற்கு உண்ணப் பொருத்தமற்ற கழிவுப் பொருட்களையும் நோயுற்ற, ஒதுக்கப்பட்ட விலங்குக் கூண்டுகளையும் அகற்றுவதற்கான எரிதொட்டி அத்தியாவசியமானதாகும். ஆனால் இங்கு அது இல்லை.

மாடுவெட்டல் தொடர்பான விவாதத்தில் பங்குபற்றிய ஒருவரான கொழும்பு திரு.தர்மதாச விஜேமான்ன 24.6.93 'ஜலண்ட்' பத்திரிகையில் எழுதுகையில், உள்ளூராட்சி மன்றங்களின் கீழுள்ள கொல்களங்கள் அனைத்தும்போல மிகப்பழைய, சுகாதாரக்கேடான, பாழடைந்த கட்டிடங்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். "வெட்டுவதற்கு எடுத்துச் செல்லமுன்பே விலங்குகள் உண்மையாக வதைக்கப்படுகின்றன" என்று அவர் கூறுகின்றார். விலங்குகள் திறந்த வெளியில் ஒன்றாகப் பிணைக்கப்பட்டு உணவும் தண்ணீரும் இல்லாமல், நீண்டநேரம் மற்ற மிருகங்கள் வெட்டப்படுவதைப் பார்த்திருக்கச்செய் யப்படுகின்றன. கொல்களங்களின் பராமரிப்பையும் விலங்குகள் வெட்டப்படுவதையும் மேற்பார்வை செய்வதற்கும், வெட்டப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட விலங்குகளின் ஆரோக்கியத்தைப் பரிசோதிப்பதற்கும் அரசாங்க, உள்ளூராட்சி விலங்கு மருத்துவர்களும் சுகாதாரச் சோதனைக்காரர்களும் இருக்கையில் "கருவுற்ற பசுக்கள் எவ்வாறு வெட்டப்படுகின்றன?" என்று அவர் வினவுகிறார்.

திரு.விஜேமான்ன கூறுவது முற்றிலும் சரியானதே. 1968ல் திட்டமிடல் அமைச்சு நடத்திய அளவையில் இந்நிலை இனங்காணப்பட்டுள்ளது. இந்நாட்டு அரசாங்கம் தானே புனிதமான பௌத்தமதத்தின் நிலைக்களன் எனத் தற்பெருமை அடித்துக் கொள்கிறது. அத்துடன், இன்னும் ஏறத்தாழ 7 ஆண்டுகளில் புதிய கைத்தொழில் நாடு என்ற அந்தஸ்தை அடையப் போவதாகவும் கோருகிறது. இவ்வாறெல்லாம் பெருமைபேசும் ஒரு நாட்டில் உள்ள மிகப் பழமையான, சுகாதாரக்கேடான கொல்களங்களைப் பற்றியும் மாடுகளையும் ஆடுகளையும், செம்மறிகளையும், பன்றிகளையும் கோழிகளையும் ஆயிரக்கணக்கில் வெட்டுவதில் மட்டுமன்றி, டொல்பின்களையும் கடலாமைகளையும் உயிருடன் வெட்டிக் கொல்லுதல் தொடர்பாகவும் கரும்புச் செய்கைக்காக யானைகள் கொல்லப்படுவது பற்றியும், ஏ.கே.47 துப்பாக்கிகளுடன் பெரும்புள்ளிகளின் பாதுகாவலர்கள் இரத்தினக்கல் அகழ்வது தொடர்பாகவும் எதுவும் செய்யாமல் வாளாவிருப்பது வெட்கக்கேடானதல்லவா ?

**28.0 கவலைக்குரிய பிற அம்சங்கள்**

1. அடிப்படைப் பிரச்சினை அமைவிடம் சம்பந்தமானது. பல கொல்களங்கள் மக்கள் குடியிருக்கும் பகுதிகளில், இலேசாகச் சென்றடையும் பொருட்டு பாதை ஓரங்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஆதலால் இக்குரூரமான நிகழ்ச்சிகளை சிறுவர்கள் கூடப் பார்க்கக்கூடியதாகவுள்ளது.

2. பெரும்பாலும் ஓடைகளின் ஓரத்தில் அமைந்திருப்பதால் இரத்தம், மூத்திரம், சாணம் ஆகியவை, மக்கள் குளிக்கும், ஆடைகளைத்துவைக்கும் நீரை அசுத்தப்படுத்துகின்றன.

3. கழிவுகளை உண்டு மகிழ்வதற்காக கட்டாக்காலி நாய்களும் காகங்களும் வந்து கூடுவதைக் காணலாம். சில வேளைகளில் அழுகிய இறைச்சியிலிருந்து துர்நாற்றம் வீசுவதுமுண்டு.

**29.0 தனியார் வெட்டுதல்**

பத்திரிகை எழுத்தாளர் பலரின் கூற்றுப்படி, தனியார் விலங்குகளை வெட்டுதல் பற்றித் தப்பான கருத்து நிலவுவதாகத் தோன்றுகிறது. பொருள் வரையறைக்கமைய தனியார் வெட்டுதல் என்பது அரசாங்க அல்லது உள்ளூராட்சி கொல்களத்துக்கு வெளியே விலங்குகளை வெட்டுவதாகும். ஆடுமாடுகள், எருமைகளைத் தவிர தனியார் வெட்டலுக்கு எதிரான சட்டம் எதுவுமில்லை. சமயக் கொண்டாட்டங்கள் போன்ற விசேட நோக்கங்களுக்காக தனியார் வெட்டல் அனுமதிக்கப்பட்டுள்ளது. வியாபாரத்துக்கான வெட்டல் விலங்கு மருத்துவ, பொதுச் சுகாதாரச் சோதனைக்குட்பட்டு உள்ளூராட்சி மன்றங்கள் அளிக்கும் உத்தரவுப் பத்திரங்களின் கீழ் அனுமதிக்கப்படுகிறது. ஆடுமாடுகள், எருமைகள் அத்தகைய உத்தரவுப் பத்திரமின்றி வெட்டுதல் சட்டவிரோதமானதாகும். இதுவே 'கள்ளத்தனமாக வெட்டல்' எனப்படுகிறது. உத்தரவு பெற்ற எக்கொல்களமும் சட்டமுறையானது. சட்டமுரணாகச் செயல்படும் தனியார் கொல்களங்கள் இருப்பதாக 'கல்கவ மித்துரோ' கூறுகின்றனர். இது தவறானது. அத்தகைய கொல்களங்களில்லை. நிச்சயமாக கொழும்புக்கு வெளியே உத்தரவுபெறாத சட்டமுரணான கொல்களங்களுண்டு.

1893ஆம் ஆண்டின் (திருத்தம் 1956) இறைச்சிக்கடைக்காரர் சட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாட்டங்களுக்கு 5 ரூபா கட்டணம் அறவிட்டு, தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்க ஏற்பாடுள்ளது. மாநகரசபைத் துணை (திருத்த)ச் சட்டம் (31.8.58) அத்தியாயம் xiii பந்தி (30) 5 ரூபாக் கட்டணத்துக்கு விசேட உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்கான ஏற்பாட்டைக் கொண்டுள்ளது.

சிறப்புச் சந்தைகள் தோன்றி விசேட இறைச்சி உற்பத்திப் பொருட்களை விற்கத் தொடங்கியதும் ஆண்டுக் கட்டணம் 25/- ரூபாவுக்கு விசேட உத்தரவுப்பததிரங்கள் இத்தாபனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இத்தொழிற்சாலைகள் அமைந்துள்ள பிரதேசங்களின் உள்ளூராட்சி மன்றங்கள் இவற்றை வழங்குகின்றன. இவற்றில் நவீன கொல்களம் ஒன்றுள்ளது. அங்கு சுகாதாரமான நிலைமைகளில், உரிய கவனத்துடன் விலங்குகள் வெட்டப்படுகின்றன. மாடுகள் அதிர்ச்சியடையச் செய்யப்பட்டும் பன்றிகளின் காதருகே மின் அதிர்ச்சியூட்டியும் வெட்டப்படுகின்றன.

ஏனைய தாபனங்களுக்குப் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் உளர். இவர்கள் உள்ளூராட்சி மன்றங்களின் கொல்களங்களில் விலங்கு மருத்துவ மேற்பார்வையின் கீழ் விலங்குகளை வெட்டி, விலங்கு மருத்துவர், பொதுச் சுகாதாரச் சோதனைகாரரின் முத்திரை பொறித்து தொழிற்சாலைகளுக்கு வழங்க எதிர்பார்க்கப்படுகின்றனர். முத்திரை பொறித்தல் கட்டாயம். ஆனால், எல்லா இறைச்சியும் பொதுக் கொல்களங்களிலிருந்து வருவதில்லை. இலங்கையில் மாட்டிறைச்சி உற்பத்திக் கைத்தொழில் இல்லை என்பதால் தரமான இறைச்சி போதியளவு கிடைப்பதில்லை. அதனால் தான் பசு, கன்று இறைச்சிக்குத் தேவை இருக்கிறது. பெருந்தொகையான மாட்டிறைச்சி நட்சத்திர ஹோட்டல்களுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் புதிய பணக்காரர்களுக்கும் வழங்குவதற் காக சிறப்புச் சந்தைகளால் இறக்குமதி செய்யப்படுகிறது.

### 30.0 உடனடிப் பரிகார நடவடிக்கை கள்

படந்த 10 மாதங்களாக நடைபெற்ற விவாதத்தில் பெரும்பாலானவர்கள் முக்கிய விடயமான மிருக வதையைவிட்டுப் பிறழ்ந்து, எரிச்சலூட்டும் வாதங்களிலும் வெறிகொண்ட நயவஞ்சகத்திலும் ஈடுபட்டனர். ஒரு சிலர், நியாயமான நடைமுறைக்கு ஏற்ற சிபாரிசுகளைச் செய்தனர். உதாரணமாக திரு.ஹனீப் 1992.12.18 'ஐலண்ட்'ல் எழுதுகையில், முஸ்லிம் மார்க்க அறிஞர்களும் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும், வெட்டு தலை மேற்பார்வை செய்யும் விலங்கு மருத்துவர்களும் இணைந்து குர்ஆன் விதித்துரைக்கின்ற, (ஆனால் இலங்கையில் பின்பற்றப்படாத) மனிதாபிமான முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என விதந்துரைத்தார்.

### 31.0 விதப்புரைகளும் தீர்மானங் களும்

பரிகார நடவடிக்கைகள் பயனளிக்க வேண்டுமானால், ஆடுமாடு வளர்த்தல் முதற்கொண்டு விற்பனை, ஏற்றிச்செல்லல், வெட்டல், சந்தைக்கு விநியோகித்தல் வரையான இத்துறையின் அனைத்து அம்சங்களையும் அவை உள்ளடக்க வேண்டும். இறைச்சி சந்தைப்படுத்தும் விடயத்தில் தலையிட வேண்டியதில்லை. மாநகரசபை துணைச்சட்டங்கள் இவ்வம்சத்தைப் போதியளவு கவனத்திற் கொண்டுள்ளது. அத்துடன் இலங்கை ஒரு திறந்த பொருளாதாரம் கொண்ட நாடாக வெகுவாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மற்றெல்லா அம்சங்களையும் நெறிப்படுத்துவதற்குப் போதிய சட்டங்களுண்டு. தேவையானது இவற்றைப் பயனுள்ள வகையில் செயல்படுத்த வேண்டும் என்பதே. இதனைச் சாதிப்பதற்கு ஒரு தனி அதிகார அமைப்பு அவசியம். அது தேசிய பண்ணைவிலங்கு அபிவிருத்திச் சபையாகும். இச்சபையை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கான காலம் வந்துவிட்டது. அதன் பணிப்பாளர் சபையும் முகாமையும் மீண்டும் அமைக்கப்பட வேண்டும். தேவையான பணியாளர் சேர்க்கப்பட்டு அதன் ஒருங்கிணைந்த பணிகள் தொடங்கப்பட வேண்டும். அவசியமான பிராந்திய எல்லைப்புற கொல்களங்களையும் வசதிகளையும் எக்காலத்துக்கும் ஏற்றவகையில் ஒரே முறையில் அமைப்பதற்கு அவசியமான வெளிநாட்டுதவியும் அனுபவமும் பெறப்பட வேண்டும். இது சாதிக்கக் கூடியது.

### 32.0 துர்ப்பிரயோகத்தையும் தீச்செயல் களையும் ஒழிக்க

இனங்காணப்பட்ட தீச்செயல்களும் துர்ப்பிரயோகங்களுமான ஏற்றிச் செல்வதிலும் கொல்களங்களிலும் இழைக்கப்படும் கொடுமை, தடைசெய்யப்பட்ட வகை விலங்குகளை வெட்டல் என்பவற்றை ஒழித்தல் பல்வேறு உத்தியோகத்தர்களின் கடமையாகும். ஊழல், துர்ப்பிரயோகம் என்பவை அதிகார நிலைகளிலிருந்து தோன்றி மனச்சான்றற்ற தீச்செயல்களாகவும் ஒழுங்கு விதிகளைச் சட்டை செய்யாமையாகவும் 1978 முதல் கொள்ளை நோயாகப் பரவி பல்கிப் பெருகிவிட்டன. இது, திணைக்களங்கள், உள்ளூராட்சிச் சபைகள், மாகாண சபைகள், போக்குவரத்துப் பொலிஸ், சக்திவாய்ந்த தனியார்துறைக் கம்பெனிகள், மொத்த இறைச்சி வியாபாரிகள், அடித்தளத்தில் சில்லறை இறைச்சி வியாபாரிகள் அனைவரையும் தொற்றியுள்ளது.

எனவே பயனுள்ள ஒரே பரிகாரம் தே.ப.வி.அ.சபையின் கொல்களத் திட்டத்தை செயற்படுத்துவதாகும். இச்சபையே கொல்களங்களை நடத்தும் ஒரே அதிகார அமைப்பாகும் என்பதால் அதுவே வெட்டுவதற்கு விலங்குகளை விலைக்கு வாங்கும் ஒரே அமைப்பாக விளங்கும். அது, வழங்குமிடங்களில் விலங்குகளைப் பார்வையிடுவதற்கும் சுகாதாரச் சான்றிதழ் வழங்குவதற்கும் கொல்களங்களில் கூண்டுகளுக்கு முத்திரை பதிப்பதற்கும் விலங்கு மருத்துவர்களைப் பயன்படுத்தும். சபையின் கொள்வனவு உத்தியோகத்தர்கள் சொந்தக்காரர்களை இனங்காண்பதுடன் அனுமதிக்கப்பட்ட விலங்குகள் மட்டுமே கொல்களங்களுக்குச் செல்லும். பணம் தேவைப்படும் சொந்தக்காரர்களிடம் வாங்கப்படும் தடை செய்யப்பட்ட வகை விலங்குகள், பின்னர் கருத்திட்டங்களுக்கும் ஏனைய கமக்காரர்களுக்கும் வழங்குவதற்காகச் சபையின் பட்டிகளில் வைத்துப் பாதுகாக்கப்படும். இவ்வாறாக விலங்குகள் சட்டமும், இறைச்சிக் கடைக்காரர் சட்டமும் கொள்வனவு செய்யும் இடத்திலிருந்து ஏற்றிச்செல்லல், வெட்டல், சில்லறைச் சந்தைக்கு விநியோகிக்கப்படும் வரை உரியமுறையில் அமுல் செய்யப்படும்.

சில்லறை வியாபாரத்தில் காணப்படும் எடைகுறைத்து நிறுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற தீப்பழக்கங்களை நிறுத்தி விடலாம். இது சந்தை மேற்பார்வை யாளர்கள், நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகளதும் நுகர்வோர்களதும் கடமையாகும். தே.ப.வி.அ.சபை சுத்த மான கூண்டுகளை விநியோகிக்கும். ஆதலால் எடையைக் கூட்டுவதற்குக் கழிவுகளைச் சேர்ப்பது தவிர்க்கப்படும். எஞ்சியுள்ள பிரச்சினை உரிமையாளரை இனங்காண்பதற்குக் குறிசுடுவதும் விலங்குகள் சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக கிராமசேவா உத்தியோகத்தர், மாவட்டச் செயலாளர் மட்டங்களில் பதிவேடுகள் வைத்துப் பேணுவதுமாகும். இது மாகாண சபை நிருவாகத்தின் பொறுப்பாகும்.

### 33.0 வரலாற்றுப் பின்னணி

"இறைச்சிச்சபை" ஒன்றை ஏற்படுத்துவதற்கான விதப்புரை முதன்முதலாக 1958 ன் கமத்தொழில் அபிவிருத்தி யோசனைகளில் செய்யப்பட்டது. 1967ல் உணவு, கமத் தொழில் அமைச்சு அரசாங்க உத்தியோ கத்தர்களும் இவ்வுபதுறையில் ஈடுபட் டோரும் இல்லாமல் சுதந்திரமாக "இறைச்சியுற்பத்தி, சந்தைப்படுத்தல்" பற்றி ஆய்வொன்றை நடத்துவதற்கு திட்டமிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சின் உதவியை நாடியது. இதன் பெறுபேறாக, "இலங்கையில் இறைச்சி உற்பத்தியின் எதிர்காலம்" (அக்டோபர் 1968) என்ற அறிக்கை தயாரிக்கப்பட்டது. பண்ணை விலங்குகள் அருகி வருவதை இவ்வறிக்கை எடுத்துக்காட்டியது. வெட்டுதல் பற்றிய புள்ளிவிவரங்கள், இறைச்சி வியாபாரத்தில் உத்தியோகத்தர்கள், சில்லறை வியாபாரிகளின் துர்ப்பிரயோகம் என்பவற்றையும் சுட்டிக்காட்டிய இவ்வறிக்கை, ஒரு பரிகார நடவடிக்கை யாக "இறைச்சிச் சபை" ஒன்றை ஏற்படுத்துவதை விதந்துரைத்தது. இதற்கான வரைவுச் சட்டம் 1960ல் சமர்ப்பிக்கப்பட்டது. இதுவே, கௌரவ பிரதமரை (அவரே திட்டமிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சரு மாவார்) தலைவராகக் கொண்ட அமைச்சரவைத் திட்டமிடல் உபகுழுவின் சிபாரிசின்பேரில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவுக்கான முன்நிகழ்ச்சியாகும். இரு அமைச்சுகளின் உத்தியோகத்தர் களையும் சில நியதிச்சட்டமுறைச் சபைகளின் உறுப்பினர்களையும், தனியார் துறைப் பிரதிநிதிகளையும் கொண்ட கூட்டுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. "இலங்கையில் இறைச்சி உற்பத்தியும் சந்தைப் படுத்தலும்" பற்றிய அறிக்கை, முன்னைய "இறைச்சிச்சபை"யை விட விரிவான அதிகாரங்களைக் கொண்ட "விலங்கு வேளாண்மைச் சபை" ஒன்றைச் சிபாரிசு செய்தது. இது தேசிய பண்ணைவிலங்கு அபிவிருத்திச்சபைக்கு முன்னோடி யாகும்.

நன்கு வடிவமைக்கப்பட்ட வினாக் கொத்தொன்று அரசாங்க அதிபர் களுக்கும் உள்ளூராட்சிச்சபை பிரதி நிதிகளுக்கும் அனுப்பப்பட்டு, பின்னர் மொத்தவிற்பனை இறைச்சிக்கடைக் காரர்கள், அவர்களின் முகவர்கள், சில்லறை வியாபாரிகள், இறைச்சி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள தனியார்துறை நிறுவனங்கள், விலங்கு மருத்துவர்கள், விலைக்கட்டுப்பாட்டுச் சோதனைகாரர்கள் ஆகியோரைப் பேட்டி கண்டு ஓர் ஆய்வு நடாத்தப்பட்டது. 1969 மார்ச் 23 ஆம் திகதியின் அறிக்கை பாரதூரமான பல விதப்புரைகளை செய்தது:

"இதனால் விலங்குகளை வெட்டுவதற்குரிய ஒரே இடமாகப் பயன்படக்கூடிய பிராந்திய கொல்களங் களை ஏற்படுத்தி, கட்டுப்படுத்தக்கூடிய மத்திய அதிகாரசபை ஒன்றைத் தாபித்தல் அவசியமாகிறது. இவ் வதிகாரசபை விலங்குகளைக் கொள்வனவு செய்வதற்கும் கொல்களங்களுக்கு அனுப்புவதற்கும் சில்லறை இறைச்சிக் கடைகளுக்கு உரித்த கூண்டுகளை அனுப்பி விநியோகிப்பதற்கும் பொறுப்பாக இருக்கும்".

"விலங்கு வேளாண்மைச்சபை" என்ற அதிகாரசபை ஒன்றை ஏற்படுத்த, இக்குழு சிபாரிசுசெய்தது. இச்சபை ஒழுங்குக்குப் பொறுப்பாக இருந்து உள்ளூராட்சிச் சபைகளின் கட்டுப் பாட்டிலுள்ள எல்லாக் கொல்களங் களுக்கும் மேலாக மேற்கூறிய பணிகளில் நேரடியாக ஈடுபடும். ஆனால் உத்தரவுப் பத்திரம் வழங்குவதிலோ உள்ளூராட்சி மன்றங்களின் வருமானத்திலோ தலையிட மாட்டாது. அரசாங்கம் மாறியபோதும், இச்சிபாரிசுகளைச் செயல்படுத்து வதற்காக 1973 மே 4 ஆந்திகதி தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச்சபை தாபிக்கப்பட்டது. அதன் முதலாவது தலைவராகக் காலஞ்சென்ற ஆர்.எச்.த மெல் நியமிக்கப்பட்டார். நிபுணர்குழுவின் பல அங்கத்தவர்களும் சபை உறுப்பினர் களாயினர்.

### 34.0 இந்திய, இலங்கைக் கருத்திட்டம்

1974ல் கமத்தொழில், காணி அமைச்சு, இந்திய-இலங்கை கூட்டுறவு பண்ணை விலங்கு அபிவிருத்தித் திட்டத்துக்குத் துணையாக மொத்தம் 11,887 ஏக்கர் பரப்புள்ள 10 மிகச்சிறந்த தென்னந் தோட்டங்களை மாற்றியது. இத்திட்டம் பெறுமதிவாய்ந்த இனப்பெருக்கக் கால்நடைகளையும் எருமைகளையும் செம்மறிகளையும் தேசியப் பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபைக்கு அன்பளிப்புச் செய்தது.

கைக்கொள்ளப்பட்ட உபாயம் தென்னந்தோடடங்களில் சிறந்த மேய்ச்சல் புல்லை வளர்த்து, கமக்காரர்களுக்கு வழங்குவதற்காக பண்ணை விலங்குகளை வளர்ப்பதும் தென்னையில் கிடைக்கும் வருமானத்தை பண்ணை விலங்கு அபிவிருத்தித் திட்டத்துக்கான செலவில் ஒரு பகுதிக்கு ஈடுசெய்வதுமாகும். தென்னந்தோட்டங்களும் ஏனைய பண்ணைகளும் கொல்களத் திட்டத் துக்கான பட்டிநிலமாகவும், பின்னர் கமக்காரர்களுக்கு வழங்குவதற்காக வெட்டுவதிலிருந்து காப்பாற்றப்பட்ட விலங்குகளை வைத்திருப்பதற்கான நிலமாகவும் பயன்படுத்தப்பட்டன. விலங்குகளை வைத்திருப்பதற்கான பண்ணைகளாகப் பயன்படுத்தும் பொருட்டு மேலும் 6,160 ஏக்கர் காணி சபைக்கு உரித்தாக்கப்பட்டது. 'பெருந் தோட்ட முகாமைக்கு' முக்கியத்துவம் அளிக்கத் தீர்மானிக்கப்பட்டபோது 1977/78ல் 2,245 ஏக்கர்களைக் கொண்ட மூன்று தோட்டங்கள் சபைக்கு அளிக்கப் பட்டன. தென்னைக்கு சோம்பேறியின் பயிர் என்றும் ஒருபெயர் உண்டல்லவா?

வரலாற்று ரீதியாக, "இலங்கையில் மாட்டிறைச்சி உற்பத்தியின் எதிர்காலம்" என்ற அறிக்கையில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ள 'தென்னை முக்கோணம்' எனப்படும் பிரதேசத்திலுள்ள தென்னந் தோட்டத்துறையே அத்திவாரப் பண்ணைக் கால்நடை, எருமை வளர்ப்பு நிலங்களாகும். தென்னையின் கீழ் மாடு வளர்ப்பதனால் இருதுறைகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பயன்களுண்டு. மிகச் சிறந்த இந்தியப்பண்ணை இனங்களும் இழுவை இனங்களும் வளர்த்துப் பெருக்கப்பட்டு, பல்லாயிரக்கணக்கான சிறு பண்ணை விவசாயிகளுக்கு வழுங்கப்பட்டன; பாலுக்காக வீடுகளுக்கு ஓரிரு பசுக்களும் எல்லாவகைப் பொருட்களையும் இழுப் பதற்காகப் பல்லாயிரம் காளைகளும் வழங்கப்பட்டன. சிக்கனமற்ற விலங்குகள் இறைச்சிச் சந்தைக்கு அனுப்பப்பட்டன.

**35.0 ஒன்றுக்கொன்று துணை**

துரிதமாக தே.ப.வி.அ.சபைக்கு மாற்றப்பட்டவற்றைத் தவர இந்த பெறுமதி வாய்ந்த விலங்கு வளர்ப்புச் சொத்துக்களை 1972ன் காணிச்சீர்திருத்தம் அழித்துவிட்டது. இவ்வெழுத்தாளரே தோட்டங்கள் தே.ப.வி.அ.சபைக்கு உரித்தாக்கப்பட வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டார். அத்துடன் இழக்கப்பட்ட இனப்பெருக்க விலங்குகளை வழங்குவதற்கும் வேறு உதவிகளைப் பெறுவதற்குமாக மேற்கூறிய இந்திய-இலங்கைத் திட்டத்தை ஒழுங்கு செய்தார். அடிப்படை ஒருங்கிணைந்த பணிகளைக் கைவிட ஒருபோதும் உத்தேசிக்கப்பட வில்லை. உண்மையில் தோட்டங்களும் பண்ணைவிலங்குத் திட்டமும் கொல்களத் துட்டத்துக்குத் துணையாகவே திட்டமிடப் பட்டன. தோட்டங்கள், வெட்டுவதற்காக விற்கப்படும் பெறுமதியான விலங்குகளை ஏற்றுக்கொள்ளும். அத்துடன் சந்தைக்குச் செல்லும் விலங்குகளை வைப்பதற்கும் வழிப்போக்கில் தங்குமிடங்களாகவும் பயன்படுத்தப்படும். பரசங்ஹவெவை, ஓயமடுவ, வெலிகந்தை, கிரியங்கலிய ஆகிய தூரப் பிரதேசங்களில் தாபிக்கப்பட்ட பண்ணைகள், ஆடுமாடு கள் சேகரிக்கும் நிலையங்களாகவும் கொல்களத்திட்டத்துக்கு விலங்குகளை வைத்திருக்கும் நிலையங்களாகவும் உபயோகிக்கப்படவிருந்தன.

**36.0 தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச்சபை, 1972ன் 11ஆம் இல. அரச கமத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் (2) ஆம் பிரிவின்படியான கட்டடளையின் பிரகாரம் 1973.5.4 ஆம் திகதிய 58ஆம் இல. அரசாங்க வர்த்தமானியின் 1ஆம் பகுதி (1) 347ஆம் பிரிவில் வெளியிடப்பட்ட பிரகடனத்தால் தாபிக்கப்பட்டது.**

பந்தி 5 "சபையின் முக்கிய பணி கால்நடைகளையும் கால்நடை உற்பத்திப் பொருட்களையும் பதனிடலும் சந்தைப்படுத்தலுமாகும்....."

**37.0 தே.ப.வி.அ.சபையின் ஒருங் கிணைந்த பணிகள்**

**முதலாம் திட்டம்**

1) பண்ணை விலங்கு வளர்ப்பவர்க ளிடமிருந்து நியாயவிலைக்கு வாங்குவதற்காக பண்ணை விலங்குக் கொள்வனவு நிலையங்களைத் தாபித்தல்;

2) உரித்த விலங்குக் கூண்டுகளை வழங்குவதற்காக பிராந்திய கொல்களங்களைத் தாபித்தல்;

3) இறைச்சி, இறைச்சி உற்பத்திப் பொருட்களைப் பதனிட்டு சந்தைப் படுத்தல்;

4) பண்ணைவிலங்குக் கொள்வனவு நிலையங்களிலிருந்து பிராந்தியக் கொல்களங்களுக்கு விலங்குகளையும், கொல்களங்களிலிருந்து வியாபாரிகளுக்கு இனங்காண்பதற்காக முத்திரையிட்ட கூண்டுகளையும் எற்றிச்செல்லல்;

5) உப-உற்பத்திப் பொருட்களை விரும்பத்தக்க அளவுக்குப் பயன் படுத்துதல்;

6) இறைச்சி, இறைச்சி உற்பத்திப் பொருட்களின்தயாரிப்பையும் சந்தைப் படுத்தலையும் கட்டுப்படுத்தலும் உத்தரவுப்பத்திரம் வழங்கலும்;

7) அதிகாரம் பெற்ற வியாபாரி களுக்கு விநியோகிப்பதற்காக பைக்கட்டி லிட்டு விலைகுறிப்பதன் மூலம் விற்பனைக்காக தரமான இறைச்சியை வெட்டித்தயாரித்தல்.

. கால்நடைகளை வாங்குவதற்காக வெளிநாடுகளுக்குப் பிரயாணம் செய்தல் போன்ற சலுகைகளைப் பெறுதற்கும், அரச பண்ணைவிலங்குப் பண்ணைகள் நடத்தும் சிறந்த வருவாயுள்ள வியாபாரத்தையும், நல்ல வருவாய்தரும் தனிப்பட்ட விலங்கு மருத்துவம், மருந்து விற்றல் என்பவற்றையும் விலங்கு மருத்துவர்களுக்குரிய தனியுரிமையாகக் காப்பதற்கு விலங்குற்பத்தி, சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த சில சுயநலக் கும்பல்கள் பின்வரும் பந்தி களுக்கு எதிர்ப்புத்தெரிவித்தபோதும் அவை 151ஆம் இல. வர்த்தமானியில் அமைச்ச ரவை அங்கீகாரம் வழங்கியபின் சோர்த்துக் கொள்ளப் பட்டன. (பெரும்பாலான அரசுப் பண்ணைகள் இவ்வாண்டுத் தொடக்கத் தில் இத்திணைக்களத்திலிருந்து நீக்கப் பட்டு தே.ப.வி.அ.சபைக்கு உரித்தாக்கப் பட்டன).

8) பண்ணை விலங்குகளுக்குத் தேவையான வளர்ப்பினங்கள் (இந்திரியம் உட்பட), மருந்துகள், உணவுக் கூட்டுப்பொருட்கள், இயந்திரம், கருவிகள் ஆகியவற்றை இறக்குமதி செய்து வழங்கல்.

9) சபையின் பொது அலுவலகங் களுக்குச் சார்பான முயற்சியாகச் சாதகமான முறையில் நடத்தலாமெனப் பணிப்பாளர்கள் கருதும் விலங்கு வேளாண்மைப் பண்ணைகளைத் தாபித்து நடத்துதல்.

**குறிக்கோள்களாவன:**

10) ஆடு, மாடுகளை வெட்டுவதற்கு அதிகாரம் பெற்ற ஒரே சபையாக இருந்து பின்வருவனவற்றை உறுதிப் படுத்தல்:

(அ) 1958ன் விலங்குகள் சட்டத்தினால் தடைசெய்யப் பட்டுள்ள வகை விலங்குகள் வெட்டப்படுவதை ஒழித்து, உற்பத்திக்கு உதவும் விலங்குகளைக்காத்து, தேசிய கால்நடை, எருமை, ஆட்டு, செம்மறி மந்தைகள் அருகுவதைத்தடுத்து பண்ணை அபிவிருத்திக்கும் ஆடு வளர்ப்புக்கும் உதவுதல்;

(ஆ) இறைச்சிக்காக விற்கும், வாங்கும் விலங்குகள் வதைக்கப் படுவதையும் விலங்குகளை ஏற்றிச் செல்கையில் இழைக்கப்படும் கொடுமைகளையும் ஒழித்தல்;

(இ) உள்ளூராட்சிச்சபைகளின் உத்தரவு பெற்ற சந்தைக் கடைகளுக்கு ஆரோக்கியமான, சுத்தமான, சுகாதார சான்றிதழ் கொண்ட இறைச்சியையும், ஏனைய வியாபாரிகளுக்கு பைக்கட்டி லிட்ட இறைச்சியையும் வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக இறைச்சிக் கடைக்காரரின் சில்லறை வியாபாரமும் உள்ளூராட்சி மன்றங்களின் வருமானமும் பாதிக்கப்படாதிருக்கும்.

### 38.0 இலங்கைக்கு நவீன கொல் களங்கள்

அமைச்சரவை, 345/71ஆம் இல. அமைச்சரவைப் பத்திரத்தின்மூலம் 1974 ஏப்ரல் 3ல் 88 மில்லியன் ரூபா அதிகாரமளிக்கப்பட்ட மூலதனத்தை அங்கீகரித்தது. இதில் 27 மி.ரூபா வெளிநாட்டு ஆக்கக்கூறும் அடங்கும். இதனைக் கொல்களத்திட்டத்துக்காக டென்மார்க் அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. நாட்டின் முழு இறைச்சித தேவைவையையும் அடிப்படையாகக் கொண்டு கொல்களத்திட்டத்தைத் தயாரிப்பதற்கு டனிடா கோப்பன்ஹேகன் ஏ.எஸ்.உசாத்துணைவர்களைச் சார்ந்த எம்.ஈ.வேன்பேகை நியமித்தது. பண்ணை விலங்கு, பண்ணை அபிவிருத்தித் திட்டத்துக்கு உதவும் 1958ன் விலங்குச் சட்டம், விலங்குவதைச்சட்டம், இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டம், மாநகரசபைத் துணைச்சட்டங்கள் என்பவற்றுக்கு ஏற்பவும் கிராமிய சமூக, பொருளாதாரம், கலாசாரம், சமய உணர்வுகள் என்பவற்றை அனுசரித்தும் பண்ணை அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்தவும் இவரது உதவி பெறப்பட்டது. நடைபெற்றுக் கொண்டிருந்த விவாதம் தொடர்பான விலங்கு வெட்டும் குரூரமுறை, விலங்குகளை ஏற்றிச் செல்கையில் இடம் பெறும் கொடுமை, சுகாதாரக்கேடான நிலைமைகள், கருவுற்ற விலங்குகள், பால்தரும் பசுக்கள், கன்றுகளை சட்ட முரணாக வெட்டுதல், கடைகளில் சட்ட விரோதமான மாட்டிறைச்சி விற்றல் போன்ற எல்லாவிடயங்களும் ஆராயப் பட்டன. இறைச்சி வியாபாரத்தைக் கட்டுப்படுத்தும் மொத்த இறைச்சி வியாபாரிகள் அமைப்பு தம் சமயத் தலைவர்களுடன் ஆலோசனை செய்தபின் நவீன தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டு விலங்குகளை மயக்கியபின், பிற விலங்குகளுக்குத் தெரியாமல் ஹலால்முறைப்படி விலங்குகளை வெட்டுவதற்கு இணங்கியது. இதற்கமைய வெட்டலை அறிமுகம் செய்வதற்கு 1974–75ல் கொல்களங்கள் வடிவமைக்கப்பட்டன.

உதாரணமாக, வாங்கி வண்டிகளில் ஏற்றி அனுப்புவதற்கு முன் விலங்கு மருத்துவப் பரிசோதனை கட்டடாயமாக்கப்பட்டது. இடைப் போக்கில் உரிய கவனஞ் செலுத்தவும் உணவளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. விலங்குகள் ஒற்றை வரிசையில் கொல்களத்துக்கு இட்டுச் செல்லப்படும்; இதனால் கொல்களத்தை அடையும் விலங்கை மற்ற விலங்குகள் காண்பதில்லை; முதலாம் அறையில் விலங்கு அதிர்வூட்டி மயக்கப்படும். உடனடியாகப் பின்னங்கால்களால் அதன் தலைக்குமேல் ஓடிக்கொண்டிருக்கும் ரயிலுக்குள் உயர்த்தப்பட அது அவ்விலங்கை வெட்டும் அறைக்குக் கொண்டு செல்லும். அங்கு சமயக்கிரியைக்காக லெவ்வை காத்திருப்பார். அதற்கு ஒரு நிமிடமும் செல்லாது; விலங்கு அடுத்த அறைக்கு அகற்றப்படும். முதலாவது அறையில் விலங்கு மயக்கப்படுவதை வெளியிலுள்ள விலங்குகள் காணாததைப் போன்றே அடுத்த விலங்கு வருகையில் முந்திய விலங்கு அதன் பார்வைக்கு எட்டுவதில்லை.

தே.ப.வி.அ.சபையின் ஒருங்கிணைந்த பணிகளுக்கமைய, 18,057 ஏக்கர் தென்னங் காணிகள் இரு தடவைகளில் காணிச் சீர்திருத்தத்தினால் சபைக்கு உரிமையாக்கப்பட்டன. இக்காணிகள் இந்திய-இலங்கைக் கூட்டுறவுத் திட்டத்துடன் இணைக்கப்பட்ட பண்ணை விலங்கு வளர்ப்புத் திட்டத்துக்கும் கொல்களத்திட்டத்துக்கான பட்டி நிலமாகவும் உபயோகிப்பதற்காக சபைக்கு அளிக்கப்பட்டன. 1975 இறுதியளவில் டனிடா நியமித்த மற்றொரு வெளிநாட்டு உசாத்துணைவர் குழு மீள்பார்வை செய்தபின், அதிகமாக இறைச்சி நுகரும் பிரதேசங்களுக்கு மூன்று நவீன பெருங் கொல்களங்களும் சிறு கொல்கயங்கள் மூன்றும் வடிவமைக்கப் பட்டன. அடுத்த இரண்டாண்டுகளில், விரிவான கால அடிப்படை கொண்ட நிர்மாணத் திட்டங்கள் வகுத்தற்கும் இயந்திரங்கள், வாகனங்கள், புகை வண்டி டிறக்குகள் பெறு |வதற்கும், அதனோடு தொடர்புள்ள கேள்விப் பத்திரங்கள் தயாரிப்பதற்காகவும் இவ்வெளிநாட்டு உதவி பெறுவதற்கான பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. அத்துடன் 1978ல் இவை அனைத்தும் ஒதுக்கித் தள்ளப்பட்டன.

### 39.0 மீள்பார்வை

நீர், மின், கழிவுப் பொருள் அகற்றல் வசதி, புகையிரதமூலம் விலங்குகளை ஏற்றிச் செல்வதற்கு வசதி, கால்நடைப்பட்டி நிலங்களையும் பெற்று சாதனங்களை அமைத்தல், பணியாளர்களைச் சேர்த்து பயிற்சிக்காக வெளிநாடுகளுக்கு அனுப்புதல் முதலிய பணிகளுக்காகத் தரப்பட்ட இரண்டு ஆண்டுகளில், பிரதானமாக வெளிநாட்டு ஆக்கக் கூற்றில் விலை ஏற்றம் காணப்பட்டது. மீள் பார்வையில் திட்டமிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சு பண்ணை விலங்குகளின் தொகை குறைவதையும் அதனால் இறைச்சி வழங்கல் குறைவதையும் இனங்கண்டிருந்தது. இக்காண்புகள், தே.ப.வி.அ.சபையின் பண்ணை விலங்குகள் அபிவிருத்திப் பிரச்சினைகளும், கொல்களங்களுக்கு வழங்குவதில் பிரச்சினைகளும் பற்றிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தன. இது தே.ப.வி.அ.சபைக்கு ஒரு சபைப் பத்திரமாகவும் கமத்தொழில் அமைச்சுக்கும் சமர்ப்பிக்கப்பட்டது. எனவே, டனிடா உசாத்துணைவர்களாக கோப்பன்ஹேகன் ஹொப் அன்ட் ஓவர்காட் திட்டமிடல் உசாத்துணைவர்களுடன் திட்டமிடல் அமைச்சும் கமத்தொழில் அமைச்சும் முதற் கட்டத்திட்டத்துக்குப்பின்வரும் அடிப் படைகளை அமைத்து, உழைப்புச் செலவு குறைந்த முறைகளுக்கும் செலவைக் குறைப்பதற்காக சில பொறிகளையும் வாகனங்களையும் உள்நாட்டில் உருவாக்குவதற்கும் ஏற்பாடு செய்தன:

1. கூடுதல் நுகர்வு இடம்பெறும் பிரதேசங்களுக்கு இறைச்சி வழங்குதல் நோக்கமாகும். ஆயினும், மாட்டிறைச்சிக்கான தேவையை விட வழங்கல் குறைவாயிருக்கும். எனவே, விலை ஏற்றத்துடன் சில நுகர்வோர் கோழி இறைச்சிக்கும் பன்றி,மீனுக்கும் மாற எதிர்பார்க்கலாம்.

2. மாடுகளின்அதிகரிப்பு வீதத்துடன் வழங்கல் சமன்படுத்தப்படுவதனால் உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயனளிக்கும் வகையில், எண்ணிக்கை குறையும் போக்கு தடுக்கப்படும்.

3. வடக்குக்கும் கிழக்குக்கும் அவசரமாகக் கொல்களங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்படும் எனக் கருதப்படவில்லை. காரணம் தேவையை விட வழங்கல் அதிகரித்திருந்தமையும் ஆட்டிறைச்சித் தேவை இருந்தமையுமாகும். தேவை ஏற்படின் இப்பிரதேசங்களில் சில சிறு கொல்களங்களும் அதிக நுகர்வுள்ள சில இடங்களிலும் ஏற்படுத்துவது பற்றி 11ஆம் கட்டத்தில் ஆராயப்படலாம்.

4. மதிப்பிட்ட வெள்ளாட்டு, செம்மறி வெட்டல், வழங்கலை மிகைத்திருந்தது. அனால், இது குறுகியகால நிலை என்பதால் சபை வளங்களைப் பெருக்க எதிர்பார்த்தது.

5. பொதுச்சந்தைகளில் பன்றி இறைச்சி இன்னும் சொற்ப அளவே விற்கப்படுகிறது. உத்தரவுப்பத்திரம் பெறவேண்டியதில்லை.

தொடக்கத்திலிருந்து தற்போதைய விலங்குற்பத்தி, சுகாதாரத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களும் கமத்தொழில் அமைச்சு உத்தியோகத்தர்களும் சபையின் பணிகளையும் நடவடிக்கைகளையும் மட்டுப்படுத்த நாடினர்; காரணங்கள் ஏற்கெனவே கூறப்பட்டுள்ளன. இருப்பினும் நிதி அமைச்சும் திட்டமிடல், பொருளாதார அமைச்சும் மேற்கொண்ட விடாமுயற்சி காரணமாக சபைக்கு விரிவான அதிகாரங்களை உரித்தாக்க இயலுமாயிற்று. இவை சபையின் பிரதான நோக்கத்துடன் பின்னிப்பிணைந்தவையாகும்:

"சுகாதாரமான முறையில் நவீன கொல்களங்களை நடத்தி, நியாய விலையில் நுகர்வோருக்கு ஆரோக்கியமான இறைச்சி கிரமமாக வழங்குவதற்கும்; விலங்குகள் வெட்டுவதை முறைப்படியானதாக்குவதற்கும் இலங்கையில் விநியோகத்தில் பெரும்பாலும் காணப்படும் தீச்செயல்களைத் தவிர்ப்பதற்கும்".

எனவே, ஒருங்கிணைந்த பணிகளுடன் பின்வரும் பந்திகளைக் கொண்ட 345/71ஆம் இலக்க அமைச்சரவைப்பத்திரத்தையும் அமைச்சரவை 1974.4.3 ஆம்திகதி அங்கீகரித்தது.

1. 88 மில்லியன் ரூபாவைக் கொண்ட அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம். இதில் அபிவிருத்திக்கான 27 மி.ரூபா வெளிநாட்டுச் செலாவணிக் கூறும் அடங்கும்; அத்துடன் வர்த்தக வங்கிகளிடமிருந்து பெறப்படத்தக்க அதிகாரமளிக்கப்பட்ட தொழிற்பாட்டு மூலதனம் 44 மி.ரூபா.

2. 1983ன் 9ஆம் இல. இறைச்சிக் கடைக்காரர் சட்டத்தைத் திருத்துவதற்கும் அதற்கான திருத்தங்களும் குறை நிரப்பல்களும், 1958ஆம் ஆண்டின் 29ஆம் இல. விலங்குகள் சட்டம், அதற்கான திருத்தங்கள், ஒழுங்கு விதிகள், அத்துடன் சபையின் பணிகளில் தலையிடக் கூடிய பிற நியதிச் சட்டங்கள்; காரணம் பண்ணை விலங்குகளை உற்பத்தி செய்வதற்கும் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும், புதிய விறைக்கப்பண்ணிய, தயாரித்த இறைச்சி ஏற்றுமதி செய்யவும் விற்கவும் வெட்டல், விற்றல், ஏற்றுமதிசெய்தல், பதனிடல், விலையிடல் என்பனவற்றை ஒழுங்குபடுத்தி உத்தரவுப்பத்திரம் வழங்குதல் ஆகியவற்றுக்கான அதிகாரங்களுட்பட இறைச்சிச் சந்தையின் எல்லா நடவடிக்கைகள் மீதும் தே.ப. வி.அ. சபைக்குக் கட்டுப்பாடு இருக்கும் பொருட்டு; அத்துடன்

3. கொல்களங்கள், பண்ணை விலங்கு கொள்வனவு நிலையங்கள், கால்நடை பட்டிநிலங்கள்/பண்ணை, வளர்ப்பு, இனப்பெருக்க பண்ணைகள் என்பவற்றைத் தாபித்து நடத்துவதற்கும்; பண்ணை விலங்குகள், புற்றரைகள், விலங்குத்தீனி என்பவற்றை ஊக்குவித்து விருத்தி செய்தற்காகவும் இவற்றுடன் சம்பந்தப்பட்ட விலங்கு ஆரோக்கிய, இறைச்சி ஆரோக்கியச் சேவைகள், பொலிநிலையங்கள், செயற்கைக்கருவூட்டல் நிலையங்கள், உற்பத்தித் துறைகளுக்கு ஏற்பாடு செயதல், பண்ணை விலங்குகளை இறக்குமதி செய்து வழங்கல்; அத்துடன் இவைகளுக்கான மருந்துகள், உணவுக்கூட்டுகள், இயந் திரங்கள்," கருவிகள் போன்ற சபையின் கடமைகளை சிறப்புற நிறைவேற்றுவதற்கு அவசியமான தேவைப் பொருட்கள் போன்ற இணைந்த எல்லா நடவடிக்கைகளுக்குமாக.

## 40.0 மாட்டிறைச்சி

முதலாம் கட்டத்தைத் தீர்மானிப்பதற்குரிய முக்கிய அடிப்படை வெட்டப்படும் விலங்குகளின் எண்ணிக்கை (1976) மாடுகளின் இயற்கையான பெருக்கத்தை மிகைத்தலாகாது என்பதாகும். இதனால் ஏற்படும் விளைவுகள் இரண்டு; ஒன்று, கால்நடைகளின் எண்ணிக்கை குறைவது தடைப்படும். ஆனால், வழங்கல் தேவையின் அரைவாசியாக இருக்கும். மேலதிகமான, தேவையற்ற எருமைகள் கூடுதலான இறைச்சி வழங்க வழியாகும். கள்ளத்தனமான, கணக்கிடமுடியாத வெட்டல் ஓரளவு இடம் பெறும். **கட்டம் 1:** இதில் அளவ்வையில் ஒரு பெரும் கொல்களம்; நடுத்தரத்தில் கட்டுகஸ்தோட்டையில் ஒன்று; கட்டுக்குருந்தையில் சிறியதொன்று; இவை சிலாபத்திலிருந்து குருநாகல் வரையும் கலேவலை, மாத்தளை, கண்டி, ஊறுகலை, உடஹேவாஹெட்டை, நுவரேலியா, ஹட்டன், தலவாக்கெலை, கினிகத்ஹேனை, கேகாலை, அல்பிட்டியா, காலி வரையுள்ள பிரதேசங்களுக்கு வழங்கும். இப்பிரதேசத்தில் நாட்டின் குடிசனத்தில் 60% காணப்படுகிறது. இங்கு 75% மாட்டிறைச்சி, 50% ஆட்டிறைச்சி, 100% பன்றி இறைச்சி நுகரப்படுகிறது. ஆனால், இதற்கான ஆடு, மாடுகளில் 75% நாட்டின் பிற பகுதிகளிலிருந்து பெறப் படுகிறது.

## 41.0 பாரிய ஆதாரத்திட்டம்

இந்தளவு குறைந்த 1ஆம் கட்டத்துக்கும் ஆதாரத்திட்டம் பாரியதாகும். உதாரணமாக: தே.ப.வி.அ.சபை பண்ணைகளில் 3 நாட்களுக்குரிய காப்பிருப்பாக 800 மாடுகளையும் 750 ஆடுகளையும் வைத்திருப்பதற்கு சுமார் 15,000 ஏக்கர் அபிவிருத்தி செய்த காணி தேவை. கொள்வனவு நிலையங்கள் 35 தேவை. இத்திட்டத்துக்காகும் செலவு 17 மி.ரூபாவாகவும் 3 கொல்களங்களுக்குரிய செலவு 105 மி.ரூபாவாகவும் 1976ல் அதிகரித்தது. அளவ்வை கொல்களத்துக்கு மட்டும் தினமும் மாடுகளை ஏற்றிச் செல்வதற்கு மூன்று விசேட புகையிரதங்கள் தேவைப்பட்டிருக்கும். அளவ்வையிலிருந்து வழங்குவழியில் கொழும்புவரை 16 குளிரூட்டிய டிறக்குகளும் கொழும்பிலும் சிலாபம், குருணாகல், கேகாலை, களுத்துறைச் சந்தைகளுக்கும் 113 கடைகளும் தேவைப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்கு - மனித உறவுமுறைகள் தொடர்பான இஸ்லாமிய நெறிமுறைகள்

அல்ஹாபிஸ் பீ. ஏ. மஸ்ரா

*காலஞ்சென்ற அல்ஹாபிஸ் பி.ஏ.மஸ்ரி, இங்கிலாந்தில் ஸரே நகரில் அமைந்துள்ள சாஜஹான் பள்ளிவாசலின் இமாமாக பணியாற்றி வந்தார். பிரித்தானியாவின் மிகப்பெரிய விலங்கு நலன்புரி ஸ்தாபனத்தின் நடவடிக்கைகளில் அங்கு வாழும் ஆசியர்கள் சமூகம் முக்கியமான ஒரு பங்கினை வகித்துவருவதனை உறுதிசெய்து கொள்வதற்கென தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருந்த ஆசிய நண்பர்கள் கழகத்தின் ஓர் உறுப்பினராகவும் அவர் இருந்துவந்தார். முஸ்லிம்களுக்கும் விலங்குகளுக்கும் இடையில் நிலவிவரும் உறவு முறைகளை சிறப்பாகப் பகுப்பாய்வுக்குட்படுத்திய இரு நூல்களையும் ("விலங்குகள் தொடர்பான இஸ்லாத்தின் அக்கறை" - 1989, "இஸ்லாத்தில் விலங்குகள் " - 1989) அவர் எழுதியுள்ளார் .*

பொதுவாக இரு தரத்தவர்களுக்கு இடையிலான உறவு, ஒவ்வொருவரும் தமது எதிர் தரப்பாரின் பெறுமதி மற்றும் தரம் என்பவற்றை எடைபோட்டுக் கொள்வதன் அடிப்படையிலேயே நிர்ணயம் செய்யப்படுகின்றது. அதன் விளைவாக, ஒன்றில் பரஸ்பர மரியாதையோ அல்லது அதற்கு நேர்மாறாக புறக்கணிப்போ தோன்ற முடியும். எவ்வாறிருந்தபோதிலும், நிறம், குலம் அல்லது இனம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட பார பட்சங்கள், பல சந்தர்ப்பங்களில், தர்க்கரீதியாக நியாயம் கற்பித்துக் கொள்ளும்நிகழ்வுப்போக்குக்கு குந்தகம் விளைவித்து வருகின்றன. விலங்குகளைப் பொறுத்தவரையில், அவற்றின் வகையை அடிப்படையாகக் கொண்ட பாரபட்சம், மேலே எடுத்துக் காட்டிய இத்தைகய பாரபட்சங்களின் ஒரு நீட்டிப்பாக மட்டுமே இருந்து வருகின்றது.

'விலங்குகளுக்கும் உணர்ச்சிகள் இருந்து வருகின்றன' என்ற உண்மையை எடுத்துக்கூறத் தவறியமைக்காக நாங்கள் அடிக்கடி எமது ஆரம்பகால இயற்கை விஞ்ஞானிகள் மீது பழிசுமத்தி வருகின்றோம். ஆனால், அதே வேளையில், எம்முடைய காலகட்டத்தில் அதிலும் பார்க்க சிறப்பாக ஒரு பணியினை எந்த வகையிலும் நாங்கள் ஆற்றிவரவில்லை என்பதையும் நாம் பார்க்கத் தவறி விடுகின்றோம். இன்றைய காலத்திலும் கூட, விலங்குகள், சட்டபூர்வமாக வேளாண்மைத்துறை உற்பத்திப் பொருட்கள் என்றும் கையிருப்பில் இருக்கும் சரக்குகள் என்றும் வகைப்படுத்தப்பட்டு வருவதைப் பார்க்கிறோம். அவற்றின் அந்தஸ்து குடிகள் என்ற நிலையில் அன்றி "பொருட்கள்" என்ற நிலையிலேயே இருந்து வருகின்றது. நுண்பௌதீகத் துறையில் ஏற்படடு வந்துள்ள அதிநவீன முன்னேற்றங்களுக்கு மத்தியிலும்கூட, மனித இனம் கொண்டுள்ள அனைத்து விதமான புலன் உணர்வுகளும் விலங்குகளுக்கும் உள்ளன என்ற உண்மையை ஏற்றுக் கொள்வதற்கு இன்னமும் நாங்கள் தயக்கம் காட்டிவருகின்றோம். உண்மையிலேயே, சில விடயங்களைப் பொறுத்தவரையில் விலங்குகளின் புலன் உணர்வுகள் அதேவிதத்திலான மனிதனின் புலன் உணர்வுகளிலும் பார்க்க பெருமளவுக்கு வளர்ச்சியடைந்த நிலையில் இருந்து வருகின்றன.

பெரும்பாலானவர்கள், விலங்குகள் ஓர் உள்ளுணர்வினைக் கொண்டுள்ளன என்பதனை - அதாவது, இயற்கை உந்துதல்களையும் செயலுக்குத்தானாகவே தூண்டப்படுவதனையும் - ஏற்றுக்கொள்கின்றனர். உணர்வுபூர்வமான வெளிப்பாடுகளை காட்டக்கூடிய ஆற்றலோ, பிரக்ஞை உணர்வினைக் கொண்ட உள்ளமோ அவற்றிடம் இல்லை என்பது பெரும்பாலானவர்கள் கொண்டிருக்கும் ஒரு பொதுவான கருத்தாகும். விலங்குகளும் கூட மன வேதனையை அனுபவித்து வருகின்றன என்பதனையும் அதேபோல களிப்பு, துயரம், காதல், அன்பு, வெறுப்பு, கோபம் போன்ற உணர்வுகளை உணர்ந்து கொள்கின்றன என்பதையும் மனிதர்கள் தொடர்ந்தும் மறுத்து வருகின்றார்கள். விலங்குகள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ளும்ஆற்றலையம், பகுப்பாய்வு செய்து பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளும் ஆற்றலையும் கொண்டுள்ளன. மேலும், மனிதர்களைப் போலவே அவற்றுக்கும் சுய உணர்வுண்டு. வீட்டு விலங்குகளாகப் பழக்கப்படுத்தப் பட்டுள்ள பிராணிகளுடனான எமது உறவுகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நிலவி வந்துள்ளன. இந்த விலங்குகள் பிற வகையைச்சேர்ந்த. விலங்குகள் தொடர்பாகக் கூட தியாக உணர்வுடன் செயற்படும் சில குணாம்சங்களையும் கொண்டுள்ளன என்பதையும் நாம் நன்கு அறிவோம். மனித இனம் பாம்பரை வழியில் வாரிசுரிமையாகப் பெற்றுக் கொண்டிருக்கும் மரபுரிமை தொடர்பான அதே சட்ட விதிக ளினாலேயே இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வும் ஆளப்பட்டு வருகின்றன. அனைத்துக்கும் மேலாக இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் இருந்து நோக்கும் பொழுது இந்த விலங்குகள் ஆத்மாக்களையும் கொண்டுள்ளன.

ஆன்மாக்களை தரப்படுத்துதல் குறித்தோ அல்லது பல்வேறு வகையைச் சேர்ந்த பிராணிகளின் பரிணாம வளர்ச்சி நிகழ்வுப் போக்கின் அளவீடு தொடர்பாகவோ இங்கு நாம் கவனம் செலுத்த வில்லை. பல்வேறு இனங் களைச் சேர்ந்த பிராணி வகைகள் இருந்து வருவதனால், வெவ்வேறு ஆன்மீக வளர்ச்சிக்கட்டங்கள் இருந்துவர முடியும் என்பதில் எவ்வித சந்தேகமு மில்லை. ஆனால், அனைத்து ஜீவராசிகளுக்கும் ஆன்மீக சக்தி அளிக்கப்பட்டுள்ளது என்ற கருத்து விளக்கத்தை இது எந்த வகையிலும் பாதித்துவிடவில்லை. விலங்குகளுக்கு ஆன்மாக்கள் இருந்து வருகின்றனவா அல்லது இருக்கவில்லையா என்ற முக்கியமான விடயத்தையே நாங்கள் இங்கு கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. இந்தப் பூமியில், ஒவ்வொரு விலங்குக்குமுரிய அந்தஸ்தினை நிர்ணயம் செய்வதில் இந்த விடயம் மிகவும் நிர்ணயகரமான ஒரு காரணியாக இருந்து வருகின்றது.

அநேகமாக, உலகின் மறை வெளிப்படுத்தப்பட்ட அனைத்து மதங்களும், புலனறிவினை உணரக் கூடிய ஒவ்வொரு ஜீவராசியும் ஆன்மாவைக் கொண்டுள்ள என்பதனை பல நூற்றாண்டு காலமாக எமக்கு எடுத்துக்கூறி வந்துள்ளன. இன்றைக்கு சுமார் 1400 ஆண்டுகளுக்கு முன்னர் அருளப்பட்ட இஸ்லாத்தின் வேதநூலான புனித திருக்குர்ஆனை எடுத்து நோக்குவோம். ஆன்மா என்பதற்கு அரபு மொழியில் "ரூஹ்" என்ற பதம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. அதனை விலங்குகள் தொடர்பாகப் பயன்படுத்தும்பொழுது, இந்தப்பதம் பொதுவாக "ஆவி" என்று மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றது. விலங்குகள், மனிதப் பிறவிகளைப் போல அதேவகையான ஆன்மாக்களைக் கொண்டிருக்கவில்லை என்பதனை எடுத்து விளக்குவதற்காகவே இவ் விதமாக இப்பதம் உபயோகிக்கப்பட்டு வருகின்றது. மனிதர்கள் கொண்டிருக்கும் ஆன்மாக்களிலும் பார்க்க சற்றுத் தரம் குறைந்த ஒன்றினையே விலங்குகள் கொண்டுள்ளன என்பது இந்த மொழி பெயர்ப்பாளர்களின் கருத்தாகும். ஆனால், குர்ஆன் வசனங்களின்படி, புலன் உணர்வினைக் கொண்டிருக்கும் அனைத்து ஜீவராசிகளுக்கும் ஓர் ஆவியிலும் பார்க்க மேலான ஒருவஸ்து இறைவனால் அருளப்பட்டுள்ளது. மனிதனாக இருந்தாலும் சரி, விலங்காக இருந்தாலும் சரி, இறைவன் தன் திருவுருவின் அருளை அனைத்து ஜீவராசிகள் மீதும் படர விடுகின்றான். இறைவனின் இந்த திருவுரு அல்லது ஆன்மா உணர்ச்சிபூர்வமான, அறிவுபூர்வமான, உளரீதியான சக்திகளை ஜீவராசிகளுக்கு வழங்குவது மட்டுமன்றி தார்மீக சக்தியையும் அவற்றுக்கு பெற்றுக் கொடுக்கின்றது. மக்கள், பொதுவாக விலங்குகளை தொடர்புபடுத்திய விதத்தில் ஆவி குறித்துப் பேசும்பொழுது, விலங்குகளிடம் தார்மீக ஆற்றல் இல்லை யென்றும், அதனால் அவற்றுக்கு ஆன்மா இருப்பதில்லையென்றும் சகஜமாகக் கருதிக் கொள்கின்றார்கள். ஆனால் புனித திருக்குர்ஆனை பொறுத்த வரையில், மனித மற்றும் விலங்கு ஆன்மாக்களிடையே அது எந்தவிதமான வேறுபாட்டினையும் காண்பதில்லை.

மேலும் விலங்குகளின் ஆன்மாக்கள் அமரத்துவம் பொருந்தி யவையென்றும் குர்ஆன் கூறுகின்றது. விலங்குகளின் ஆன்மாக்கள் இறைவனின் திருவுருவாக இருந்து வருகின்றன என்ற உண்மையை நாங்கள் ஏற்றுக்கொள்வோ மேயானால் விலங்கு களும் நிலைபேறானவை என்பதனை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்; ஏனெனில், இறைவனின் தெய்வீக ஒளி ஒருபோதும் அழிவதில்லை.

மேலும், மனித ஆன்மாக்களைப் போலவே விலங்குகளின் ஆன்மாக்களும் மரணத்தின் பின்னர் இறைவனின் சன்னிதியில் மீண்டும் எழுப்பப்பட்டு, நன்மை தீமை குறித்த நியாயத்தீர்ப்பு வழங்கப்படும் என்பதனையும் குர் ஆனிலிருந்து நாம் அறிந்து கொள் கின்றோம். விலங்குகளின் ஆன்மாக்கள் சுவனலோகத்துக்கு உயர்த்தப்பட்டு விடும் என பழைய ஏற்பாடு கூறுகின்றது. இறைவன், மரணித்த படைப்புக்களின் உருக்குலைந்த எலும்புகளையோ அல்லது தசைகளையோ நிச்சயமாக ஒன்று திரட்டுவதில்லை; ஆன்மாக்கள் குறித்து மட்டுமே அவன் அக்கறை செலுத்து கின்றான்.

மக்கள், பொதுவாக, ஒரு புறத்தில், உணர்வுபூர்வமான, அறிவு பூர்வமான மற்றும் மன ஆற்றல் களையும் மறுபுறத்தில் தார்மீக சக்தியையும் போட்டு குழப்பியடித்துக் கொள்வத னாலேயே இப்பிரச்சினை எழுகின்றது. அறிவுபூர்வமான, உளரீதியான ஆற்றல்கள் எமது பௌதீக உடல்களின் கருமங்களாக இருந்து வருகின்றன; அதேவேளையில் தார்மீக ஆற்றல் இறைவனின் தெய்வீக நிலையிலிருந்து எமக்குக் கிட்டுகின்றது. ஆன்மாவானது, பௌதீக உடலிலிருந்து பிரிந்து சுதந்திரமான முறையில் தனக்கென ஓர் இருப்பினைக் கொண்டுள்து. மரணத்தின்போது அறிவுசார்ந்த மற்றும் உளம் சார்ந்த ஆற்றல்கள் தமது செயற்பாட்டை நிறுத்திக் கொண்டு விடுகின்றன. ஆனால் ஆன்மா மரணிப் பதில்லை; அது நிலைத்திருக்கின்றது.

உதாரணமாக, புதிதாகப் பிறக்கும் ஒரு குழந்தைக்கு ஆன்மா உள்ளது என்பதனை எவரும் மறுப்பதில்லை. ஒரு விலங்கு, புதிதாகப் பிறக்கும் குழந்தையிலும் பார்க்க அதிகளவுக்கு விழிப்புணர்வினைக் கொண்டுள்ளது என வாதிட முடியும். மனித ஆன்மாவை வலியுறுத்தும் அதே வேளையில், விலங்குகளுக்கு ஆன்மா உள்ளது என்பதனை மறுத்துரைப்பதற்கு வலுவான காரணம் எதுவுமில்லை. எனவே, புனித திருக்குர்ஆனும் ஏனைய கிரந்தங்களும், மனித இனத்துக்குப் போலவே விலங்குகளுக்கும் ஆன்மா இருந்து வருகின்றது எனக் கூறுவதில் வியப்படைவதற்கு எதுவுமில்லை. எனினும், மனிதப் பிறவிகளுக்கிடையிலும் விலங்குகளுக்கிடையிலும் ஆன்மாக்களின் வளர்ச்சி மட்டம் மற்றும் தரம் என்பவற்றுக்கிடையே வேறுபாடுகள் இருந்துவர முடியும்.

மரணத்தின் பின்னர், நியாயத் தீர்ப்பு நாளின்போது, இறைவன், விலங்குகள் தொடர்பாக எந்தவிதத்தில் தீர்ப்பினை வழங்குவான் என்பது குறித்த விரிவான விளக்கங்களை நாங்கள் இங்கு முன்வைக்க முடியாது. ஒவ்வொரு தனி ஆன்மாவுக்கும் அதன் சூழ் நிலைகளுக்கு ஏற்ப தீர்ப்பு வழங்கப்படும் என குர்ஆன் கூறுவதனை மட்டும் இங்கு சுட்டிக்காட்டலாம். ஒவ்வொரு ஆன்மாவும் அதன் உள ஆற்றல்கள், ஏனைய சக்திகள் மற்றும் எண்ணங்கள் என்பவற்றின் அடிப்படையிலேயே சீர் தூக்கிப் பார்க்கப்படும்.

பின்வரும் திருக்குர்ஆன் வசனங்களை நாங்கள் மிக எளிதில் புரிந்துகொள்ள முடியும்:

"ஏனென்றால் வானங்களிலும் பூமி யிலுமுள்ள ஒவ்வொன்றும் றஹ்மானிடம் அடிமையாகவே வருகின்றது.

அவை யாவற்றையும் அவன் பூரணமாகக் கணக்கிட்டு அறிந்தும் வைத்திருக்கின்றான்.

அவை ஒவ்வொன்றும் மறுமை நாளில் அவனிடம் தனித்தனியாகவே வரும்." (19:93–95)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதும் அவைகளில் கால்நடை (முதலிய பல ஜீவராசி) களை (ஆங்காங்கு) பரப்பி வைத்திருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவைகளாகும். ஆகவே, அவன் விரும்பியபோது (அவை மரித்த பின்னரும்) அவைகளை ஒன்று சேர்க்க ஆற்றலுடையோனாக இருக்கின்றான்." (42: 29)

"நீங்கள் என்ன நிலைமையில் இருந்தபோதிலும் குர்ஆனிலிருந்து நீங்கள் எ(ந்த வசனத்)தை ஓதிய போதிலும் (உங்களுடைய காரியங்கள்) நீங்கள் எதைச்செய்த போதிலும், நீங்கள் அவற்றில் ஈடுபட்டிருக்கும்போதே உங்களை நாம் கவனிக்காமலிருப்ப தில்லை. பூமியிலோ வானத்திலோ உள்ளவற்றில் ஓர் அணு அளவும் (நபியே) உமது இறைவனுக்குத் தெரியாமல் தவறிவிடுவதில்லை. இவற் றைவிடச் சிறிதோ அல்லது பெரிதோ (எதுவாயினும்) அவனுடைய தெளிவான பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படாம லில்லை." (10 : 61)

ஆன்மாவைக் கொண்டிருக்கும் ஒரு ஜீவராசிக்கான அரபுப் பதம் "நப்ஸ்" என்பதாகும். இதனை மனிதன் தொடர் பாக மட்டும் பிரயோகிக்கும் விதத்தில் பொதுவில் ஒரு தப்பபிப்ராயம் நிலவி வருகின்றது. "நப்ஸ்" என்பது விலங்கு களுக்கும் கூட பொருத்தமானது என் பதனை பின்வரும் நபிமொழி தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது:

புனித நபியவர்கள் ஏழு பெரும் பாவங்களை எடுத்து விளக்கும்பொழுது விலங்குகளை கொலை செய்வதனையும் ஒரு பாவமாக குறிப்பிட்டார்.

ஒரு சில முஸ்லிம் அறிஞர்கள் விலங்குகளுக்கும் ஆன்மாக்கள் உள்ளன என்பதை வலியுறுத்தி வந்துள்ளனர். ஆனால், இந்நாட்களில் இத்தகைய நூல்களை வாசிப்பதற்கு மக்களுக்கு போதிய கால அவகாசம் கிடைப்பதில்லை. உதாரணமாக, முவப்பக் அத்தீன் அப்துல்லா என்ற அறிஞர் பின்வருமாறு கூறியுள்ளார்:

(ஒரு போரின் போது) கைப்பற்றப் பட்ட தேனீக்களையோ அல்லது வேறு ஏதேனும் கால்நடைகளையோ கொலை செய்வதனை நபிகள் நாயகம் அவர்கள் தடைசெய்தார்கள். இவை இறைவனின் தெய்வீகத்தை தம்மிடம் கொண்டுள்ள விலங்குகளாக இருந்து வருகின்றன.

மனித-விலங்கு உறவுமுறை தொடர்பான இயற்கை தர்க்கவியலும், அதேபோல தார்மீகத் தத்துவமும், அனைத்து ஜீவராசிகளும் "ஆன்மா" என்றழைக்கப்படும் இறைவனின் பரிசுத்த ஆவியினால் அருள் வழங்கப்பட்டுள்ளன என்ற நிலைப்பாட்டினையே அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். ஆன்மாக்கள் இல்லாத நிலையில், விலங்குகள் தொடர்ந்தும் வேளாண்மைத்துறையின் உற்பத்திப் பொருட்களாகவும், வியாபாரப் பண்டங்களாகவும் இருந்துவரும். மனிதன் தொடர்ந்தும் அவற்றை அவ்விதத்திலேயே கையாண்டு வருவான்.

விலங்குகள் இராச்சியத்தைச் சேர்ந்த ஒவ்வொரு விலங்கு இனமும், அது தன்னளவில் ஒரு சமூகமாக இருந்து வருகின்றது என்றும், அவற்றை அவ் விதத்திலேயே நாங்கள் கையாள வேண்டுமென்றும் குர்ஆன் கூறுகிறது:

"பூமியில் ஊர்ந்து திரியக் கூடியவைகளும் தம்முடைய இரு இறக்கைகளால் (ஆகாயத்தில்) பறக்கக் கூடியவைகளும் உங்களைப் போன்ற (ஜீவனுள்ள) சிருஷ்டிகளேயன்றி வேறில்லை. (இவைகளில்) ஒன்றையுமே (நம்முடைய பதிவுப்) புத்தகத்தில் (லௌஹுல் மஹ்பூலில்) குறிப்பிடாது நாம் விட்டுவிடவில்லை. பின்னர் (ஒருநாளில்) இவைகளும் தங்கள், இறைவனிடம் கொண்டுவரப்படும்." (6:38)

மேலும் விலங்குகளின் நடத்தை மாதிரிகள் குறித்து நிலவிவரும் பல்வேறுவிதமான தப்பெண்ணங் களையும் இது போக்கிவிடுகின்றது. விலங்குகளுடனான தனது உறவு முறைகளில் மனிதன் பாராமுகமான ஒரு மனப்பான்மையினை வெளிப்படுத்தி வந்துள்ளமைக்கு இந்தத் தப்பெண் ணங்களே காரணமாக இருந்து வந்துள்ளன. உதாரணமாக, விலங்குகள் பேச்சாற்றலை கொண்டுள்ளன என்பதனையும், உடல் ரீதியாகவோ அல்லது உள ரீதியாகவோ அவை ஊமைகளாக இருந்து வரவில்லை யென்பதனையும் அது எடுத்துக் காட்டுகின்றது. நவீன விஞ்ஞானம் விரிவான பல ஆராய்ச்சிகளின் பின்னர், விலங்குகள், பறவைகள், சிறு பூச்சிகளும் கூட தமது எண்ணங்களையும் தகவல்கி ளையும் தமக்கிடையே பரிமாறிக் கொள்கின்றன என்பதனை நிரூபிக் கின்றது.

பிரக்ஞைபூர்வமான மற்றும் புலன் உணர்வுடைய உள்ளமொன்றைக் கொண்டிருக்கக்கூடிய ஆற்றல் விலங்கு களுக்கு இருக்கவில்லையென்ற வகையிலும் ஒரு தப்பெண்ணம் நிலவி வருகின்றது. இத்தப்பெண்ணத்தைப் போக்கி விடுவதற்கும் குர்ஆன் முயல்கின்றது. அறிவார்ந்த தன்மை என்பது, எளிய வார்த்தைகளில் கூறுவதானால், குறிப்பிட்ட சில கோட்பாடுகளை அறிந்துகொள்ளும் உள ஆற்றலாகும். நவீன உளவியலிலும் அறிவார்ந்த தன்மை மனித உள்ளத்தின் ஒட்டுமொத்தமான புலனுணர்வு ஆற்றலையே எடுத்துக்காட்டுகின்றது. அதாவது, அறிந்து கொள்ளும் சக்தி, முடிவெடுக்கும் சக்தி, உறவுகளை புரிந்து கொண்டு உணர்ந்துகொள்ளும் சக்தி என்பவையே இந்த அறிவார்ந்த தன்மையாகும். விலங்கு இனங்கள், சில சந்தர்ப்பங்களில் மிகவும் பாதகமான சூழ்நிலைகளிலும் கூட சமாளித்து, உயிர் வாழ்ந்து வந்திருப்பது மட்டுமன்றி, பல இலட்சக் கணக்கான ஆண்டுகளாக ஒழுங்கு முறையில் அமைந்த சமூக வாழ்க்கை யொன்றை வெற்றிகரமாக நடத்தி வந்துள்ளன என்ற உண்மை அவ்விதம் அதனை மேற்கொள்வதற்கான அறிவார்ந்த ஆற்றல் அவற்றுக்கு இருந்து வருகின்றது என்பதை நன்கு நிரூபித்துக் காட்டுகின்றது. விலங்குகளும்கூட இறை வனைத் தொழுது வருகின்றன எனக்கூறும் திருக்குர்ஆன், தாம் என்ன செய்கின்றோம் என்பதனையும் அவை நன்கு அறிந்திருக்கின்றன எனக் கூறுகின்றது. வசனம் 24:41 மூலம் விலங்குகள் பிரக்ஞை பூர்வமான உள்ளத்துடன் வணக்கத்தினை மேற்கொள்ளக்கூடிய அறிவாற்றலை கொண்டுள்ளன என்பதனை அது தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

இறுதிப்பகுப்பாய்வின்போது, விலங்கு இனங்கள் தொடர்பாக மட்டுமன்றி, உலகின் ஒட்டுமொத்தமான உயிரினவியல் சூழல் தொகுதியுடனான எமது உறவுமுறை, நீதி மற்றும் சமத்துவம் என்பவற்றையே அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டியுள்ளது. எமது மானிடவிழுமியங்கள் மற்றும் நெறி முறைகள் என்பவற்றுக்கு ஏற்ப ஏனைய ஜீவராசிகள் மீது நாம் தீர்ப்பு வழங்கிக் கொண்டிருக்கும் வரையில், இந்த ஜீவராசிகளுடனான எமது உறவில் நீதியோ சமத்துவமோ இருந்து வர முடியாது. ஒவ்வொரு ஜீவராசி தொகுதி யும் தனக்கென ஒரு சமூக அமைப்பினைக் கொண்டுள்ளது என்றும், அவை தமது நடத்தை நெறிமுறைகளை தாமே உருவாக்கிக் கொள்வதற்கு அனுமதிக் கப்பட வேண்டுமென்றும் புனித திருமறை கூறுகின்றது. நாங்கள் இந்தப் பின்னணியில், புனித திருக்குர்ஆனை கவனமாக வாசித்து, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருமொழிகளை நன்கு படித்து உணர்ந்துகொள்வோமேயானால், மனித இனம் தன்வசம் கொண்டுள்ள அனைத்து உள ஆற்றல்களையும் விலங்கு களும் கொண்டுள்ளன என்பதனை நிச்சயமாக ஏற்றுக்கொள்வோம். அவற்றுக்கு உணர்ச்சிகளும், உணர்வுத்திறன்களும், சுயபிரக்ஞையும், அன்பை வெளிப்படுத்துவதற்கும் வெறுப்பைக் காட்டுவதற்குமான ஆற்றலும் இருந்து வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றுமதி பதப்படுத்தல் வலயங்களின் குறைநிறைகள்

**வின்ரிச் நிவ்மான்**

*கலாநிதி வின்றிச் நியுமான், தற்பொழுது, இலங்கையில் அமைந்துள்ள பிரடரிக் நியுமான் பவுண்டேசன் அமைப்பின் வதிவிட பிரதிநிதியாக பணியாற்றி வருகின்றார். இந்த அமைப்பு இலங்கையின் வர்த்தக மற்றும் கைத்தொழில் கழகங்களின் சம்மேளனத்துடன் இணைந்து, வர்த்தக கழக முறையையும் சந்தைப் பொருளாதாரத்தினையும் போஷித்து வளர்ப்பதற்கென, சிறிய மற்றும் நடுத்தர அமைப்பிலான தொழில் முயற்சி அபிவிருத்தியாளர்கள் செய்திட்டத்தை ஸ்தாபித்துள்ளது. இந்தக் குறிப்பிட்ட துறைகளுக்குள், இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்காக அவர் மேற்கொண்டுவரும் இடையறாத பணிகளுக்காகவும் அவருடைய செயல் முனைப்பு மிகுந்த ஈடுபாட்டுணர்வுக்காகவும் நன்கு பிரபல்யம் பெற்றவராக இருந்து வருகின்றார். கைத்தொழில், சர்வதேச நிறுவன அமைப்பு, அரச சாரா அமைப்புக்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உசாத்துணை நிறுவனங்கள் என்பனவற்றில் அவர் பரந்தளவில் தொழில்சார் அனுபவத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளார். எனவே, அவர் வழங்கும் நிபுணத்துவ ஆலோசனை எப்பொழுதும் பெறுமதிமிக்க தாகவே இருந்து வருகின்றது.*

*இங்கு தரப்பட்டுள்ள கட்டுரையில், பெருமளவுக்கு வாதப்பிரதி வாதங்களுக்கும் சர்ச்சைகளுக்கும் உள்ளாகி வந்திருக்கும் ஒரு விடயம் குறித்து, பக்கம் சாராதவிதத்தில் பாரபட்சமற்ற முறையில் ஒரு விளக்கத்தினை அவர் முன்வைக்கின்றார்.*

ஏற்றுமதி முறைப்படுத்தும் வலயங்கள் தொடர்பான கருதுகோள் அரசியல்வாதிகள், கைத்தொழில் முகாமையாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் ஆகியோருக்கிடையே இன்னமும்கூட பெருமளவுக்குச் சர்ச்சைக்குரிய ஒரு விடயமாக இருந்து வருகின்றது. கடந்த காலத்தில், இந்த ஏற்றுமதி முறைப் படுத்தும் வலய அமைப்பு, மூன்றாவது மண்டலத்தைச்சேர்ந்த நாடுகள் கைத் தொழில்மயமாக்கலை விருத்தி செய்வதற் கான இறுதி ஆயுதமாக இருந்து வருகின்றது எனப் பலர் அவற்றை சிலாகித்து வந்துள்ளனர். மறுபுறத்தில், வேறு சிலர் இந்த ஏ.மு.வலயங்கள் முற்றிலும் பயனற்றவை என்றும், மூன்றாவது மண்டலத்தைச் சேர்ந்த நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்திக்கு குந்தகம் விளைவிக்கக் கூடியவையாக அவை இருந்து வருகின்றன என்றும் கூறி, ஒட்டுமொத்தமாக அவற்றை நிராகரித்து, ஒதுக்கி வந்துள்ளனர். சர்ச்சைக்குரிய வேறு பல விடயங்களில் போலவே, இதிலும் கூட, சரியான விடை இந்த இரு வாதங்களுக்கும் நடுவிலேயே இருந்து வருகின்றது.

அங்டாட் (வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கான ஐ.நா. மாநாட்டு) அமைப்பு, முதலீடு மற்றும் நிதிப் பாய்ச்சல்கள் தொடர்பான செயற்குழுவின் இரண்டாவது அமர்வுகளுக்காக தயாரித்தளித்த ஓர் அறிக்கையில், இந்த ஏ.மு. வலயங்கள் தொடர்பாக குறிப்பிட்டுள்ளது. வளர்முக நாடுகளில் உற்பத்திக் கைத்தொழில் துறையின் ஏற்றுமதிகளை ஊக்கு விப்பதிலும், அந்நியச் செலாவணி சம்பாத் தியங்களைப் பெற்றுக் கொடுப்பதிலும் ஏ.மு. வலயங்கள் வெற்றிகரமாக செயற்பட்டு வந்துள்ள போதிலும், உள்நாட்டுப் பொருளாதாரத்தில் தொடர்புப் பிணைப்புக்களை ஸ்தா பித்தல், தொழில்நுட்ப இடமாற்றம் மற்றும் திறன்களின் மேம்பாடு போன்ற விடயங்களில் இவற்றின் தாக்கம் எதிர் பார்க்கப்பட்ட மட்டங்களிலும் பார்க்க மிகவும் குறைந்த அளவிலேயே இருந்து வந்துள்ளது என்பதனை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

அண்மையில், "இலங்கையின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் ஏற்றுமதி முறைப்படுத்தும் வலயங்களின் தாக்கங்கள்" என்ற தலைப்பில் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அது இலங்கையின் ஏ.மு. வலயங்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தப்பட்டுள்ள பல்வேறு தாக்கங்களையும் மிகவும் விரிவாக பகுப்பாய்வு செய்தது. விரிவான பொருளாதாரத் தரவுகள், ஏ.மு. வலயத்தில்அமைந்துள்ள தொழில் முயற்சிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட விஜயங்கள், தொழில் அதிபர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் என்பவர்களிடம் நடாத்தப்பட்ட பேட்டிகள் என்பவற்றின் உதவியுடன் இலங்கையில் தற்பொழுது இயங்கிவரும் ஏற்றுமதி முறைப்படுத்தும் வலயங்களின் சாதனைகள் மற்றும் குறைபாடுகள் என்பன குறித்த மிக விரிவான ஒரு விளக்கம் பெறப்பட்டது.

இலங்கை, 1978ம் ஆண்டு தொடக்கம் ஏற்றுமதி நோக்கிலான கைத்தொழில்மயமாக்கல் உபாயமொன்றுக்கு முன்னுரிமை அளித்து வந்துள்ளது. இந்த உபாயத்துக்கான பிரதான உபகரணமாக ஏற்றுமதி முறைப்படுத்தும் வலயம் இருந்தது. வெற்றிகரமான ஒரு துவக்கத்தின் பின்னர், ஏ.மு.வ. நிகழ்ச்சித்திட்டம் 1980 களின் முடிவு வரையில் அநேகமாக ஸ்தம்பித நிலையில் இருந்துவந்தது. நாட்டில் அப்பொழுது நிலவி வந்த சூழ்நிலையே இதற்கான முக்கியமான காரணமாக இருந்தது. 1990 களின் தசாப்தத்தின் ஆரம்பத்துடன் ஏற்றுமதி நோக்கிலான கைத்தொழில் மயமாக்கல் கொள்கை ஒரு புதிய உத்வேகத்தைப் பெற்றுக் கொண்டதுடன், அதற்கு பெருமளவிலான அரசியல் ஆதரவும் கிடைத்து வந்தது.

ஏ.மு.வலயங்களின்தாக்கங்கள் தொடர்பாக ஆரம்ப நாட்களில்மிதமிஞ்சிய அளவிலான எதிர்பார்ப்புக்கள் காணப்பட்டன. இந்த எதிர்பார்ப்புக்கள் கணிசமான அளவில் நிறைவேறவில்லை என்றபோதிலும் கூட, இலங்கையின் அபிவிருத்தி நிகழ்வுப்போக்கின்மீது ஏ.மு.வலயங்கள் பல சாதகமான தாக்கங்களை எடுத்து வந்துள்ளன என நிச்சயமாகக் கூறமுடியும். சில எதிர்மறையான தாக்கங்களையும் கூட அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எனினும், அவற்றை மதிப்பிட்டு அளவீடு செய்வது பெருமளவுக்கு சிரமமான ஒரு காரியமாகவே உள்ளது.

இந்த ஆய்வு, இலங்கையின் அபிவிருத்தி மீதான ஏ.மு. வலயங்களின் தாக்கத்தினை, பொருளாதாரத்தாக்கங்கள் மற்றும் சமூகத் தாக்கங்கள் என பிரித்து நோக்குகின்றது. பொருளாதாரத்துறையைப் பொறுத்தவரையில் வேலை வாய்ப்புக்களின் உருவாக்கம், அந்நியச் செலாவணி சம்பாத்தியங்கள், வளர்ச்சி, தொழில்நுட்ப இடமாற்றம், உலகளாவிய அடிப்படையிலான பிணைப்புக்கள் போன்ற சாதகமான தாக்கங்களை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஏ.மு.வலயங்கள் சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட நேரடி தொழில் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்ததன் மூலம் இலங்கையின் ஊழியச் சந்தையில் சாதகமான தாக்கங்களை எடுத்து வந்துள்ளன. மறுபுறத்தில், உருவாக்கப்பட்ட மறைமுகத் தொழில் வாய்ப்புக்கள் சிறிய அளவிலேயே இருந்து வந்ததுடன், அவை போதியளவிலும் இருக்கவில்லை. மேலும், ஏ.மு. வலயங்களின் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் ஆற்றலை, நாட்டின் தற்போதைய தொழில்வாய்ப்பு நிலையுடன் தொடர்புபடுத்தி நோக்க வேண்டியுள்ளது. ஏ.மு. வலயங்களின் தொழில் வாய்ப்புக்கள் நாட்டின் மொத்தத் தொழில் வாய்ப்புக்களின் 1.4 சதவீதமாக மட்டுமே இருந்துவந்தன. எனவே, இந்த விடயம் தொடர்பான ஏ.மு. வலயங்களின் தாக்கம் சார்புரீதியில் எல்லை அளவிலேயே இருந்து வருகின்றது. மேலும், ஏ.மு. வலயங்களின் உருவாக்கத்துக்கும் இந்த வலயங்களில் உருவாக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்களுக்குமிடையே ஒரு நேரடியான தொடர்பு இருந்து வந்துள்ளது என்பதனையும் நிரூபிக்க முடியாதுள்ளது. அதாவது வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஏ.மு. வலயங்களினால் உருவாக்கப்பட்ட தொழில்வாய்ப்புக்களை, இந்த வலயங்கள் இல்லாதிருந்தாலும்கூட சாதாரண கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்வுப்போக்கினால் உருவாக்கிக் கொண்டிருக்க முடியுமென வாதிடலாம்.

ஏற்றுமதிச்சம்பாத்தியங்கள் மற்றும் சென்மதி நிலுவை என்பன மீதான தாக்கங்களை கவனத்தில் எடுக்கும் பொழுது ஒரு விடயத்தை மிகவும் தெளிவாக அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அதாவது, புடவை மற்றும் ஆடைப் பொருட்கள் கைத்தொழில்களே இலங்கையின் ஏ.மு. வலயங்களின் முக்கியமான ஏற்றுமதிச் சம்பாத்திய மூலங்களாக இருந்து வருகின்றன. இந்தக் கைத்தொழில்கள், பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளில் தங்கியிருப்பதன் விளைவாக இவற்றிலிருந்து கிடைக்கும் தேறிய அந்நியச் செலாவணிச் சம்பாத்தியம் வரையறுக்கப்பட்டதாகவே இருந்து வருகின்றது. பெருமளவுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட, நன்கு திட்டமிடப்பட்ட, சிறப்பாகச் செயற்படுத்தப்பட்ட கைத்தொழில்மயமாக்கல் கொள்கையொன்றுக்கூடாக உயர் அளவிலான ஏற்றுமதிச் சம்பாத்தியங்களை பெற்றுக்கொண்டிருக்க முடியுமென வாதிட முடியும். கடந்த இரண்டு வருட காலமாக ஏ.மு. வலயங்களுக்குள் வளர்ந்து வரும் பன்முகமாக்கல் நிலை இதற்கான சாதகமான ஓர் அடையாளமாகவுள்ளது. குறைந்தளவில் மட்டும் இறக்குமதிகளில் தங்கியிருக்கும் கைத்தொழில்கள் இப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. இதன்விளைவாக, நாட்டுக்கு உயர் அளவிலான தேறிய ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் கிட்டும்.

புடவை மற்றும் ஆடைக் கைத்தொழில்களைப் பொறுத்தவரையில், சேர்க்கப்பட்ட பெறுமதி சார்புரீதியில் சிறிய அளவினதாக இருந்து வந்த போதிலும் இத்துறையில் ஏற்பட்ட உற்பத்திப் பெருக்கம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் மீது சாதகமான ஒரு தாக்கத்தை எடுத்து வந்துள்ளது என்பது இங்கு சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும். இலங்கை 550 அமெரிக்க டோலர் தலாநபர் மொத்த தேசிய உற்பத்தியைக் கொண்ட நிலையில், இப்பொழுது தென்னாசிய நாடுகளில் முன்னணி ஸ்தானத்தில் இருந்து வருகின்றது. ஏ.மு. வலயங்களுக்கு வெளியேயும் இதேவிதத்தில் வளர்ச்சி ஊக்குவிக்கப்பட்டு, பொதுக்கட்டமைப்புச் செய்திட்டங்களும் பொருள் வழங்கல் கைத்தொழில்களும் சரியான முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தால் அனுகூலங்கள் மேலும் உயர் அளவில் கிட்டியிருக்க முடியும் என இந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

தொழில்நுட்ப இடமாற்றத்தைப் பொறுத்தவரையில், ஏ.மு.வலயங்களின் தாக்கம் சிறிதளவிலேயே உணரப்பட்டது. ஸ்தாபிக்கப்பட்ட கைத்தொழில்களின் இயல்பின் அடிப்படையில் இதனை விளக்கமுடியும். சில தனிப்பட்ட தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியாளர்கள் பயிற்சியினை அளிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் புடவை மற்றும் ஆடைக் கைத்தொழில் துறையில் ஓர் அளவிலான தொழில்நுட்ப இடமாற்றத்தை மட்டுமே எதிர்பார்க்க முடியும். மேலே குறிப்பிடப்பட்ட தனிப்பட்ட தொழில் முயற்சியாளர்களின் பயிற்சித்திட்டம் பய னுள்ளதாக இருந்த போதிலும் நாட்டின் கைத்தொழில்மயமாக்கல் மீது அது எத்தகைய தாக்கங்களையும் எடுத்துவர வில்லை. இந்தத் தோல்விக்கான முக்கியமான காரணி, இலங்கையின் ஏ. மு. வலயங்கள் தொடர்பான ஸ்தாபித கொள்கைகளாகுமென இந்த ஆய்வு சுட்டிக் காட்டுகின்றது. ஏ.மு. வலயங் களின் ஸ்தாபிதத்தில் தொழில்நுட்ப இடமாற்றத்திலும் பார்க்க, தொழில் வாய்ப்புகளின் உருவாக்கத்துக்கே முதல் முன்னுரிமை அளிக்கப்பட்டு வந்துள்ளது. எனினும், இலங்கை முதலீட்டுச்சபை முகாமை, இப்பொழுது, இக்குறை பாட்டை நன்கு உணர்ந்துள்ளது. எனவே, இந்த நிலையில், எதிர்காலத்தில் தொழில் நுட்ப இடமாற்றம் தொடர்பான குறிக்கோளுக்கு முன்னுரிமை வழங்கப்படலாம் என எதிர்பார்க்கலாம்.

உலகளாவிய ரீதியில் இடம் பெற்றுவரும் தாராளமயமாக்கல் போக்கு கள் மற்றும் பெருமளவில் புதிய நாடுகள் புதிய தொழில் முயற்சிகளுக்காக திறந்து விடப்பட்டு வருவதனை அடுத்து, குறிப்பாக ஆசிய நாடுகள் நேரடி முதலீட்டுக்காக மிக கடுமையான சில- நேரங்களில் அழிவுகாலமானதாகக் கூட இருந்துவரும் - போட்டியொன்றில் இப்பொழுது ஈடுபட்டு வருகின்றன. பெரும்பாலான நாடுகளில் நேரடி முதலீட்டுக்கான ஊக்குவிப்புத் திட்டங்கள் அநேகமாக ஒரே மாதிரியானவையாக இருந்துவந்த போதிலும் இலங்கை இது தொடர்பாக வியப்பூட்டும் சில சாதனைகளை நிகழ்த்தி வந்துள்ளது. உதாரணமாக, 1991 மற்றும் 1992 ஆகிய வருடங்களில் நேரடி முதலீட்டு வளர்ச்சியில் பாரியதொரு அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. போட்டியில் இவ்விதம் ஓர் அனுகூல நிலையை அடைந்து கொள்வதற்கு சார்புரீதியில் செயல்திறன் மிக்க அதிகாரவர்க்கம், ஸ்திரமான அரசாங்கம், குறைந்த கூலிகள் மற்றும் கல்வியறிவு பெற்றுள்ள ஊழியர் படை என்பன ஓரளவுக்குக் காரணமாக இருந்து வந்துள்ளன. மேலும், இலங்கை பல்வேறு சர்வதேச நிறுவனங்களில் அல்லது ஒப்பந்தங்களில் ஓர் உறுப்பு நாடாக இருந்து வருகின்றது. இதனால், இலங்கை, முதலீட்டாளர் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கக் கூடியதாக உள்ளது.

ஏற்றுமதி முறைப்படுத்தும் வலயத்தின் சமூகத் தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்கென, இந்த ஆய்வு, பின்வரும் விடயங்களைக் கவனத்தில் எடுத்துள்ளது. அவை மகளிர் ஊழியம், தொழிற் சங்கங்கள், கொடுப்பனவுகளும் சமூகப் பாதுகாப்பும், இந்த வலயங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலைசெய்து, வாழ்ந்து வரும் பொதுவான சூழ்நிலை கள் என்பனவாகும். ஏ.மு. வலயங்களின் தொழிலாளர்களில் பெரும்பாலானவர்கள் மகளிராக இருந்து வருகின்றனர் என்ற உண்மையை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இங்கு வேலை செய்யும் மகளிர் இளவயதுப் பிரிவினராகவும், திருமணமாகாதவர்களாகவும், வேலை அனுபவம் அற்றவர்களாகவும் இருந்து வருகின்றனர். கிராமப் பகுதிகளைச் சேர்ந்த இவர்கள், கைத்தொழில் துறையிலான தமது வேலைவாய்ப்பு தற்காலிகமானது என்று கருதிக் கொள்கின்றனர்.

இந்த வலயங்களில் தொழில் சங்க நடவடிக்கைகளுக்கு இடமளிக்கப் படாதிருந்தபோதிலும், ஓரிரு வேலை நிறுத்தங்களையும் மிக அரிதாக அவதானிக்க முடிகின்றது. வழமையாக இத்தகைய வேலை நிறுத்தங்கள் உடனடியாகவும் தாக்கமான முறையிலும் முடித்து வைக்கப்படுகின்றன. தொழில் முயற்சிகளுக்கு இடையிலான தகராறுகளைத்தீர்த்து வைக்கும் நடைமுறைகள் "கூட்டு ஆலோசனைக் கவுன்சில்கள்" என்ற பெயரில் அங்கு காணப்படுகின்றன. இந்தக் கவுன்சில்கள் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே கருத்துப் பரிமாற்றத்தை எடுத்து வருவதற்கு உதவி புரிகின்றன. எனினும் அவற்றை தொழிற்சங்கங்களுக்கான பதிலீடுகளாக எந்த வகையிலும் கருத முடியாதுள்ளது.

வேறு பல நாடுகளுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது இலங்கையில் ஊழியம் இன்னமும் மலிவானதாகவே இருந்து வருகின்றது. இங்கு செலுத்தப் பட்டுவரும் வேதனங்கள் சர்வதேச ரீதியில் போட்டித்தன்மை வாய்ந்தனவாக இருந்து வருகின்றன. அரசாங்கத்தின் பல்வேறு ஊக்குவிப்புத் திட்டங்கள் மற்றும் முதலாளிகளின் சுய விருப்பிலான உடன்படிக்கைகள் என்பன காரணமாக, ஏ.மு.வலயங்களைச் சேர்ந்த பெருமளவு தொழிலாளர்கள், முதலீட்டுச்சபை அந்தஸ்தினை பெற்றிருக்காத ஏனைய தொழில் முயற்சிகள் செலுத்திவரும் வேதனங்களிலும் பார்க்க இரட்டிப்பான வேதனங்களைப் பெற்று வருகின்றார்கள். ஏ.மு. வலயங்கள் தமது ஊழியர் படையினருக்கு கணிசமான அளவில் பணத்தினை வழங்கி வருவதுடன் அதன் காரணமாக, இந்தப் பணம் நுகர்வுச் செலவுகளுக்கு செலுத்தப்பட்டுவிடும் என்பதே இதன் பொருளாகும். இலங்கையில் அனைத்து வேலை கொள்வோரும் ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கும் பங்களிப்புக் களைச் செலுத்த வேண்டியவர்களாக இருந்து வருகின்றார்கள். ஏ.மு. வலயங்களின் தொழில்வாய்ப்புக் களுக்கும் கூட இது பொருந்தும்.

முதலீட்டுச்சபை அந்தஸ்தினை பெற்றிராத தொழில் முயற்சிகளிலும் பார்க்க, இந்த அந்தஸ்தினைப் பெற்றிருக் கும் தொழில் முயற்சிகளில் தொழில்நிலை மைகள், பெரும்பாலான சந்தர்ப்பங் களில், சிறந்தவையாக இருந்து வருகின்றன. இலங்கையின் தொழில் சட்டங்கள் உயர்ந்த தரம் வாய்ந்தவையாக இருந்து வருவதுடன், ஏ.மு.வலயங் களிலும் கூட அவை செல்லுபடியாகக் கூடியவையாக உள்ளன. இதுதவிர, பல்வேறு பிரிவுகளிலும் சம்பளங்களை அதிகரிப்பதற்கான அல்லது தேனீர், உணவுகள் போன்ற வேறு வசதிகளை அறிமுகம் செய்து வைப்பதற்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களையும் அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. வேலை நிலைமைகளைப் பொறுத்தவரையில், இந்த ஆய்வுக்குழு விஜயம் செய்த ஒரு சில தொழில் முயற்சிகளை "மிகச் சிறந்தவை" என வகைப்படுத்த முடியும். குறைந்த நிலைமையில் இருந்த தொழில் முயற்சிகளும் கூட ஆகக்குறைந்தது "நல்லவை அல்லது ஏற்றுக்கொள்ளத் தக்கவை" என்ற தராதரத்துக்குள் வரக்கூடியவையாக இருந்தன.

ஏ.மு.வலயங்களின் மிக மோச மான தாக்கங்களை இந்த வலயங்களுக்கு

( 33 பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரியாவில் ஒழுங்குவிதி தளர்ப்பும் வங்கிகளின் செயற்பாடும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அடல்பஸ் ஜே. டோபி

இந்த ஸ்தானப்படுத்தல் முறை வங்கித்தொழில் துறைக்குள் இயங்கி வரும் வங்கிகளின் செயல்திறன் மற்றும் தனித்துவமான ஆற்றல்கள் என்பன தொடர்பான விரிவான அதிகாரபூர்வ மான ஒப்பீட்டுப் பகுப்பாய்வொன் றினை முன்வைக்கின்றது என இந்த தொகுப்பின் பிரசுரிப்பாளர்கள் கூறுக ன்றனர். இந்தப் பகுப்பாய்வின் நோக்கம் நைஜீரியாவில் இயங்கிவரும் வங்கிகளின் நிதிசார் குணாம்சங்கள் தொடர்பாக சில விளக்கங்களைப் பெற்றுக் கொள் வதாகும். இந்தப் பகுப்பாய்வின் போது பயன்படுத்தப்பட்ட சுட்டெண்கள், நைஜீரியாவின் வர்த்தக மற்றும் வணிக வங்கிகளின் செயல்திறனை நிர்ணயம் செய்யும் பிரதான நிர்ணய காரணிகள் என கருதப்பட்டு வருபவையாகும். பொதுவாக நான்கு அளவீடுகள் தொடர் பாக – அதாவது மூலதனம், வைப்புக் கள், ஆதாயங்கள் மற்றும் மொத்த சொத்துக்கள் என்பன தொடர்பாக – உறுதியான தரவுகள் வழங்கப்படு கின்றன. மொத்தச் சம்பாத்தியங்களி லிருந்து (பெறுமானத் தேய்வு மற்றும் ஐயக்கடன்களுக்கான ஒதுக்கீடு என்பன தவிர்ந்த) ஏனைய செலவுகளைக் கழித்து வருவதே ஆதாயமாக கருதப்படுகின் றது.

ஒவ்வொரு நிறுவனத்தினதும் கணக்கீட்டுக் கொள்கையில் காணப் படும் வேறுபாடுகளை குறைந்த மட்டத் தில் வைத்திருப்பதே இதன் நோக்க மாகும். தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள்/ மொத்த வைப்புக்கள், மூலதனம்/மொத்த வைப்புக்கள், மொத் தக் கடன்கள்/ மொத்த சொத்துக்கள், மூலதனம்/மொத்த வைப்புக்கள், மொத் தக் கடன்கள்/ மொத்த சொத்துக்கள், மொத்தச் செலவுகள்/மொத்தச் சம்பாத் தியங்கள், ஆதாயங்கள்/ மூலதனம், செலுத்தப்பட்ட வட்டி/ வைப்புக்கள், சம்பாதித்த வட்டி/மொத்தக் கடன்கள், அறவிட முடியா கடன்கள், கடன்கள் என்பவற்றுக்கான ஒதுக்கு/மொத் தக் கடன்கள் போன்ற விகிதாசாரங் களின் அடிப்படையிலேயே ஏனைய சுட்டெண்கள் முன்வைக்கப்படுகின்றன. ஒவ்வொரு சுட்டெண்ணிலும் அவ்வங்கி கள் இறங்கு வரிசையின்படி வரிசைப் படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு வங்கி யின் பனிரெண்டு சுட்டெண்கள் ஒவ் வொன்றின் அடிப்படையிலும் புள்ளிகள் வழங்கப்படுகின்றன. உதாரணமாக, வரிசையில் 17 வங்கிகள் இருப்பதாகக் கருதப்பட்டால் முதல்வங்கி 17 புள்ளி களைப் பெற்றுக்கொள்கின்றது. அதே வேளையில், 10வது இடத்திலுள்ள வங்கி 8 புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதுடன், அதே சுட்டெண்ணில் 17 வது இடத்தில் உள்ள வங்கி ஒரு புள்ளியைப் பெறு கின்றது. குறிப்பிட்ட ஒரு வங்கி 12 சுட் டெண்களிலும் ஈட்டிக் கொள்ளும் மொத்தப் புள்ளியே கூட்டு மொத்தப் புள்ளியாக உள்ளது. இந்த ஸ்தானப் படுத்தல் முறையை உபயோகிப்பதில் சில வரையறைகள் இருந்து வருவதை யும் இந்த ஆய்வாளர்கள் அவதானித் துள்ளனர். முதலாவதாக, இந்த ஸ்தானப் படுத்தல் அனைத்து வங்கிகளுக்குமாக ஒரே தன்மையைக் கொண்ட இலாப உச்சப்படுத்தல் குறிக்கோள் ஒன்றினை மறைமுகமாக ஏற்றுக் கொள்கின்றது. எவ்வாறிருப்பினும், சில வங்கிகள் இலாப நோக்கிலும் பார்க்க, சனசமூக அபிவிருத்தி தொடர்பான தேவைகளில் பெருமளவுக்கு அக்கறை செலுத்தி வரமுடியும். கிராமிய வங்கித்தொழில் முறை செயற்படுத்தப்படுவதற்கு நீண்ட காலத்துக்கு முன்னரேயே, சில வங்கி கள், இலாபத் தன்மை குறைவாகக் காணப்படும் கிராமப் பிரதேசங்களில் தமது செயற்பாடுகளை ஆரம்பித் திருந்தன. இரண்டாவதாக, செயல் திறன் குறித்த அளவு ரீதியான நிதிசார் அளவீடுகளில் மட்டுமே இந்த ஸ்தானப் படுத்தல் முறை கவனம் செலுத்தி வருகின்றது. எனவே, சேவையின் தரம், சமூக பொறுப்புணர்வு போன்ற விடயங் களில் பல்வேறு வங்கிகள் காட்டிவரும் அணுகுமுறை வேறுபாடுகளை அளவிடு வது சாத்தியமில்லாமல் போய்விடு கின்றது. கடன்களின் துறைவாரியான பங்கீடு தொடர்பான ஒப்பீடுகளையும் இந்தப் பகுப்பாய்வு உள்ளடக்கியதாக இருந்தால் அது மிகுந்த பயன் உள்ள தாக இருந்திருக்கும் என்பதனை இந்த ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ள னர். இவை வங்கிகளின் சமூக கடப் பாட்டு உணர்வு மட்டத்தினை அறிந்து கொள்வதற்கும், தேசிய குறிக்கோள் களை எட்டுவதற்கு அவை அளித்து வரும் பங்களிப்பினைக் கண்டு கொள் வதற்கும் இந்த ஒப்பீடுகள் உதவ முடி யும். துரதிர்ஷ்டவசமாக, சம்பந்தப்பட்ட தரவுகள் போதியளவு இல்லாதிருப் பதும், கணக்கீட்டுக் கொள்கைகள் மற் றும் மாதிரி உருக்கள் என்பன ஒரே சீரான தன்மையை கொண்டவையாக இல்லாதிருப்பதனாலும் இத்தகைய ஒரு பகுப்பாய்வினை மேற்கொள்வது சாத் தியமற்றதாக இருந்து வருகின்றது. மூன்றாவதாக தரவுகள் வரையறுக்கப் பட்டவையாக இருந்து வருவதனால், குறிப்பிட்ட சில வருடங்கள் தொடர்பாக வங்கிகளுக்கிடையிலான பகுப்பாய் வொன்றினை மேற்கொள்வதும் கடின மான பணியாக இருந்து வருகின்றது. இறுதியாக, ஒவ்வொரு வங்கியினதும் கணக்கு முடிவுத் திகதிகள் தொடர்பாக பரந்த அளவிலான வேறுபாடுகள் காணப்படுகின்றன. சில வங்கிகளின் நிதியாண்டு மார்ச் மாதத்தில் முடிவடை யும் அதேவேளையில், வேறு சில வங்கிகளின் நிதியாண்டு டிசம்பர் மாதத் தில் முடிவடைகின்றது.

அடேகான்யே என்பவர் (1992) சமீபத்தில் நைஜீரிய வங்கிகளின் செயல் திறனை ஆய்வு செய்தார். பட்டியல்படுத் தப்பட்ட 12 காரணிகள் தொகுதிகளில் 5 காரணிகள் தொகுதிகள் நைஜீரியாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கி செயல்திறனை நிர்ணயம் செய்யும் முக்கியமான காரணிகளாக இருந்து வருகின்றன என பெரும்பாலான வங்கிகள் கருதின. போதிய மூலதனம், சொத்துக்களின் தரம், முகாமைத்திறன், கடன் தொகுப்பு, திரவத் தன்மை என்பனவே இந்த ஐந்து காரணிகளுமாகும். இதில் முக்கியத்துவத்தின் அடிப்படையில் திரவத்தன்மை மூன்றாவது ஸ்தானத்தைப் பெறுகிறது. நான்காவது ஸ்தானத்தில் சொத்துக்களின் தரம் இருந்து வருவதுடன் கடன் தொகுப்பு ஐந்தாவது ஸ்தானத்திலுள்ளது. தொடக்கத்தில் தொழில்நுட்ப பங்கேற்பு உடன்படிக்கைகள் இருந்து வந்தமை அல்லது இல்லாதிருந்தமை வங்கிகளின் செயல்திறனை நிர்ணயம் செய்வதில் ஒரு முக்கியமான காரணியாக இருந்து வந்துள்ளது. அடேகான்யே எம். டி. ஏ. மாதிரி உருவினைப் பயன்படுத்தி, முகாமைத்திறன், அபாய ஏது, திரவத்தன்மை, போதியளவு மூலதனம் என்பவற்றினை மிக முக்கியமான செயல்திறன் காரணிகளாக இனங்கண்டார். மூன்று வெவ்வேறு அளவுகோல்களின் கீழ் இந்தக் காரணிகள் தொடர்ச்சியாக முக்கியத்துவம் பெற்றிருந்தன. இதில் முகாமைத்திறன் முதன்மையானதாக இருந்து வந்தது. மேலும், அரசாங்க வங்கிகளிலிருந்து தனியார் வங்கிகளை வேறுபடுத்திக்காட்டிய ஒன்றிணைந்த காரணிகளாக முகாமைத்திறன், வங்கி அளவு, சொத்துக்களின் தரம் என்பன இருந்து வந்தன. குறிப்பாக அரசாங்க வங்கிகள் அளவில் பெரியவையாக இருந்து வந்ததுடன், அவற்றின் சொத்துக்கள் தரம் குறைந்தவையாக இருந்ததுடன், அவ்வங்கிகள் திறமை குன்றிய வங்கிகளாகவும் இருந்து வந்தன என்பதனை ஒரு பகுப்பாய்வு எடுத்துக் காட்டியது. அமைப்பு ரீதியான சீராக்கல் இடம் பெற்றுவரும் காலத்தின் போது திரவத்தன்மை மற்றும் அபாய ஏது காரணிகள் என்பன, வெவ்வேறு தலைமை அலுவலக அமைவிடங்களைக் கொண்டிருந்த வங்கிகளை பிரித்துக் காட்டிய காரணிகளாக இருந்தன. லாகோஸுக்கு வெளியே தலைமை அலுவலகங்களைக் கொண்டிருந்த வங்கிகளிலும் பார்க்க லாகோஸில் தலைமை அலுவலகங்களை கொண்டிருந்த வங்கிகள் திரவத்தன்மையையும் அபாய ஏதுக்களை கொண்ட சொத்துக்களின் உயர் விகிதங்களையும் கொண்டிருந்தன.

( 31 பக்கத் தொடர்ச்சி)

வெளியில்-அதாவது, தொழிலாளர்கள் (குறிப்பாக பெண் தொழிலாளர்கள்) வாழ்ந்து வரும் சூழ்நிலையிலேயே-அவதானிக்க முடியும். ஏ.மு. வலயங்களை சூழவுள்ள பிரதேசங்களில் காணப்படும் வாழ்க்கைத் தரம் நிச்சயமாக சிறந்ததொன்றாகவே இருந்து வருகின்றது. ஏ.மு. வலயங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் வாழும் பிரதேசங்களில் சுகாதார நிலைமைகள் போதியளவில் இல்லாமை, முக்கியமாக போசாக்கு தொடர்பான அறிவு குறைவாக இருப்பதனால் போசாக்கின்மை, விடுதிகளுக்கான மிதமிஞ்சிய அளவிலான வாடகைகள், மதுப்பழக்கம், விபச்சாரம், வன்முறை மற்றும் கற்பழிப்பு என்பன நிலவி வருவதாகக் கருதப்படுகின்றது. இந்த அபாயங்கள் தவிர, ஏ.மு.வலயங்களைச் சுற்றியுள்ள விடுதிகளில் வாழ்ந்து வரும் பெண்கள் தமது எதிர்கால வாழ்க்கையில் கணிசமான அளவிலான இழப்புக்களை அனுபவிக்க நேரிடும் என்றும் கருதிக் கொள்ளலாம். இந்தப் பெண்கள்தமது குடும்பங்களின் தரித்திர நிலையை போக்கு வதற்காக இந்த வேலைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். அதே வேளையில், தமது குடும்பங்களின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு, வெளியில் வாழ்ந்துவரும் அவர்கள், தற்பொழுது நிலவிவரும் நெறிமுறைகளை மீறி வருவதுடன், தமது சாதாரண குடும்ப மற்றும் கிராமிய வாழ்க்கையுடன் மீண்டும் ஒருங்கிணைந்து கொள்வதில் பிரச்சினைகளை எதிர்நோக்க முடியும். மறுபுறத்தில், இந்த ஆய்வு, பல முன்னைய ஆய்வுகளில் எடுத்துக் காட்டப்பட்ட சில எதிர்மறையான கருத்துக்களை "ஆதாரமற்றவை" என நிரூபித்துக் காட்டுகின்றது. இந்த வலயங்களைச் சேர்ந்த பெண் தொழிலாளர்கள் "கிழிந்த, அழுக்கான ஆடைகளை அணிந்துள்ளனர்" அல்லது "போசாக்கின்மையினால் மிகவும் கடுமையான முறையில் பாதிக்கப்பட்டு வந்துள்ளனர்" என முன்னைய சில ஆய்வுகள் குறிப்பிட்டுள்ளன. இவை காலத்துக்கொவ்வாத மிகவும் பழைய தரவுகளை ஆதாரமாகக் கொண்டிருக்கக் கூடும் என இந்த ஆய்வு தெரிவிக்கின்றது. மேலும், உண்மையான யதார்த்த நிலையினை முன்னைய ஆய்வுகள் எந்த வகையிலும் பிரதிபலிக்கவில்லை என்றும் இவ்வாய்வு தெரிவிக்கின்றது.

எவ்வாறிருந்தபோதிலும், ஏ.மு. வலய ஊழியர்களின் வாழ்க்கை நிலைமைகளைப் பொறுத்தவரையில், அவற்றை விருத்தி செய்வதற்கு நிறைய வாய்ப்பு இருக்கின்றது. ஏ.மு. வலயங்களின் இந்த மிக மோசமான எதிர்மறை விளைவினைத் தவிர்ப்பதற்கு, தொடக்கத்திலேயே திட்டமிடலின்போது, ஊழியர்களுக்கும் தொழில்சார் நிபுணர்களுக்குமென ஒருவகையான "நகரப் பகுதியை" திட்டமிடுவது அவசியமாகும். இதன்படி, அவிசாவலை/கொழும்பு, கட்டான/கம்பஹா ஆகிய இடங்களில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள இரு புதிய கைத்தொழில் பேட்டைகளுடன் ஒரு பயிற்சி மையமும் வதிவிடப் பிரதேசமும் ஒருங்கிணைக்கப்படவுள்ளது. கைத்தொழில் பேட்டைகளை திட்டமிடுவதில் இத்தகைய ஒரு விரிவான பார்வையை மேற்கொள்வது ஆசியாவின் பெரும்பாலான கைத்தொழில் பேட்டைகளில் (உ-ம்: தாய்லாந்து) ஒரு வழமையான நடைமுறையாக இருந்து வருகின்றது. இந்தப் பின்னணியில், இலங்கை அரசாங்கம் இந்தக் குறைபாட்டை உணர்ந்துள்ளது என்றும், ஏ.மு.வலயங்களின் எதிர்மறையான தாக்கங்களை ஆகக்குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதற்கென பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வந்துள்ளது என்பதனையும் இந்த ஆய்வு குறிப்பிடுகின்றது. விசேஷ ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டு வருவதுடன், கிராமப் பகுதிகளில் உற்பத்தியை ஆரம்பிக்கும் ஏற்றுமதி அடிப்படையிலான தொழில் முயற்சிகளுக்கு முதலீட்டுச்சபை அந்தஸ்தினை அளிப்பதற்கான சாத்தியமும் இதற்கான உதாரணங்களாகும். இவ்விதம் ஆரம்பிக்கப்பட்டால், கிராமப்புற மக்கள் தமது குடும்பங்களை விட்டு பிரிந்து செல்லாமலேயே கைத்தொழில் தொழில் முயற்சிகளில் தொழில் புரிவதற்கு வாய்ப்புக்கிட்டும்.

ஏ.மு.வலயங்களுக்கூடாக கைத்தொழில்மயமாக்கலை எடுத்து வரும் இலங்கையின் கருதுகோளுக்குள் பல புதிய கருத்துக்களும் புதிய குறிக்கோள்களும் இருந்து வருகின்றன. மேலும், இலங்கையின் எதிர்காலப் பொருளாதார அபிவிருத்தி குறித்து உயர் அளவில் எதிர்பார்ப்புக்கள் நிலவி வருகின்றன. இது எதிர்மறையான குறைபாடுகள் நீக்கப்பட்ட நிலையில், ஏ.மு.வலயங்கள் இயங்குவதற்கு உசிதமான ஒரு சூழ்நிலையை எடுத்துவர முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அஞ்சல் திணைக்களத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு எண் : QD/57/News/93

"பிராணிகள் என்பவை, உணர்ச்சிகளோ ஆன்மாவோ அற்ற வெறும் ஜடங்கள் மட்டுமேயாகும் என்று தமது சிஷ்யர்களிடையேயும், தம்மைப் பின்பற்றுவோரிடையேயும் எடுத்துக் கூறி, அவர்களை அதனை ஏற்கச் செய்ய வைப்பதற்கு பல தத்துவஞானிகளும் மதத் தலைவர்களும் முயன்றனர். ஆனால், ஒரு பிராணியுடன் வாழ்ந்து வந்திருப்பவர் - அது ஒரு நாயாக, பறவையாக, சுண்டெலியாக இருந்தாலும் கூட சரியே - இக் கோட்பாடு ஒரு அபாண்டமான பொய் என்பதனையும், கொடுமை இழைப்பதனை நியாயப்படுத்துவதற்கு புனையப்பட்ட ஒரு கூற்று என்பதனையும் நன்கு அறிவார்."

ஐஸக் பஸேவிஸ் சிங்கர்

மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பிரிவு வெளியீடு

பிரதி விலை : ரூ. 10/-
வருட சந்தா : ரூ. 120/-

உரிய முறையில் "பொருளியல் நோக்கின்" பெயரைக் குறிப்பிட்டு, அதில் இடம்பெறும் கட்டுரைகளை மேற்கோள் காட்டவோ மீளப் பிரசுரிக்கவோ முடியும்.

யுனைற்ரெட் மேர்ச்சன்ஸ் லிமிற்ரெட், கொழும்பு 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org